**ශ්‍රී ලංකා ගුවන්විදුලි සංස්ථාව**

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**

**Sri Lanka Broadcasting Corporation**

# වාර්ෂික වාර්තාව සහ ගිණුම් ප්‍රකාශනය 2015

# ஆண்டறிக்கை மற்றும் கணக்குக் கூற்று 2015

# Annual Report & Statement of Accounts From 2015



# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

# ஆண்டறிக்கை

## மற்றும்

# கணக்குக் கூற்று

# 2015

**2015 ஜனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31 வரை**

கௌரவ பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்
பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
கொழும்பு

கௌரவ அமைச்சர் அவர்களுக்கு,

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14 (1)இன் பிரகாரம் 2015 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையை பின்வரும் ஆவணங்களுடன் சமர்ப்பிக்கின்றேன்.

01. 2015 ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் 2015 டிசம்பர் 31ஆம் திகதி வரை இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் நிறைவேற்றிய பணிகள் பற்றிய நிர்வாக அறி க்கை.
02. 2015 ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் 2015 டிசம்பர் 31ஆம் திகதி வரையான கணக்கீட்டு ஆண்டுக்கான கணக்குக் கூற்று.
03. 2015 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான இறுதிக் கணக்கு பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.
04. 2015ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றிய கூட்டுத்தாபனத்தின் கருத்துரை.

தங்கள் உண்மையுள்ள

நந்த முறுத்தெட்டுவேகம, சட்டத்தரணி
தலைவர்,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
கொழும்பு - 07

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | நிதி நிலைமை பற்றிய கூற்றுகள் | 09 |
| 2 | விபரமான வருமானக் கூற்று | 23 |
| 3. | சொத்துகளில் மாற்றம் பற்றிய கூற்று | 53 |
| 4. | காசுப்பாய்ச்சல் கூற்று | 81 |

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## நோக்கு

இலங்கையின் முதன்மை தொடர்பாடலாளராதல்

## பணி

நேயர்களின் வாழ்வில் பங்கேற்கும் பொருளாதார சமூக, கலாசார ஒழுக்க, கல்வி மற்றும் பொழுதுபோக்கு போன்ற பல்வேறு துறைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்வை ஒளிமயமாக்குவதற்காக அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ஒலிபரப்பு ஊடகத்துக்கு வழிகாட்டல்

## நோக்கம்

01. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஆகக்கூடிய நேயர்களைக் கொண்ட ஒலிபரப்பு அலைவரிசைகளைப் பராமரிக்கின்ற நிறுவனமாக செயற்படல்

02. பொறுப்புடன் சமநிலையில் தகவல்களை துரிதமாக வழங்குகின்ற இலங்கையின் ஊடகத்துறையில் முதல்வராக செயலாற்றல்.

03. உள்நாட்டு கலாசார முன்னேற்றத்துக்காக உயர் தரத்திலானவையும் ஆக்கபூர்வமானவையுமான நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்குதல்.

04. அறிவு, மனப்பாங்கு திறன்கள் ஆகியவை நிறைந்த சுய ஊக்கமுள்ள ஊழியர் குழாமை உருவாக்கத் தேவையான பயிற்சியளித்தல்.

05. தயாரிப்பு மற்றும் ஒலிபரப்பு தொழில்நுட்பத்தை தகுந்தவாறு இற்றைப்படுத்தி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நேயர்களுக்கு தெளிவான ஒலிபரப்பு சேவையை வழங்குதல்

06. அர்த்தபுஷ்டியான ஒலிபரப்பு ஊடக கலாசாரத்தை உருவாக்குவதற்காக முன்னோடி நிறுவனமொன்றாக செயற்படுதல்.

07. தேசிய ஒலிபரப்பு வலையமைப்பு என்ற வகையில் அரசாங்கக் கொள்கைகளையும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்படுத்தல் தொடர்பாக மக்களை விழிப்படையச் செய்வதற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குதல்.

08. சிறந்த நிதி நிர்வாகத்தையும் மனிதவள முகாமைத்துவத்தையும் பேணுதல்.

09. போட்டிகரச் சந்தையை உபாயத்திட்ட நடவடிக்கையின் மூலம் வெற்றி கொள்ளல்.

# நிர்வாக அறிக்கை 2015

# நிர்வாக அறிக்கை - 2015

## அறிமுகம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 1966ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1967ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05ஆம் திகதி தொடக்கம் செயற்படும் விதத்தில் தாபிக்கப்பட்டது.

2015 ஜனவரி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதி வரையான 12 மாத காலப்பகுதியை இவ்வறிக்கை உள்ளடக்குகின்றது.

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியினுள் (2015 ஜனவரி 08ஆம் திகதியிலிருந்து) பின்வரும் உறுப்பினர்கள் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக சேவையாற்றினர்.

1. திரு. நந்த முறுத்தெட்டுவேகம, சட்டத்தரணி - தலைவர்
2. திருமதி எஸ்.ஏ.சி. குலதிலக - திறைசேரி பிரதிநிதி
3. கலாநிதி (திருமதி) அருந்ததி ஸ்ரீரங்கநாதன் - கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
4. திரு. கித்சிறி சமரசிங்க - கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
5. திரு. டபிள்யூ. ஜயசிறி - கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
6. விஷாரத தீபிகா பிரியதர்ஷனி பீரிஸ் - கூட்டுத்தாபன சபை உறுப்பினர்

## நிர்வாக அறிக்கை

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் 2015ஆம் ஆண்டிலும் இலத்திரனியல் ஊடகத் துறையில் முன்னோடி நிறுவனமாக விளங்கியது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அலைவரிசைகளின் ஊடாக இந்தக் குறிக்கோளை அடைவதை நோக்கி கூட்டுத்தாபனம் செயற்பட்டது. இவ்வாண்டில் மக்களின் ஊடகம் என்ற வகையில் அறிவு, புரிந்துணர்வு மற்றும் இரசனை ஆகிய துறைகளில் நேயர்களின் அடைவை விஸ்தரிப்பதிலும் மக்களுக்கான சேவையை வழங்குவதிலும் முதன்மையான பங்கினை அது வகித்தது.

2015ஆம் ஆண்டில் இ.ஒ.கூ. தாபனத்தினால் ஒலிபரப்பப்பட்ட சேவைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது:

## சுயாதீன சேவை

தேசிய அலைவரிசையில் முதன்மையானதாக தேசிய சேவை திகழ்கின்றது. முன்னைய ஆண்டுகளைப் போன்று, தேசிய சேவை அதன் தனித்துவத்தைப் பேணுகின்ற அதேவேளை, சமூக-பொருளாதார, ஒழுக்க விழுமியம், கல்வி மற்றும் இலக்கியம்சார் அம்சங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது.

நற்பண்புள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் நோக்குடன், எல்லா சமயங்களையும் சார்ந்த சமய நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டன. தம்ம சொற்பொழிவு, “தம்ம சிந்தன,” தம்ம கலந்துரையாடல், “கிதுரச விந்தன” **Christian half hour, synagogue** மற்றும் “இல்முல் இஸ்லாம்” ஆகியவை அந்நிகழ்ச்சிகளில் சிலவாகும்.

உடனுக்குடன் அரசியல், சமூக மற்றும் கலாசார அபிவிருத்திகள் பற்றிய செய்திகளை எமது நேயர்களுக்கு வழங்குவதற்காக பல செய்தி நிகழ்ச்சிகளும் “சுபாரதி” “புவத் அட்டுவவ” “ப்றவுறுத்தி பசுபிம” ஆகிய சமகால விவகாரங்கள் பற்றிய நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்பட்டு அவர்களின் அறிவையும் புரிந்துணர்வையும் மேம்படுத்துவதற்கு வழிவகுத்தன.

தேசிய சேவையின் ஊடாக பெண்களின் அறிவையும் புரிந்துணர்வையும் விரிவாக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் திங்கள் முதல் வெள்ளி வரையான ஒவ்வொரு வார நாளிலும் மு.ப. 10.00 மணியிலிருந்து மு.ப. 11.00 மணிவரை பிரத்தியேகமாக பெண்களுக்கு ஒதுக்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட துறைகளில் உள்ள நிபுணர்கள் மற்றும் வள ஆளணியினர்களின் பங்கேற்புடன் பெண்கள் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்த வகுதியின் கீழ் வரும் நிகழ்ச்சிகளுக்கு உதாரணமாக “இசிவர அசப்புவ” “சுவசெத” “சந்தமின” “ஹெல பியும” “நெண சரண” ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

கமத்தொழில் மற்றும் அதன் அபிவிருத்தி பற்றிய அறிவூட்டும் நிகழ்ச்சிகளில் “கெவத்த மற்றும் “சரபூமி ஆகியவை அடங்கும். கமத்தொழில் பற்றிய அறிவூட்டல் மாலை நேர சேவை ஊடாக நேரடியாக வழங்கப்பட்டது.

நற்பண்புள்ள, ஒழுக்கமும் அறிவும் மிக்க சிறுவர் சந்ததியை உருவாக்குதல் தனது தேசியப் பொறுப்பாகும் எனக் கருதும் தேசிய சேவை தேசத்தின் உயிர்நாடியாகிய சிறுவர்களுக்காக 2015ஆம் ஆண்டிலும் பல விசேட நிகழ்ச்சிகளை சிறுவர்களுக்காக ஒலிபரப்பியது. ரடகஸ் மஹிம குவனின் நுவனட விதுல லமா லோகய போசத் லமா லபடியோ கிதுனு லமா ஹமுவ சமனல லணந்த குவன் தக்சலாவ மே அபே பாசலய் ஆகிய நிகழ்ச்சிகள் தேசிய சேவையில் ஒலிபரப்பப்படுகின்றன.

நேயர்களின் இரசனைக்காக குவன் விதுலி ரங்க மண்டல மற்றும் மஹாவம்ச போன்ற வானொலி நாடகங்களும் பன்சிலுகே ஹொராவ நூர்த்தி கீ நாடகம் கீ சேவக சங்ரஹய மற்றும் லலித கலாலே போன்ற இசை நிகழ்ச்சிகளை உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவை ஒலிபரப்பு உலகில் அது நுழைந்த காலம் தொட்டு அதன் நேயர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உயர் தரத்திலான நிகழ்ச்சிகளை வழங்குவதற்கு முதன்மை அளித்ததுடன் இந்தக் கொள்கை 2015ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டது.

## கல்விச் சேவை

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, 2015ஆம் ஆண்டிலும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடாத்திய தேசிய மட்டத்திலான போட்டிப் பரீட்சைகளுக்கான துணை நிகழ்ச்சிகளின் தொடர் ஒலிபரப்பப்பட்டது. ஆற்றல் மிக்க ஆசிரியர்களின் பங்கேற்புடன், க.பொ.த (சாதாரண தர மற்றும் உயர்தர) பரீட்சைகளின் முக்கியமாக பாடங்களில் மாணவர்களுக்கு சிரமமாக உள்ள விடயப் பரப்புகள் சம்பந்தப்பட்ட பாடங்களின் பேராசிரியர்கள் மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களின் உள்ளீடுகளுடன் கலந்துரையாடப்பட்டன.

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர மற்றும் உயர் தரப்) பரீட்சைகள் மற்றும் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை போன்ற பிரதான பொதுப் பரீட்சைகளுக்கு முன்னர், நேயர்கள் நேரடியாக தொலைபேசியில் தொடர்புகொண்டு பரீட்சை தொடர்பான தங்கள் வினாக்களைக் கேட்கக்கூடிய நேரலை நிகழ்ச்சிகள் பரீட்சைகள் உதவி ஆணையாளர்களின் பங்கேற்புடன் 2015ஆம் ஆண்டிலும் ஒலிபரப்புச்செய்யப்பட்டன.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களுக்குப் பயிற்சியளித்து அறிமுகப்படுத்துவதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சிகளும் ஒரு விசேட கருத்தரங்கும் அந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக தினமின பத்திரிகையின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டன.

பரீட்சைகளை குறிக்கோளாகக் கொண்ட நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக சரிஹத்யயென் ஜீவிதய ஜயகமு மற்றும் தமிழில் பேசுவோம் (Let’s Speak in Tamil) போன்ற நிகழ்ச்சிகள் சிறுவர்களுக்காகவும் வயது வந்தவர்களுக்காகவும் ஒலிபரப்புச்செய்யப்பட்டன.

## வர்த்தக சேவை

வர்த்தக சேவை அதன் தற்போதுள்ள நிகழ்ச்சிகளை மேம்படுத்தி அவற்றின் நோக்கெல்லையை விரிவாக்கம் செய்து கல்வி, அரசியல் மற்றும் வரலாறு பற்றிய நேயர்களின் அறிவை மேம்படுத்துவதற்காக பல புத்தாக்க நிகழ்ச்சிகளை வழங்கியது.

வானொலி ஒலிபரப்பின் புதிய போக்கினை பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகள் சரபிரபாகிர ரேடியோ கொழும்பு, கிட்னி நோயைத் தவிர்த்தல் பற்றிய நிகழ்ச்சி, மற்றும் போதைப் பொருட்கள் அற்ற ஒரு நாடு ஆகியனவாகும்.

## சிற்றி எப் எம் சேவை

நாட்டின் இளம் நேயர்களைக் கவர்வதற்காக வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சிகளைக் இ.ஒ.கூ.தா.வின் 24 மணி நேர ஒலிபரப்பு சேவை சிற்றி எப் எம் சேவையாகும்.

கடந்த ஆண்டைப் போன்று, 2015ஆம் ஆண்டிலும் இளைஞர்களுக்காக நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட்டன. புலம்பெயர்ந்த இலங்கை மக்களை இலங்கையில் உள்ள தமது உறவுகளுடன் தொடர்புபடுத்தும் மத்திய கிழக்கு சேவை 2015 ஆம் ஆண்டில் வாரத்தின் 5 நாட்களிலும் ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

சிற்றி எப் எம் சேவையின் மல் சமனலு நிகழ்ச்சி சிறுவர்களிடையே சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்கள் பற்றி அறிவூட்டுவதல் மற்றும் பொதுவாக சிறந்த நடத்தைகளைக்கொண்ட சிறுவர் சமுதாயத்தை உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளிட்ட அறிவை மேம்படுத்துவதற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்டது. சமகால அலுவல்கள் பற்றிய சீத்தல ஈத்தல நிகழ்ச்சியில் காலத்துக்கு உகந்த தலையங்கத்தில் நேயர்கள் நேரடியாகக் கலந்துகொள்கின்றனர். பத்திரிகை கட்டுரைகளையும் சிறப்புக் கட்டுரைகளையும் பற்றி விமர்சன ரீதியாக கலந்துரையாடப்படும் பத்தரே விஸ்தரே நிகழ்ச்சி எமது நேயர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. சிற்றி எப் எம் வழங்கும் பிரபல்யமான இசை நிகழ்ச்சிகள் ஹெடகார வசந்தய இ சதுட்டு திகந்தய மற்றும் ஹித மிதுரு சுலங்க ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். அதீதயென் தவசக் என்னும் நிகழ்ச்சி ஒலிபரப்பாகும் தினம் தொடர்பான கடந்த கால மைல்கல்லாக அமைந்த நிகழ்ச்சி மீது கவனம் செலுத்துகின்றது.

குறிப்பிட்ட வாரத்தில் அரசியல் துறையில் முக்கியமான நிகழ்ச்சிகள் மீது கவனம் செலுத்தும் வாராந்த நிகழ்ச்சியான அகுண அரசியலில் மிகுந்த ஆர்வம் உடைய நேயர்களிடையே மிகவும் பிரபல்யமான ஒரு

நிகழ்ச்சியாகும்.

ஆராதன் ஸ்வர தெஹன எனப்படும் பல வருடங்களாக ஒலிபரப்பாகும் மரபு தழுவிய பாடல் கலை நிகழ்ச்சி 2015ஆம் ஆண்டிலும் தொடர்ந்து ஒலிபரப்பப்பட்டதுடன் அது நேயர்களிடையே அமோக வரவேற்பைப் பெற்றது.

ஆற்றல் மிக்க புதிய கலைஞர்களை அறிமுகம் செய்து ஊக்குவித்து அவர்களின் ஆக்கங்களை நேயர்களிடையே பிரபல்யப்படுத்தும் நோக்குடன் மணித்தியாலத்துக்கு ஒரு முறை ஒரு புதிய பாடல் ஒலிபரப்பப்பட்டது. சிற்றி எம் எம் சேவைக்குக் கிடைத்த பெரும் எண்ணிக்கையான புதிய பாடல்களில், ஒலிபரப்புக்காக பொருத்தமானவை என விதந்துரைக்கப்பட்டவை மட்டுமே தெரிவுசெய்யப்பட்டன.

மேலும், எல்லா தேசிய முக்கியமான நிகழ்வுகள் மற்றும் சமய விழாக்கள் தொடர்பான நிகழ்ச்சிகளை 2015ஆம் ஆண்டிலும் அவை நடைபெற்ற காலத்தில் ஒலிபரப்புச் செய்வதற்கு சிற்றி எப் எம் நடவடிக்கை மேற்கொண்டது.

சிற்றி எப் எம் சேவையின் அறிவிப்பாளர்கள் இளைஞர் சமுதாயத்தினருக்காக உயர் தரத்திலான சங்கீத மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளை வழங்கி செம்மையானதும் தெளிவானதுமான மொழியில் உன்னிப்பாகக் கவனம் செலுத்தியதுடன் 2015ஆம் ஆண்டிலும் சிற்றி எப் எம் மிகுந்த பொறுப்புடன் எல்லா நிகழ்ச்சிகளையும் உவகையுடன் ஆரம்பித்து மிகுந்த விவேகத்துடனும் பொறுப்புடனும் நிறைவுசெய்து தனது கடைமையை நிறைவேற்றியது.

## தமிழ் தேசிய சேவை

தமிழ் சேவை தமிழ் பேசும் மக்களின் கலாசார முக்கியத்துவத்தைப் பேணி கலைசார்ந்த இரசனையை மேம்படுத்தும் அதேவேளை, சமூக, பொருளாதார, கலாசார மற்றும் கல்வி அபிவிருத்திகளுக்கு அமைவாக முன்னைய ஆண்டுகளைப் போன்றே 2015ஆம் ஆண்டிலும் கணிசமான பங்களிப்பை வழங்கியது.

தமிழ் இந்து சமுதாயத்தின் மிகவும் முக்கியமான கலாசார விழாவாகிய தைப்பொங்கல் தினத்தில் சரஸ்வதி பூசை உட்பட பல விசேட நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. தமிழ் சமூகம் இந்து சமயம், கத்தோலிக்க சமயம் மற்றும் கிறிஸ்தவ சமயம் ஆகிய பல்வேறு சமயங்களைப் பின்பற்றும் மக்களை உள்ளடக்கியதாகும். அத்தகைய மத நம்பிக்கைகளுடன் தொடர்பான சமய மற்றும் கலாசார விழாக்களின் முக்கியத்துவத்துக்கு இடமளிக்கும் தமிழ் நிகழ்ச்சிகள் அத்தகைய நிகழ்ச்சிகளின்போது அஞ்சல் செய்யப்பட்டன. ஹஜ் பெருநாளை முன்னிட்டும் விசேட நிகழ்ச்சி ஒன்று ஒலிபரப்பப்பட்டது.

மீளாய்வாண்டில் தேசிய, சர்வதேச மற்றும் சமூக முக்கியத்துவம் வாய்ந்த தினங்களை அடிப்படையாகக் கொண்ட விசேட நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டதுடன் அவற்றுடன் தொடர்பான தேசிய வைபவங்களுக்கு பரவலான ஊடக உள்ளடக்கம் வழங்கப்பட்டது. அத்தகைய நிகழ்ச்சிகளுக்கான உதாரணங்கள் ரட்ட வடா அவுருது சிங்கள இந்து புதுவருட நிகழ்ச்சி, சுதந்தின தின விழா, மே தின ஞாபகார்த்தம், தேசிய போதைப்பொருள் தவிர்ப்பு நிகழ்ச்சி, சர்வதேச சிறுவர் தின நிகழ்ச்சி மற்றும் சர்வதேச மகளிர் தினம் ஆகியவற்றை உள்ளடக்கும்.

## தென்றல் சேவை

தென்றல் சேவை தமிழ் நேயர்களுக்கான பொழுதுபோக்கை அடிப்படையாகக் கொண்ட வானொலி அலைவரிசையாகும். அதன் இலக்கு நேயர்கள் தமிழ் பேசும் இளைஞர்களாவர். தென்றல் சேவை 2015ஆம் ஆண்டு முழுவதும் தேசிய, சமய மற்றும் சமூக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைக் குறிக்கும் முகமாக விசேட நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது. அதற்கிணங்க, தைப்பொங்கல் தினம் மற்றும் சரஸ்வதி பூசை ஆகியவற்றுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டதுடன் முன்னைய ஆண்டுகளைப் போன்று முக்கியத்துவம் வாய்ந்த கலாசார விழாக்களை முன்னிட்டு விசேட நிகழ்ச்சிகள் இ.ஒ.கூ. தாபன வளாகத்தில் ஒழுங்குசெய்யப்பட்டன. சிங்கள இந்து புது வருடம், ரமழான் தினம், ஹஜ் பெருநாள், சுதந்திர தினம், சர்வதேச மகளிர் தினம் மற்றும் சர்வதேச சிறுவர் தினம் ஆகியவற்றை முன்னிட்டு விசேட நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

தமிழ் நேயர்களிடையே உடனடி வரவேற்பைப் பெற்ற ஒரு நிகழ்ச்சி அம்பிகா ஜுவலர்ஸ் அனுசரணையில் இடம்பெற்ற பாட்டுக்குப் பாட்டு பொழுதுபோக்கு இசை நிகழ்ச்சியாகும். எமரோல்ட் கலைக்கதம்பம் கூட பாடல்கள், நாடகங்கள் மற்றும் நகைச்சுவைகள் ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய

மிகச்சிறந்த வேடிக்கை வினோத நிகழ்ச்சியாகும். வளர்ந்து வரும் திறமைசாலிகளை இனம் காட்டிய பொன்மாலைப் பொழுது 2015ஆம் ஆண்டில் மாதம் ஒரு முறை ஒலிபரப்பப்பட்டது.

இலங்கை மின்சார சபையின் அனுசரணையில் நடைபெற்ற மின்சாரம் பற்றிய பாடசாலை மாணவர்களின் அறிவைப் பரிசோதிக்கும் அறிவொளி புதிர் நிகழ்ச்சி 2015ஆம் ஆண்டு முழுவதும் ஒலிபரப்பான மற்றுமொரு நிகழ்ச்சியாகும்.

நல்லூர் தேர்த் திருவிழாவின்போது, அதன் கலாசார முக்கியத்துவத்தை உணர்த்தும் பல நிகழ்ச்சிகளும் சூழ்நிலை அறிக்கைகளும் அஞ்சல் செய்யப்பட்டன.

அதேபோன்று, கத்தோலிக்க பக்தர்களால் பெரிதும் மதிக்கப்படுகின்ற மடு மற்றும் தலவில விழாக்களின்போது பல விசேட நிகழ்ச்சிகளும் சூழ்நிலை அறிக்கைகளும் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. இவ்வாண்டில் வாடிக்கையாளர்களின் அனுசரணையில் பல கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க நிகழ்ச்சிகளும் தென்றல் சேவையில் ஒலிபரப்புச் செய்யப்பட்டன.

## முஸ்லிம் சேவை

இலங்கை முஸ்லிம் சமுதாயத்துக்கு மட்டுமன்றி தென்னிந்திய சமுதாயத்துக்காகவும் 65 வருடங்களுக்கும் மேலாக அர்ப்பணிப்பு மிக்க சேவையை வழங்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவை முஸ்லிம் கலாசாரத்தையும் இஸ்லாத்தையும் போற்றிப் பாதுகாப்பதற்காக 2015 ஆம் ஆண்டில் பல நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது.

சிறுவர்கள் மற்றும் மகளிருக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள், இளைஞர்களுக்கான நிகழ்ச்சிகள் மற்றும் புதிர் நிகழ்ச்சிகள் போன்றவற்றையும் இந்த சேவை தயாரித்து ஒலிபரப்பியது.

மலாய் மற்றும் உருது மொழி பேசும் சமுதாயத்தினருக்காக ஒலிபரப்புச் செய்யப்பட்ட சஞ்சிகை நிகழ்ச்சி 80% அனுசரணை அளிக்கப்பட்ட நிகழ்ச்சியாகும்.

## கந்துரட்ட சேவை

அறிவு, பொழுதுபோக்கு மற்றும் புரிந்துணர்வை விருத்தி செய்யும் நோக்கில் நேயர்களின் இரசனைக்காக பல்வகை நிகழ்ச்சிகளின் தொகுப்பு 2015ஆம் ஆண்டில் கந்துரட்ட சேவையில் ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

இந்தச் சேவை அதிகாலையில் 5.25 மணிக்கு சமய நிகழ்ச்சிகளுடன் அதன் நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்ய ஆரம்பிக்கின்றது. அதன் நிகழ்ச்சிகள் காலீன புவத் - செய்தி மற்றும் சமகால விவகாரங்கள், மலையகச் செய்திகள், வைத்தியவரயெக் கதாகரய் - மேற்கத்திய மருத்துவ நிகழ்ச்சி, வெத மெதுர ஆயுர்வேத நிகழ்ச்சி, பசன் மெந்துர மகளிர் தொடர்பான நிகழ்ச்சி, அஸ்வென்ன, ரச ஜனனி, குருஷி சாரிக்கா மற்றும் கஹவனு துரு போன்ற கமத்தொழில் பற்றிய வர்த்தக நிகழ்ச்சிகள், தம்ம தேசனா மற்றும் சரள கீ, மியசி ரசங்க, நொமியன கீ, தாருண்யயே ரித்மய, கலா கசல, ஒப வெனுவென் ஹத ரெந்தி கீ, கோமள ரேகா, செந்த மிஹிர மற்றும் சுவர்ண சத்சர தெஹென போன்ற பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கும். மேலும், தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாய இளைஞர்களுக்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட நேயர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கை மேம்படுத்தும் அசன்னன் சமங்க நிகழ்ச்சியும் இந்தச் சேவையில் அஞ்சல் செய்யப்பட்டது.

## ருகுணு சேவை

2015ஆம் ஆண்டில், விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் சமூகத்தினரிடையே அறிவூட்டுவதற்காக கமத்தொழில் திணைக்களம் மற்றும் ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் பல கமத்தொழில் வானொலி நிகழ்ச்சிகளை ருகுணு சேவை தயாரித்தது.

வள ஆளணியினரின் பங்கேற்புடன் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு மக்களுக்கு உதவும் மருத்துவ கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் ஒலிபரப்புச் செய்யப்பட்டன.

இந்தச் சேவையினால் அஞ்சல் செய்யப்பட்ட சமய நிகழ்ச்சிகளில் நாளாந்த பிரித் பாராயணம், வெசாக்

காலத்தில் தொடர்ச்சியான விசேட தம்ம விளக்க உரை மற்றும் கடினா ரோப் (Katina robe) மாதத்தில் 40 தம்ம உரைகள் ஆகியவை அடங்கும். மேலும், பிரபல்யமான வணக்க தலங்களில் நடைபெறும் பெரஹர ஊர்வலங்கள் தொடர்பான நிகழ்ச்சிகளும் ஒலிபரப்புச் செய்யப்பட்டன.

சிங்கள இந்து புது வருட விசேட நிகழ்ச்சிகள், பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளின் நேரடி வருணனை, மணித்தியாலப் பாடல், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அனுசரணையில் இளைஞர்களின் குரல் ஆகியவை இவ்வாண்டில் இந்தச் சேவையில் ஒலிபரப்பான நிகழ்ச்சிகளாகும்.

## ஆங்கிலச் சேவை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னோடி முதலாவது வானொலி அலைவரிசையாகிய ஆங்கில சேவையில் பெரும்பாலான நேரங்களில் அதன் உன்னதமான இசை நிகழ்ச்சிகள் இடம்பெறுவதுடன் கடந்த கால பாடல்கள் மற்றும் நாடகங்களை உள்ளடக்கிய பரந்த அளவிலான நிகழ்ச்சிகளின் தொகுப்பைக் கொண்டுள்ளது. நாட்டின் ஆங்கில நேயர்கள் பெரும்பாலும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை விரும்புவதால், இந்த அலைவரிசை அந்தத் தேவையை நிறைவேற்றும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2015ஆம் ஆண்டில் நடப்பு விவகாரங்கள் மற்றும் செய்தி நிகழ்ச்சிகளுடன் சிறுவர்களுக்காகவும் மகளிருக்காகவும் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட நிகழச்சிகளையும் அது தயாரித்தது. பிரதான சமய மற்றும் தேசிய விழாக்கள் பற்றிய நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கும் ஆங்கில சேவை ஒழுங்குகளை மேற்கொண்டது. பாப்பரசரின் விஜயம் தொடர்பாக ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகள் விசேடமாகக் குறிப்பிடத்தக்கவையாகும். சம்பந்தப்பட்ட துறைகளில் அதிகாரபூர்வ அறிவு மிக்க வள ஆளணியினரின் பங்கேற்புடன் அப்போதைக்கான தலைப்பு சார்ந்த நிகழ்ச்சிகளும் தயாரிக்கப்பட்டன. சர்வதேச ரீதியாக ஒதுக்கப்பட்ட தினங்களின் முக்கியத்துவத்துவத்தை உணர்த்தும் நிகழ்ச்சிகளும் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. சர்வதேச தொடர்புகளை விரிவாக்கம் செய்யும் தேசிய பொறுப்பினைத் தாங்கி வெளிநாடுகளின் விசேட தினங்களின் அடிப்படையிலான நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட தூதுவர்கள் மற்றும் தூதரகங்களின் உரிய அதிகாரிகளின் பங்கேற்புடன் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்புச் செய்யப்பட்டன.

## ரஜரட்ட சேவை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முதலாவது பிராந்திய சேவையாக 1979ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட ரஜரட்ட சேவை அதன் நேயர்களுக்காக அர்த்தபுஷ்டியானதும் இரசனை மிக்கதுமான நிகழ்ச்சிகளை வழங்கும் அதன் பாரம்பரியத்தை தொடர்ந்தும் மேற்கொண்டது. 2015ஆம் ஆண்டில், இந்தச் சேவை அதன் குறிக்கோள்களை அடைவதற்காக பல்வேறுபட்ட அரசியல், சமூக, கலாசார மற்றும் சமய நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச் செய்தது. 2015ஆம் ஆண்டின் பிறப்பைக் கொண்டாடும் நோக்கத்துடன் கலைஞர்களின் பங்கேற்புடன் ரஜரட்ட சேவையினால் தயாரிக்கப்பட்ட பொழுதுபோக்கு நிகழ்ச்சி வழங்கப்பட்டது. மேலும், பாடசாலை மாணவர்களின் கலா ரசனையை மேம்படுத்துவதற்காக கல்வி நிகழ்ச்சிகளும் அனுராதபுரம் அநகாரிக தர்மபால நிலையத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பெரஹர நிகழ்ச்சியும் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரின் அலுவலகத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்ட சிறுநீரக நோயைத் தவிர்த்தல் பற்றிய ஒரு நிகழ்ச்சியும் தயாரிக்கப்பட்டது.

## வயம்ப ஹண்ட

வடமேல் மாகாண உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி நேயர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சிகள் வயம்ப ஹண்ட வானொலியில் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. மேலும், வடக்கின் அபிவிருத்திக் கருத்திட்டங்கள், கேகாலை மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் கௌரவ சஜித் பிரேமதாச அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட 50,000 வீடமைப்புத் திட்டம் ஆகியனவும் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. ஒலிபரப்பான நிகழ்ச்சிகளில் சமய மற்றும் கமத்தொழில் நிகழ்ச்சிகளும் இலக்கிய நயம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய ஒலிபரப்புகளும் அடங்கும்.

## ரேடியோ தம்பான

தம்பான பிரதேசத்தை மையமாகக் கொண்ட இலங்கையின் பழங்குடி சமூகத்தை இலக்காகக் கொண்ட இலங்கையில் உள்ள ஒரேயொரு வானொலி அலைவரிசையாகிய ரேடியோ தம்பான எந்தவித வர்த்தக

அக்கறையும் இன்றி தொழிற்படுத்தப்படுகின்றது. ஒரு தேசியப் பொறுப்பாக பழங்குடி சமூகத்தின் தனித்துவம், கலை வடிவங்கள் மற்றும் மரபுகளைப் பாதுகாப்பதை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்க்கைப் பாங்கின் முக்கியத்துவத்துடன் தொடர்பான பல நிகழ்ச்சிகளை தம்பான ரேடியோ 2015ஆம் ஆண்டில் ஒலிபரப்பியது.

## பின்வரும் நிகழ்ச்சிகள் விசேட முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்:

- இலங்கையில் உள்ள மிகப்பழைய பழங்குடிகளில் ஒன்றான வேடர் சமூகத்தின் கலாசாரம் மற்றும் மொழி ஆகியவற்றை போற்றிப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் வன்னியல அத்தோவின் மொழியில் பேசுவோம் என்னும் தலைப்பிலான நிகழ்ச்சி ஒலிபரப்பு
- நச்சுப்பொருட்கள் அற்ற கமத்தொழிலை மக்கள் மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கும் நோக்குடன் நெல் மற்றும் ஏனைய பயிர்ச்செய்கையில் சேதன உரங்களின் பயன்பாட்டை கோடிட்டுக் காட்டும் விசேட நிகழ்ச்சி ஒலிபரப்பு.
- மஹாவலி வலயங்களில் விரைவாகப் பரவி வரும் நாற்பட்ட சிறுநீரக நோய் பற்றி விழிப்புணர்வூட்டும் விசேட கருத்திட்டம்.

  கண்டி வைத்தியசாலையில் பணிபுரியும் சிறுநீரகவியலாளர்கள் மற்றும் வைத்தியர்கள் வள ஆளணியினர்களாகப் பங்குபற்றிய நிகழ்ச்சி கிராந்துருக்கோட்டை சிறுநீரக நோய்ப் பிரிவின் ஒத்துழைப்புடன் ஒலிபரப்புச் செய்யப்பட்டது.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மஹியங்கணை ரஜ மஹா விகாரையின் பெரஹர மற்றும் மகாவலி விளையாட்டு விழா ஆகியவற்றின் ஊடக உள்ளடக்கம்.

2015ஆம் ஆண்டின் மற்றுமொரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி தம்பான கிராமத்தின் வானொலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச் செய்வதற்காக வேடர் பழங்குடிகளின் கலாசாரத்தோடு பிரத்தியேகமாகத் தொடர்புபட்ட பொருட்களைக் கொண்ட கலையகத்தைத் தாபித்தமையாகும்.

## இசைப்பிரிவு

குரல் பரிசோதனையின் பின்னர் தரப்படுத்தப்பட்ட கலைஞர்களின் சரள கீ நிகழ்ச்சி 2015ஆம் ஆண்டில் ஒலிபரப்பானது. கலைஞர்கள் விசேட தரம், **A** தரம், **B** என தரமிடப்பட்டு அவர்கள் தங்கள் நிகழ்ச்சிகளில் என்றுமே மறக்க முடியாத பல பாடல்களை இயற்றக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு புதன் கிழமையும் பி.ப. 7.00 மணி முதல் பி.ப. 7.30 மணி வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வாத்தியக் குழுவினால் வழங்கப்பட்ட இனிமையான இசை நிகழ்ச்சி மியுறுசர உள்நாட்டு இசைப் பிரியர்களின் மிகுந்த வரவேற்பைப் பெற்றதுடன் குரல் தேர்ச்சியில் சித்தியடைந்த கலைஞர்களால் பாடப்பட்ட ஓல்ட் நாடகம் கீ மற்றும் நூர்த்தி கீ ஆகியனவும் நேயர்களின் அபிமானத்தைப் பெற்றன. இசைப்பிரிவினால் தயாரிக்கப்பட்ட ஏனைய நிகழ்ச்சிகள் போயா தினங்களில் 12.00 மணி முதல் 12.45 மணிவரை ஒலிபரப்பாகும் ஸ்ரத்தன்ஹலி பொது கீ சரணிய, ஒவ்வொரு புதன் கிழமையும் பி.ப. 5.30 மணி முதல் பி.ப. 5.45 மணி வரை தேசிய சேவையில் ஒலிபரப்பாகும் தம்ம பதய வின் அடிப்படையிலான புதிய பாடல்களை உள்ளடக்கிய தம்ம பத பாடல் நிகழ்ச்சி பி.ப. 3.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை தேசிய சேவையில் ஒலிபரப்பாகும் பாரம்பரிய நாட்டார் இசை நிகழ்ச்சி, பி.ப. 3.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை வர்த்தக சேவையில் ஒலிபரப்பாகும் 50 மற்றும் 60ஆம் தசாப்தங்களின் கிராமபோன் மற்றும் திரைப்படப் பாடல்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பி.ப. 1.15 மணி முதல் பி.ப. 1.30 மணி வரை ஒலிபரப்பாகும் விருந்து நிகழ்ச்சி ஆகியவையாகும்.

இசைப்பிரிவின் ஏனைய வெற்றிகரமான தயாரிப்புகள் மரபுசார்ந்த வட இந்திய ராகதாரி இசையின் இசையரங்கு மற்றும் கருவிகளை உள்ளடக்கிய சரச ராவய என்னும் ஒரு நிகழ்ச்சி, விஷ்வய விந்தனீய பிரதிராவ மற்றும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட லலித கலாலய நுண்ணறிவுத் திறன் சார்ந்த நிகழ்ச்சி மற்றும் அவற்றை உருவாக்கிய கலைஞர்கள் பற்றிய தனிப்பட்ட தகவல்கள் ஆகியவையாகும்.

அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த ஊழியர்களின் பாடல் திறன்களைக் காட்டுவதற்கு வாய்ப்புகளை வழங்கிய சேவக சங்கமய நிகழ்ச்சி அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் ஒலிபரப்பப்பட்டது. இவ்வாண்டில், தமிழ் வாத்தியக் குழுவுக்கான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். பொலிஸ் திணைக்கள வாத்தியக்

குழு உறுப்பினர்களுக்கான குரல் தேர்வுகள் நடத்தப்பட்டு தெரிவுசெய்யப்பட்டவர்களின் பாடல்களை உள்ளடக்கிய இறுவட்டு வெளியிடப்பட்டது. ஒரு மாதத்துக்கு மும்முறை பார்வையாளர்களுக்காக நேரடி வாத்திய நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

## செய்தி மற்றும் சமகால விவகாரங்கள் பிரிவு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்திப் பிரிவு முன்னைய ஆண்டுகளைப் போலவே 2015ஆம் ஆண்டிலும் செம்மையானதும் பொறுப்புமிக்கதுமான செய்திகளை அறிக்கை செய்வதில் ஈடுபட்டிருந்தது.

2015 ஜனவரி 08ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் 2015 ஆகஸ்ட் 17ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தல் தொடர்பாகவும் நடைபெற்ற ஊர்வலங்கள், கூட்டங்கள் மற்றும் ஊடக அறிக்கைகளுக்கு இ.ஒ.கூட்டுத்தாபன செய்தி அறிக்கைகளில் பரவலான ஊடக உள்ளடக்கம் வழங்கப்பட்டதுடன் 2015ஆம் ஆண்டில் அந்த இரண்டு தேர்தல்களுக்கும் அதிகூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

புனித பாப்பரசரின் இலங்கை விஜயம் மற்றும் 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற ஏனைய முக்கியமான நிகழ்வுகள் பற்றிய விசேட செய்தி நிகழ்ச்சிகள் ஒலிபரப்புச் செய்யப்பட்டன.

## கலையக தொழிற்பாட்டுப் பிரிவு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் எல்லா நிகழ்ச்சிகளையும் ஒலிப்பதிவு செய்தல், தயாரித்தல் மற்றும் நேரடி ஒலிபரப்புச் செய்தல் ஆகியவற்றின் மூலம் முன்னைய ஆண்டுகளைப் போன்று 2015ஆம் ஆண்டிலும் இந்தப் பிரிவு கணிசமான பங்களிப்பை மேற்கொண்டதுடன் விளம்பரங்களைத் தயாரித்தல், கலையக செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நேரடி வர்ணனைகளை வழங்குதல் ஆகியனவும் இந்தப் பிரிவினால் கையாளப்பட்டன. அவசியமான தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்கு எல்லா கலையகங்களையும் தயார் செய்வதன் மூலம் தொடர்ச்சியானதும் தடங்கல் அற்றதுமான சேவையை வழங்குவதற்கு இது பங்களிப்புச் செய்தது.

## பயிற்சி மற்றும் வெளிநாட்டுத் தொடர்புகள் பிரிவு

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, 2015ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் உள்ளக மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளில் வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வளாகத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு காரணமாக, 2015ஆம் ஆண்டு முழுவதும் பயிற்சி நிறுவகத்தை அமைப்பதற்குப் பொருத்தமான இடம் கிடைக்கவில்லை. இருப்பினும், உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக குறைந்தளவு வசதிகள் மாத்திரமே கிடைத்தபோதிலும் அவை நடத்தப்பட்டன. அவை பின்வருமாறு:

1. கூட்டுத்தாபனத்தின் நிர்வாகப் பிரிவுப் பணியாளர்களுக்கான மாதாந்த அடிப்படைப் பயிற்சிச் செயலமர்வு.
2. பகுதி நேர விற்பனை ஊக்குவிப்பு உதவியாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சிச் செயலமர்வு
3. சம்பளங்களைத் தயார் செய்தல் பற்றிய கணனி நிகழ்ச்சியின் அறிமுகம். நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கான மூன்று நாள் செயலமர்வு.
4. சிங்கள அறிவிப்பாளர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வு
5. தமிழ் அறிவிப்பாளர்களுக்கான மொழிப்பயன்பாடு பற்றிய ஒரு நாள் செயலமர்வு.
6. நிதிப் பிரிவுக்கான அடிப்படை கணனிப் பயிற்சி (மாதாந்தம்)
7. ஒப்பந்த அடிப்படையில் சேவை புரியும் அறிவிப்பாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு
8. தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு (புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டோர்)
9. பிராந்திய ஊடகவியலாளர்கள் 70 பேருக்கான ஒரு நாள் செயலமர்வு

10. மத்திய மற்றும் உயர் மட்ட நிதி முகாமையாளர்கள் 70 பேருக்கான ஒரு நாள் செயலமர்வு

11. முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சி (புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள்)

அத்துடன், பல வெளியிடப் பயிற்சிகளும் ஒழுங்குபடுத்தப்பட்டன. அவை பின்வருமாறு:

1. கிழக்குப் பல்கலைக் கழக மாணவிகளுக்கான வானொலி ஊடகம் பற்றிய பயிற்சி 2015.06.01ஆம் திகதி நடத்தப்பட்டது.

2. சீன சர்வதேச வானொலியின் சிங்கள சேவையின் பிரதிப் பணிப்பாளரினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி

3. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வேண்டுதலின் பிரகாரம் பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சி

4. 9-11 வயது வரையான பாடசாலை மாணவர்களுக்கான முன்வைத்தல் கலை பற்றிய பயிற்சி நிகழ்ச்சி

5. ஸ்ரீ பாளி பல்கலைக் கழக பட்டதாரி மாணவர்களுக்கான வானொலி ஒலிபரப்புப் பயிற்சி

## செவிப்புல ஆராய்ச்சிப் பிரிவு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மத்திய அலைவரிசையைக் கொண்ட வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கை மற்றும் மத்திய அலைவரிசை ஒலிபரப்பை செவிமடுப்போரின் எண்ணிக்கை பற்றிய ஒரு ஆராய்ச்சி நடத்தப்பட்டது. சொல்லப்பட்ட ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகள் பின்வருமாறு:

1.1 மத்திய அலைவரிசையைக் கொண்ட வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கையும் மொத்தமாக வானொலி கேட்போரில் மத்திய அலைவரிசையைக் கேட்போரின் எண்ணிக்கையும் 21% ஆகும்.

1.2 பெரும்பாலான வானொலிகள் பண்பலைவரிசையைக் கொண்டிருந்தன. அவை 97.85% ஆகும்.

1.3 மத்திய அலைவரிசையைக் கொண்ட வானொலிப் பெட்டிகளை வைத்திருப்போரில் 30% இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகளை செவிமடுக்கின்றனர்.

- பெரும்பாலான நேயர்கள் பிரதான செய்தி அறிக்கைகளை செவிமடுக்கின்றனர்.
- இரண்டாவதாக பெரும்பான்மையானவர்கள் சமய நிகழ்ச்சிகளை செவிமடுக்கின்றனர்.

2. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் உள்நாட்டு அலைவரிசைகளின் ஒலியின் தெளிவின் தரம் பற்றிய மதிப்பீடொன்று 2015ஆம் ஆண்டில் நடத்தப்பட்டு அந்த அறிக்கை 2016 ஜனவரி 31ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. ஒலிபரப்பு தெளிவின்றி இருந்த பல இடங்கள் அடையாளம் காணப்பட்டன.

3. வானொலி நிகழ்ச்சிகளின் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் நிகழ்ச்சிகளின் மதிப்பீடு ஒன்று நடத்தப்பட்டது. மீளாய்வாண்டில், சிற்றி எப் எம், சிங்கள தேசிய சேவை, சிங்கள வர்த்தக சேவை ஆகிய நிகழ்ச்சிகளின் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. மேம்படுத்தப்படவேண்டிய பல அம்சங்கள் அடையாளம் காணப்பட்டன.

4. முக்கியமான நாட்களின் நிகழ்ச்சிகள் பற்றி நேயர்களுக்கு அறிவூட்டும் நோக்குடன், அத்தகைய நாட்கள் பற்றிய தகவல்கள் நிகழ்ச்சிப் பிரிவுக்கு வழங்கப்பட்டது.

5. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட பல்கலைக் கழக மற்றும் ஏனைய கல்விசார் நிறுவனங்களின் ஆய்வாளர்களுக்கு அவற்றை ஒரு பொது சேவையாகக் கருதி அவசியமான தகவல்கள் வழங்கப்பட்டன.

## ஒலிப்பதிவு நாடா மற்றும் வெளியீட்டுப் பிரிவு

2015ஆம் ஆண்டில் பின்வரும் ஒலிப்பதிவு நாடாக்களும் இறுவட்டுகளும் ஒலிப்பதிவு நாடா மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு விற்பனைக்காக வெளியிடப்பட்டன.

1. நில் ஹீன தூபத - கலாநிதி அஜந்தா ரணசிங்கவினால் எழுதப்பட்ட பாடல்களை உள்ளடக்கிய இறுவட்டு
2. உஜ்பட்டிபன்னோ - வண. மாதுளுவாவே சோபித தேரரின் சமய சொற்பொழிவுகளை உள்ளடக்கிய இறுவட்டு
3. மலக் உன் - வயலின் வாத்தியக் கலைஞர் களனி பெரேராவின் வாத்திய இசையை உள்ளடக்கிய இறுவட்டு
4. ஜோதிட லியு கீ - பாடகர் எச். ஆர். ஜோதிபாலவுக்காக கலாநிதி அஜந்தா ரணசிங்க எழுதிய பாடல்களை உள்ளடக்கிய இறுவட்டு

மேலும் சுங்க தலைமை அலுவலகத்திலும் ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்திலும் 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற தொழின்முயற்சியாளர்களின் கண்காட்சி, சொப்பிங் லங்கா கண்காட்சி, ஜாஎல குலசிங் பாடசாலைக் கண்காட்சி, நிர்மாணக் கண்காட்சி மற்றும் சர்வதேச புத்தகக் கண்காட்சி ஆகிய நிகழ்வுகளின்போதும் இறுவட்டுகள் விற்பனை செய்யப்பட்டன. அத்துடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நாடளாவிய ரீதியில் உள்ள விற்பனை முகவர்களின் வலையமைப்பு ஊடாகவும் கூட்டுத்தாபனத்தின் ஒலிப்பதிவு நாடாக்களும் இறுவட்டுகளும் வெளியீடுகளும் விற்பனை செய்யப்பட்டன.

சமூக வலைத்தளங்களைப் (முகப்புத்தகம் – slbc presentation- like page) - பயன்படுத்தி இணையத் தளத்தின் ஊடாக ஒரு பிரசார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் 2015ஆம் ஆண்டில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்ச்சி மின்னஞ்சல் முகவரியை (slbcgeepresentation@gmail.com) அறிமுகப்படுத்தியமையாகும். இவ்வாண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்பட்ட இறுவட்டுகள் மற்றும் வெளியீடுகளின் விபரங்களை உள்ளடக்கிய கையேடுகளும் அச்சிடப்பட்டு வினியோகிக்கப்பட்டன.

## சந்தைப்படுத்தல் பிரிவு

2015ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஐ சி சி உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் உத்தியோகபூர்வ ஒலிபரப்பாளராக செயற்பட்டு அதன் ஊடாக கணிசமான அளவு வருமானத்தை ஈட்டியது.

புதிய விற்பனை நிறைவேற்றுனர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் புதிய சந்தைப்படுத்தல் உத்திகளை அறிமுகப்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக கூட்டுத்தாபனத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை சந்தைப்படுத்தல் பிரிவு மேற்கொண்டது.

தேசிய, மத மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளுடன் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் உத்தியோகபூர்வ வானொலியாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் செயற்பட்டு அத்தகைய நிகழ்ச்சிகளின் ஊடாக வருமானத்தை ஈட்டக்கூடியதாக இருந்தது. புத்த ரஷ்மி வெசாக் வலையம், போயா தின நிகழ்ச்சிகள், இரத்தினபுரி சமன் தேவாலய பெரஹரா மற்றும் ரமழான் பெருநாள் ஆகியவை அத்தகைய நிகழ்ச்சிகளுக்கான சில உதாரணங்களாகும்.

பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்ட விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சிகள் 2015ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்துக்கு இலாபகரமான வருமான மூலங்களாகத் திகழ்ந்தன.

## பொறியியல் பிரிவு

2015ஆம் ஆண்டில் ரூபா 16.6 மில்லியன் செலவில் கதிர்காம ஒலிபரப்பு நிலையம் தரமுயர்த்தப்பட்டது. தரமுயர்த்தல் பின்வரும் வேலைகளை உள்ளடக்கியிருந்தது.

- 5 கிலோ வாற்று ஒலிபரப்புக் கருவியை பதிலீடு செய்து 10 கிலோ வாற்று இயலளவு ஒலிபரப்புக் கருவியைப் பொருத்துதல்
- புதிய 07 இணைப்புகளைப் பொருத்துதல்
- புதிய மின்பிறப்பாக்கியைக் கொள்வனவு செய்து பொருத்துதல்
- புதிய அன்டென்னா முறைமையைப் பொருத்துதல்
- புதிய **UPS** முறைமையைப் பொருத்துதல்

# நிதி நிலைமை பற்றிய கூற்றுகள்

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

நிதி நிலைமை பற்றிய கூற்று

(எல்லா தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன)

| | குறிப்பு | டிசம்பர் 31<br>2015 | டிசம்பர் 31<br>2014 |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துகள்** | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 9 | 2,460,480,855 | 2,735,137,013 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் | | (409,678) | 945,105 |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை | 10 | 254,571,510 | 142,180,474 |
| மூலதனம் | 11 | 1,000,000 | 1,000,000 |
| | | **2,715,642,688** | **2,879,262,593** |
| **நடைமுறைச் சொத்துகள்** | | | |
| இருப்புகள் | | 27,028,803 | 31,862,620 |
| வணிக மற்றும் ஏனைய வருமதி | 12 | 225,841,248 | 223,458,698 |
| வழிச்சரக்கு | 13 | 4,852,069 | 5,294,505 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 14 | 260,851,452 | 101,096,412 |
| | | **518,573,572** | **361,712,236** |
| **மொத்த சொத்துகள்** | | **3,234,216,259** | **3,240,974,829** |
| **சொத்துகளும் பொறுப்புகளும்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | | |
| அரச மூலதனம் | | 307,386,085 | 307,386,085 |
| ஒதுக்கங்களின் மீள்மதிப்பீடு | | 14,421,999 | 14,421,999 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 15 | (174,112,871) | (248,365,120) |
| | | **147,695,213** | **73,442,964** |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | |
| வரையறுக்கப்பட்ட பயன் பொறுப்புகள் | | 239,321,738 | 222,655,326, |
| பிற்போடப்பட்ட வருமானம் (ஜப்பானிய நன்கொடை) | | 79,909,399 | 84,949,026 |
| அரச நன்கொடை (மூலதனம்) | | 629,025,361 | 444,048,924 |
| திருகோணமலை கருத்திட்ட நன்கொடை | | 1,646,092,816 | 1,897,474,699 |
| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புகள் | 18 | 75,733,399 | 85,864,191 |
| குத்தகைக் கணக்கு (வாகனங்கள்) | | - | 4,494,231 |
| | | **2,670,082,712** | **2,739,486,397** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வணிக மற்றும் பிற சென்மதிகள் | 16 | 277,967,880 | 286,403,409 |
| நிதி அல்லாத பொறுப்புகள் | 17 | 138,470,454 | 141,642,059 |
| **மொத்தப் பொறுப்புகள்** | | **416,438,334** | **428,045,468** |
| **மொத்த சொத்துகளும் பொறுப்புகளும்** | | **3,234,216,259** | **3,240,974,829** |

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டம் மற்றும் 1966ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டம் ஆகியவற்றுக்கு அமைவாக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நிதிப்பணிப்பாளரால் சான்றுப்படுத்தப்பட்டது.

................................ திகதி: 04.04.2016

திரு. லலித் ஹெட்டிகே
பணிப்பாளர் (நிதி)

இந்த நிதிக் கூற்றைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கான பொறுப்பை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. இந்த நிதிக்கூற்று 2016 .03.31 ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| ....................................... | ................................. |
| நந்த முறுத்தெட்டுவேகம | பணிப்பாளர் சபை |
| தலைவர் | திகதி: 04.04.2016 |

திகதி: 04.04.2016

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

விபரமான வருமானக் கூற்று

(எல்லா தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன)

| | குறிப்பு | 2014 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் இருந்தவாறு | 2013 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் இருந்தவாறு |
|---|---|---|---|
| விற்பனைகள் | 1 | 493,081,396 | 539,549,564 |
| விற்பனைக் கிரயம் | 2 | 458,736,507 | 386,859,821 |
| **மொத்த இலாபம்** | | **34,344,889** | **152,589,743** |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 3 | 464,855,137 | 413,610,429 |
| வினியோகச் செலவுகள் | 4 | **73,809,637** | 74,962,779 |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 5 | 393,219,653 | 407,905,643 |
| நிர்வாகச் செலவுகள் | 6 | 313,682,908 | 328,388,825 |
| **தொழிற்பாட்டு இலாபம்** | | **(281,512,171)** | **(132,099,342)** |
| நிதிச் செலவுகள் | 7 | 6,213,541 | 8,893,605 |
| **அரசாங்க மானியத்துக்கு முன் இலாபம் (நட்டம்)** | | **(287,725,712)** | **(253,950,680)** |
| அரசாங்க மானியம் | 3.1 | 350,000,000 | 218,160,000 |
| அரசாங்க மானியத்துக்குப் பின் இலாபம் (நட்டம்) | | **62,274,288** | **(35,790,680)** |
| வரிச் செலவுகள் | 8 | 8,776,009 | (20,410,762 |
| **வரிக்குப் பிந்திய இலாபம்** (நட்டம்) | | **71,050,297** | **(56,201,442)** |
| **மொத்த அனைத்து வருமானம்** | | **71,050,297** | **(56,201,442)** |

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சொத்துகளில் மாற்றம் பற்றிய கூற்று

(எல்லா தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன)

| | குறிப்பு | வெளியிடப்பட்ட மூலதனம் | மூலதன ஒதுக்கம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | நிறுத்திவைக்கப்பட்ட வருவாய்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2013 டிசம்பர் 31இல் மீதி | | 307,386,085 | | 14,421,999 | - | 321,808,084 |
| **முழு வருமானம்** | | | | | | |
| ஆண்டுக்கான முழு வருமானம் | | | | | (56,201,442) | (56,201,442) |
| வருமான ஒதுக்க திருத்தம் - 2014 | | | | | 219,291,349 | 219,291,349 |
| **2014 டிசம்பர் 31இல் மீதி** | | **307,386,085** | | **14,421,999** | **(248,365,120)** | **73,442,964** |
| **முழு வருமானம்** | | | | | | |
| காலப்பகுதிக்கான முழு வருமானம் | | | | | 71,050,297 | 71,050,297 |
| வருமான ஒதுக்க திருத்தம் - 2015 | | | | | 3,201,952 | 3,201,952 |
| **2014 டிசம்பர் 31இல் மீதி** | | **307,386,085** | | **14,421,999** | **(174,112,871)** | **147,695,213** |

# 2015 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான தொழிற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்

| விபரம் | 2015 | | 2014 | |
|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | | |
| வரி மற்றும் வட்டிக்கு முந்திய தேறிய இலாபம் | | 62,274,288 | | (50,629,337) |
| **பின்வருவனவற்றுக்கான சீராக்கம்:** | | | | |
| அரச மானிய காலத்தேய்மானம் | (57,975,190) | | (62,272,581) | |
| திருகோணமலை மானிய | (177,769,097) | | (177,769,097) | |
| காலத்தேய்மானம் | 43,621,211 | | 50,005,060 | |
| தேய்வு | 182,364,130 | | 178,531,044 | |
| தேய்வு - திருகோணமலை | 23,335,178 | | 44,218,603 | |
| பணிக்கொடை ஏற்பாடு | 3,775,144 | | 2,541,373 | |
| ஐயக்கடன் ஏற்பாடு | | | | |
| செலாவணி இலாபம் /நட்டம் | 176,576 | | 170,572 | |
| குத்தகை வட்டி | 1,045,145 | | 2,490,894 | |
| வருமான ஒதுக்க சீராக்கம் | 5,947,058 | | | |
| ESC | 1,807,365 | 26,327,519 | 6,273,298 | 44,189,166 |
| **செயற்படு மூலதன மாற்றத்திற்கு முன் தொழிற்பாட்டு இலாபம்** | | | | |
| இருப்பு அதிகரிப்பு/ குறைவு | | | | |
| வணிக மற்றும் ஏனைய வருமதிகள் | 4,833,817 | | 3,806,233 | |
| அதிகரிப்பு/ குறைவு | (6,157,694) | | 2,206,428 | |
| வழிச்சரக்கு அதிகரிப்பு/ குறைவு | | | | |
| வணிக மற்றும் ஏனைய சென்மதிகள் | 442,436 | | (2,053,368) | |
| அதிகரிப்பு/குறைவு | (4,882,736) | | 16,485,451 | |
| நிதி அல்லாத பொறுப்புகள் | | | | |
| அதிகரிப்பு/ குறைவு | (4,978,970) | (10,743,147) | 11,800,986 | 32,245,730 |
| செலுத்திய பணிக்கொடை | | | | |
| செலுத்திய வரி | | | | (10,104,537) |
| | | (6,668,767) | | |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய காசு** | | | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் காசுப்பாய்ச்சல்** | | | | 15,701,022 |
| அரச மானியம் (மூலதனம்) | | | | |
| ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் கொள்வனவு | 230,300,958 | | 218,002,836 | |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலைகள் | (19,684,821)) | | (13,191,090) | |
| முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய காசு | (112,958,823) | 97,657,315 | (121,196,219) | 83,615,627 |
| நிதிச் செயற்பாடுகளில் காசுப்பாய்ச்சல் | | | | |
| வாடகைக் கொடுப்பனவு | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு / குறைவு | (9,092,168) | (9,092,168) | (16,266,392) | (16,266,392) |
| காலப்பகுதி ஆரம்பத்தில் காசும் | | | | 83,050,156 |
| காசுக்குச் சமமானவையும் | | 159,755,040 | | |
| காலப்பகுதி இறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும் (குறிப்பு 14) | | 101,096,412 | | 18,046,256 |
| | | **260,851,452** | | **101,096,412** |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## 1 பொதுத் தகவல்கள்

### 1.1 அறிக்கை செய்யும் அமைப்பு

1966ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு தகுந்தவாறு கூட்டிணைக்கப்பட்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை சுதந்திர சதுக்கம், கொழும்பு 07இல் கொண்டுள்ளதுடன் அதன் பிரதான வணிக நிலையம் சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 இல் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

இவ்வாண்டில், கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடு ஒலிபரப்பு நேர விற்பனையாகும்.

### 1.3 விடயத்துக்கான அதிகாரமளித்தல் திகதி

2015 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுகள் 2016 மார்ச் 31ஆம் திகதி அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.4 ஊழியர்களின் எண்ணிக்கை

ஆண்டின் இறுதியில் இருந்தவாறு நிரந்தரமான ஊழியர்களின் எண்ணிக்கை 872 ஆகும். அத்துடன் ஒப்பந்த அடிப்படையிலான பணியாளர்களின் எண்ணிக்கை 53 ஆகும். (31.12.2014 – 889)

2. தயாரிப்பின் அடிப்படையும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களை (“SLFRS") ஏற்றுக்கொள்ளுதலும்

கூட்டுத்தாபனம் அதன் நிதிக்கூற்றுகளை இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 1995ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு ("SLFRS") நியமங்கள் சட்டத்தின் பிரகாரமும் தயாரிக்கின்றது.

இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் ("SLFRS") புதிய தொகுதி ஒன்றை வெளியிட்டதுடன் 2012 ஜனவரி 01ஆம் திகதியில் அல்லது அதற்குப் பின்னர் செயற்படும்படியாக இந்த நியமங்களைப் பிரயோகிக்குமாறு தொழில்முயற்சிகளைக் கோரியது.

## 3. 1 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

இந்த நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதில் பிரயோகிக்கப்பட்ட பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் பின்வருமாறு. வேறு விதமாகக் கூறப்பட்டாலன்றி, இந்தக் கொள்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட எல்லா ஆண்டுகளிலும் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 3.1.1 தயாரிப்பின் அடிப்படை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுகள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (SLFRS) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுகள் பின்வரும் குறிப்புகளில் விளக்கப்பட்டுள்ள வரலாற்று ரீதியான கிரயம் மற்றும் குறித்த அளவீடுகளின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல் திறனாய்வு சார்ந்த கணக்கீட்டு மதிப்பீடுகளின் பயன்பாட்டைத் தேவைப்படுத்துகின்றது. கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் நடவடிக்கையில் கூட்டுத்தாபனத்தின் தீர்ப்பைப் பிரயோகிப்பதற்கும் அது முகாமைத்துவத்தைத் தேவைப்படுத்துகின்றது. நிதிக்கூற்றுகளுக்கு ஊகங்களும் மதிப்பீடுகளும் முக்கியத்துவம் பெறும் விடயப் பரப்புகள் குறிப்பு 4இல் வெளிப்படுத்தப்பட்டள்ளன. நிதிக் கூற்றுத் திகதியில் அறிக்கை செய்யப்பட்ட சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் தொகைகளும் எதிர்பாராத சொத்துகளும் பொறுப்புகளும் அறிக்கைக் காலப்பகுதிக்கான வருமானம் மற்றும் செலவின தொகைகளின் அறிக்கைகளும் தரப்பட்டுள்ளன. இந்த மதிப்பீடுகள் நடைமுறை நிகழ்வுகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய முகாமைத்துவத்தின் சிறந்த அறிவை அடிப்படையாகக் கொண்டிருந்தபோதிலும், இறுதியில்

உண்மையான பெறுபேறுகள் அந்த மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

### 3.1.2 தொடர்ந்து இயங்கும் அமைப்பு

தொடர்ந்து இயங்கும் அமைப்பாக கூட்டுத்தாபனத்தின் இயலுமையை பணிப்பாளர்கள் மதிப்பிட்டதுடன் வணிகத்தை ஒழிப்பதற்கான அல்லது முடிவுறுத்துவதற்கான நோக்கம் அவர்களுக்கு இல்லை.

### 3.1.3 ஐந்தொகைத் திகதிக்குப் பிந்திய நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் நிகழும் எல்லா மூலப்பொருள் தொடர்பான நிகழ்வுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டு அவசியமானவிடத்து, நிதிக்கூற்றுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.1.4 ஒப்பீட்டுத் தகவல்கள்

கூட்டுத்தாபனத்தினால் இடையறாது பயன்படுத்தப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் வேறு விதமாகக் கூறப்பட்டாலன்றி, முன்னைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டவற்றுக்கு இசைவானவையாகும். சமர்ப்பித்தலை உறுதிப்படுத்துவதற்காக முன்னைய ஆண்டின் தொகைகளும் கட்டங்களும் மீள ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

### 3.1.5 வெளிநாட்டு நாணயங்கள்

(அ) செயற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகள் அமைப்பு தொழிற்படும் (தொழிற்பாட்டு நாணயம்) ஆரம்பப் பொருளாதாரச் சுற்றாடலின் நாணயத்தைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது. நிதிக் கூற்றுகள் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயமாகிய இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளன.

(ஆ) வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும்

வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் அவை இடம்பெறும் திகதிகளில் நிலவும் அல்லது உருப்படிகள் அளவிடப்படும் மதிப்பீடுகளில் நாணய மாற்று வீதத்தைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவின் மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் படிநிலைப் பெறுமதி வழங்கப்பட்டுள்ள நாணயச் சொத்துகளினதும் பொறுப்புகளினதும் ஆண்டிறுதி நாணய மாற்று வீதத்தின் மாற்றத்தின் விளைவான அந்நியச் செலாவணி இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

## 3.2 ஏனைய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 3.2.1 சொத்துகளும் அவற்றின் மதிப்பீட்டுக்கான அடிப்படைகளும்

ஐந்தொகையில் நடைமுறைச் சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டவை கூட்டுத்தாபன வணிகத்தின் சாதாரண தொழிற்பாட்டுச் சுழற்சி அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் ஆகியவற்றில் எது குறுகியதோ அந்தக் காலப்பகுதியில் காசும் காசாக ஏற்பிசைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுபவையும் ஆகும். நடைமுறைச் சொத்துகள் அல்லாத சொத்துகள் ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கும் மேலாக கூட்டுத்தாபனம் வைத்திருப்பதற்குக் கருதியுள்ள சொத்துகளாகும்.

#### 3.2.1.1 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் (PPE)

காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவை பிரதானமாக தலைமை அலுவலகத்தையும் பிராந்திய ஒலிபரப்பு நிலையத்தையும் உள்ளடக்கும். எல்லா ஆதனங்களும் பொறிகளும் உபகரணங்களும் வரலாற்றுக் கிரயத்தில் கூறப்பட்டுள்ளன. ீநு யின் கிரயம் என்பது ஏதேனும் எதேச்சையான செலவினங்களுடன் சொத்துகளின் கருதப்பட்ட பயன்பாட்டுக்காக அவற்றைக் கொண்டுவருவதற்கு ஏற்பட்ட கொள்வனவுக் கிரயம் ஆகும். நிரந்தரத் தன்மையான சொத்துகளின் கொள்வனவு, நீடித்தல் அல்லது மேம்படுத்தல் மூலதனச் செலவினமாகக் கருதப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து ஏற்படும் கிரயங்கள் உருப்படிகளுடன் தொடர்பான எதிர்கால பொருளாதாரப் பயன்கள் கூட்டுத்தாபனத்துக்குப் பாய்வதுடன் உருப்படியின்

கிரயம் நம்பத்தகுந்தவாறு அளவிடக்கூடியதாக இருக்கும்போது மாத்திரம் அவை பொருத்தமானவாறு சொத்துகளின் கொண்டுசெல்லும் பெறுமதியில் உள்ளடக்கப்படுகின்றன அல்லது புறம்பான சொத்தாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

கூட்டுத்தாபனம் லங்கா புவர் லிமிரெட் நிறுவனத்தில் ரூபா ஒரு மில்லியனை முதலீடு செய்தது.

### 3.2.1.2 மீள்நிலைப்படுத்தல் கிரயங்கள்

ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செயலாற்றத்தின் நியமத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதாரப் பயன்களை மீள்நிலைப்படுத்துவதற்காக அல்லது பேணுவதற்காக ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள் ஆகியவற்றின் திருத்தங்கள் மற்றும் பேணுகைக்காக ஏற்படும் செலவினம் பெறப்படும்போது அது செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 3.2.1.3 தேய்மானம்

காணி தேய்வடைவதில்லை. ஏனைய சொத்துகளின் தேய்மானத்துக்கான ஏற்பாடு எல்லா நிலையான சொத்துகளினதும் கிரயத்துக்கு / மீள்மதிப்பீட்டுத் தொகைகளுக்கு நேர்கோட்டு முறைமையைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. இந்நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படும் பிரதான வருடாந்த வீதங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 2.5% |
| பொறிகளும் இயந்திரங்களும் | 7.5% |
| செவிப்புல அலைவரிசைக் கருவி | 7.5% |
| தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | 10% |
| ஒலிபரப்புக் கருவி | 7.5% |
| மோட்டார் வாகனங்கள் | 25% |
| இசைக் கருவிகள் | 10% |
| கணனி உபகரணங்கள் | 50% |
| ஒலிப்பதிவு நாடாக்கள் | 33.33% |
| உதிரி உபகரணங்கள் | 50% |

சொத்துகளின் ஈற்றுப் பெறுமதிகளும் பயன்மிக்க ஆயுட்காலமும் பொருத்தமாயின், ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு சீராக்கம் செய்யப்படுகின்றது.

சொத்துகளின் கொண்டு செல்லும் தொகை அதன் உத்தேச மீளப் பெறப்படும் தொகையை விட அதிகமாயின், அது உடனடியாக குறைத்து எழுதப்படும்.

ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் விற்பனையிலிருந்து கிடைக்கும் இலாபம் அல்லது நட்டம் அவற்றின் கொண்டு செல்லும் தொகையைக் கொண்டு நிர்ணயிக்கப்படுவதுடன் தொழிற்பாட்டு இலாபத்தை நிர்ணயிப்பதில் கணக்கில் கொள்ளப்படுகின்றன. மீள் மதிப்பிடப்பட்ட சொத்துகள் விற்பனைசெய்யப்படும்போது, ஏனைய ஒதுக்கங்களில் உள்ளடக்கப்பட்ட தொகைகள் நிறுத்தி வைத்த வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றன.

### 3.2.2 நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை

நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை சாதனங்களின் திரண்ட கிரயங்களையும் சொத்தொன்றின் நிர்மாணத்துடன் நேரடித் தொடர்புள்ள ஏனைய கிரயங்களையும் உள்ளடக்குகின்றது. நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை கணிசமான அளவு முடிவடைந்து அதன் கருதப்பட்ட பயன்பாட்டுக்குத் தயாராக உள்ளபோது சம்பந்தப்பட்ட சொத்துகள் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது.

### 3.2.3 நிதிச்சொத்துகள்

### 3.2.3.1. வகைப்படுத்தல்

### 3.2.3.2 கடன்களும் வருமதிகளும்

கடன்களும் வருமதிகளும் சுறுசுறுப்பான சந்தையில் நிரல்படுத்தப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய சொத்துகளுடனான நேரிலியற்ற நிதிச் சொத்துகளாகும். அவை அறிக்கையிடும் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் 12 மாதங்களுக்கு அதிகமான முதிர்ச்சியைக் கொண்டவை நீங்கலாக, நடைமுறைச் சொத்துகளில் உள்ளடக்கப்படுகின்றன. இவை நடைமுறையல்லாத சொத்துகளாக வகைப்படுத்தப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தின் கடன்களும் வருமதிகளும் வணிக மற்றும் ஏனைய வருமதிகள்மற்றும் காசும் காசுக்குச் சமமானவையும் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

### 3.2.3.3 விற்பனைக்காக இருக்கும் நிதிச் சொத்துகள்

விற்பனைக்காக இருக்கும் நிதிச் சொத்துகள் இந்த வகுதியில் நியமிக்கப்பட்ட அல்லது வேறு ஏதேனும் வகுதிகளின் வகைப்படுத்தப்படாத நேரிலியற்ற நிதிச்சொத்துகளாகும். அறிக்கை செய்யும் காலப்பகுதி முடிவடைந்து 12 மாதங்களினுள் முதலீடு முதிர்ச்சியடையாதவிடத்து அல்லது அதனைக் கையுதிர்ப்பதற்கான ஏற்பாடுகள் இல்லாதவிடத்து அவை நடைமுறையல்லாத சொத்துகளில் உள்ளடக்கப்படுகின்றன.

### 3.2.5.4. ஏற்பிசைவும் அளவீடும்

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நடுநிலைப் பெறுமானத்தில் கொண்டுசெல்லப்படும் நிதிச் சொத்துகள் ஆரம்பத்தில் நடுநிலைப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் வருமானக் கூற்றில் செலவில் இடப்படுகின்றன. முதலீடுகளிலிருந்து கிடைக்கும் காசுப் பாய்ச்சலுக்கான உரிமைகள் காலாவதியாகும்போது அல்லது உரிமைக்கான எல்லா இடர்களும் வெகுமதிகளும் கணிசமான அளவில் மாற்றப்பட்டுள்ளபோது, கழிக்கப்படுகின்றன. விற்பனைக்காக இருக்கும் நிதிச் சொத்துகளும் நடுநிலைப் பெறுமானத்தில் இலாபம் அல்லது நட்டம் ஊடான நிதிச் சொத்துகளும் பின்னர் நடுநிலைப் பெறுமானத்தில் கொண்டுசெல்லப்படுகின்றன. கடன்களும் வருமதிகளும் பின்னர் பயனுறுதியான வட்டி முறைமையைப் பயன்படுத்தி தேய்மானக் கிரயத்தில் கொண்டுசெல்லப்படுகின்றன.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமானத்தில் நிதிச் சொத்துகள் வகுதியில் நியாயப் பெறுமானத்தின் மாற்றங்களிலிருந்து எழும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் அவை எழுந்த காலப்பகுதியில் வருமானக் கூற்றில் ஏனைய (நட்டங்கள்) ∴ வருவாய்கள் - தேறியவை யின் கீழ் பதிவுசெய்யப்படும்.

விற்பனைக்காக இருப்பவையாக வகைப்படுத்தப்பட்ட நாணய மற்றும் நாணயமல்லாத நடுநிலைப் பெறுமானத்தின் மாற்றங்கள் ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. விற்பனைக்காக இருப்பவையாக வகைப்படுத்தப்பட்ட பிணையங்கள் விற்கப்படும்போது அல்லது சேத இழப்பு ஏற்படும்போது, உரிமையாண்மையில் ஏற்பிசைவு செய்யப்படும் திரண்ட நடுநிலைப் பெறுமானச் சீராக்கல்கள் முதலீட்டுப் பிணையங்களிலிருந்து இலாபங்கள் மற்றும் நட்டங்களாக வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன. பயனுறுதியான வட்டி முறைமையைப் பயன்படுத்திக் கணிக்கப்படும் விற்பனைக்காக இருக்கும் பிணையங்கள் மீதான வட்டி ஏனைய வருமானங்களின் ஒரு பகுதியாக வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 3.2.5.5 நிதிச் சொத்துகளின் சேத இழப்பு

(அ) காலத்தேய்மானக் கிரயத்தில் கொண்டுசெல்லப்படும் சொத்துகள்

ஒரு நிதிச் சொத்து மதிப்பிறக்கத்துக்கு உட்பட்டுள்ளதா என்பதற்கான உண்மையான சான்று உள்ளதா என அறிக்கை செய்யும் ஒவ்வொரு காலப்பகுதியின் இறுதியிலும் கூட்டுத்தாபனம் மதிப்பீடு செய்கின்றது. சொத்தின் (ஒரு நட்ட நிகழ்வு) ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் நிகழும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகள் மற்றும் நம்பத்தகுந்தவாறு மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்துகளின் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களில் தாக்கத்தைக் கொண்ட நட்ட நிகழ்வு (நிகழ்வுகள்) ஆகியவற்றின் விளைவாக மதிப்பிறக்கம் ஏற்பட்டதற்கான உண்மையான சான்று இருந்தால் மட்டுமே ஒரு நிதிச் சொத்தின் பெறுமதி இறக்கம் நிகழ்ந்து பெறுமதி இறக்க நட்டம் ஏற்படுகின்றது.

கடனாளி அல்லது கடனாளிகளின் ஒரு குழு கணிசமான அளவில் வட்டி அல்லது முதன்மைக் கொடுப்பனவில்

நிதிப் பிரச்சினைகளை, ஒப்பந்த முறிவை அல்லது தவணை தவறுதல் ஆகியவற்றுக்கான குறிகாட்டிகள், வங்குரோத்து நிலை அல்லது ஏனைய நிதி ஒழுங்கீனத்துக்கு அவர்கள் உள்ளாவதற்கான வாய்ப்பு மற்றும் ஒப்பந்த முறிவுக்கு எதிரிணையான நிலுவைகளில் மாற்றங்கள் அல்லது பொருளாதார மாற்ற நிலைமைகள் போன்ற உத்தேச எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் அளவிடத்தக்க குறைவை அவதானிக்கக்கூடிய தரவுகள் குறித்துக்காட்டுதல் ஆகியவற்றை சேத இழப்புக்கான சான்றுகள் உள்ளடக்கும்.

கடன்கள் மற்றும் வருமதிகள் வகுதிக்காக, நட்டத்தின் அளவு சொத்தின் கொண்டுசெல்லும் தொகைக்கும் நிதிச் சொத்தின் மூல பயனுறுதியான வட்டி வீதத்தில் கழிவிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சலின் தற்போதையப் பெறுமதிக்கும் (செலவிடப்படாத எதிர்கால கடன் நட்டங்களை உள்ளிட்ட) இடையிலான வேறுபாடாக அளவிடப்படுகின்றது. சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி குறைக்கப்பட்டு நட்டத்தின் அளவு ஒன்றிணைக்கப்பட்ட வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. ஒரு கடன் அல்லது முதிர்ச்சிக்காக வைத்திருக்கும் முதலீடு வேறுபட்ட வட்டி வீதத்தைக் கொண்டிருப்பின், ஏதேனும் மதிப்பிறக்கத்தை அளவிடுவதற்காக கழிவு வீதம் ஏதேனும் மதிப்பிறக்க நட்டத்தை அளவிடுவதற்கான கழிவு வீதம் ஒப்பந்தத்தின் கீழ் நிர்ணயிக்கப்படும் நடைமுறையில் உள்ள பயனுறுதியான வட்டி வீதம் ஆகும். நடைமுறைச் செலவினம் ஒன்றாக, அவதானிக்கக்கூடிய சந்தை விலையைப் பயன்படுத்தி சாதனத்தின் நடுநிலைப் பெறுமானத்தின் அடிப்படையில் கூட்டுத்தாபனம் மதிப்பிறக்கத்தை அளவிடலாம்.

அதனைத் தொடர்ந்து வரும் காலப்பகுதியில், மதிப்பிறக்க நட்டத்தின் தொகை குறைவடைந்து மதிப்பிறக்கம் ஏற்பிசைவு செய்யப்பட்டதன் பின்னர் இடம்பெறும் நிகழ்வொன்றுக்கு குறைவு உண்மையாக தொடர்புபடுத்தக்கூடியதாக இருப்பின் (கடனாளியின் கடன் வீதத்தில் ஒரு மேம்பாடு போன்றவை), முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட மதிப்பிறக்க நட்டத்தின் திரும்பல் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 3.2.5.6 வணிக வருமதிகள்

வணிக வருமதிகள் எதிர்பார்க்கப்பட்ட ஏற்பிசைவு செய்யக்கூடிய பெறுமதியில் கொண்டுசெல்லப்படுகின்றது. வருமதிகளின் மூல நியதிகளுக்கிணங்க, எல்லாத் தொகைகளையும் அறவிடுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடியாமல் போகும் என்பதற்கான உண்மையான சான்று இருக்கும்போது, மதிப்பிறக்க வணிக வருமதிகளுக்கான ஓர் ஏற்பாடு தாபிக்கப்படும். கடனாளியின் கணிசமான நிதியியல் பிரச்சினைகள், கடனாளி வங்குரோத்து நிலைமைக்கு அல்லது நிதியியல் ஒழுங்கீனத்துக்கு மற்றும் கொடுப்பனவில் தவணை தவறுவதற்கு உள்ளாவார் என்பதற்கான சாத்தியம் வணிக வருமதிகள் இழப்புக்கு உள்ளாகும் என்பதற்கான குறிகாட்டிகளாகக் கருதப்படுகின்றன. படிக்கணக்கொன்றைப் பயன்படுத்துவதன் ஊடாக சொத்தின் கொண்டு செல்லும் தொகை குறைக்கப்படுவதுடன் வினியோகக் கிரயத்தினுள் விபரமான வருமானக் கூற்றில் நட்டத் தொகை ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. வணிக வருமதிகள் அறவிட முடியாதுள்ளபோது, அது வணிக வருமதிக்கான படிக்கணக்கிற்கு எதிராகப் பதிவழிக்கப்படுகின்றது. முன்னர் பதிவழிக்கப்பட்டு அதன் பின்னர் கிடைக்கும் அறவீடுகள் வருமானக் கூற்றில் வினியோகக் கிரயத்துக்கு எதிராக வரவு வைக்கப்படுகின்றது.

வணிக வருமதிகள் ஆரம்பத்தில் நடுநிலைப் பெறுமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு அதன் பின்னர் பயனுறுதியான வட்டி முறைமையைப் பயன்படுத்தி காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்பட்டு சேத இழப்பு கழிக்கப்படுகின்றது.

### 3.2.6 சரக்குத்தொக்கு

சரக்குத் தொக்கு குறைந்த கிரயத்தில் அல்லது நிகர தேறுகைத் தகு பெறுமானத்தில் கூறப்படுகின்றன. கிரயம் கொள்வனவு விலையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. நிகர தேறுகை தகு பெறுமதி என்பது பூர்த்தி செய்வதற்கான கிரயம் மற்றும் விற்பனைச் செலவினங்களைக் கழித்து வரும் சாதாரண வியாபார நடவடிக்கையின் போதான விற்பனை விலையின் மதிப்பீடாகும்.

### 3.2.7 காசும் காசுக்குச் சமமானவையும்

காசுப்பாய்ச்சல் கூற்றில், காசும் காசுக்குச் சமமானவையும் என்பது கையிலுள்ள காசு, வங்கியில் உள்ள அழைப்பு வைப்புகள், மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான மூல முதிர்ச்சிகளைக் கொண்ட ஏனைய குறுகிய கால அதி திரவத்தன்மையான முதலீடுகள் மற்றும் வங்கி மேலதிகப்பற்றுகள் ஆகியவற்றை உள்ளடக்கும். நிதி நிலைமைக் கூற்றுகளில், வங்கி மேலதிகப் பற்றுகள் நடைமுறைப் பொறுப்புகளில் கடன்களில் காட்டப்படும்.

## 3.2.8 கடன்பெறல் கிரயங்கள்

பொதுவான மற்றும் குறித்த கடன்பெறல் கிரயங்கள் தகைமைபெறும் சொத்துகளின் கொள்ளல், நிர்மாணம் அல்லது உற்பத்தியுடன் தொடர்பானவையாகும். அவை அவற்றின் கருதப்பட்ட பயன்பாட்டுக்கு அல்லது விற்பனைக்கு தயாராவதற்கு அவசியமானவாறு கணிசமான காலம் தேவைப்படும் சொத்துகளாகும் என்பதுடன் அந்த சொத்துகள் அவற்றின் கருதப்பட்ட பயன்பாட்டுக்கு அல்லது விற்பனைக்கு பெருமளவில் தயாராக இருக்கும் அத்தகைய காலம் வரை அந்தச் சொத்துகளின் கிரயத்தில் சேர்க்கப்படுகின்றன.

தகைமை பெறும் சொத்துகள் மீது செலவிடுவதற்காக வைத்துள்ள குறித்த கடனின் தற்காலிக முதலீட்டின் மீது ஈட்டப்படும் முதலீட்டு வருமானம் முதலீட்டாக்கத்துக்குத் தகைமை பெறும் கடன்பெறல் கிரயங்களிலிருந்து கழிக்கப்படும்.

ஏனைய எல்லா கடன்பெறல் கிரயங்களும் அவை நடைபெற்ற காலப்பகுதியில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

## 3.2.9 நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி

காலப்பகுதிக்கான வரிச் செலவுகள் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை உள்ளடக்கியவையாகும். வரி ஏனைய பூரணமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படும் உருப்படிகளின் அளவுக்கு அல்லது நேரடியாக உரிமையாண்மையுடன் முறையே தொடர்புபட்டாலன்றி, அது வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**அ) நடைமுறை வரி விதிப்பு**

2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடைமுறை வரிப் பொறுப்புகள் கூட்டுத்தாபனத்திற்கு எழுகின்றன. உண்மையான பொறுப்பைப் பிரதிபலிக்கின்றது என முகாமைத்துவம் கருதும் சொல்லப்பட்ட ஏற்பாடுகளைப் பிரயோகித்து நிதிக் கூற்றுகளில் இந்தப் பொறுப்புகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கூட்டுத்தாபனம் மேற்கொள்ளும் நிலைப்பாடுகளை வருமான அதிகாரிகள் ஆட்சேபிக்கின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. இந்த விடயங்கள் மீதான ஏதேனும் மேலதிக கிரயங்கள் பொறுப்பில் வரிச் செலவாக கணக்கிலிடப்பட்டு கூட்டுத்தாபனத்தினால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

நடைமுறை ஆண்டுக்கும் முன்னைய காலப்பகுதிகளுக்குமான நடைமுறைச் சொத்துகளும் பொறுப்புகளும் உள்நாட்டு இறைவரி அதிகாரிகளிடமிருந்து பெறுவதற்கு அல்லது அவர்களுக்குச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கும் தொகைகளில் அளவிடப்படுகின்றது. தொகையைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்கள் ஐந்தொகைத் திகதியில் சட்டவாக்கம் செய்யப்படுகின்றன அல்லது பெருமளவில் சட்டவாக்கம் செய்யப்படுகின்றன. நடைமுறை வரிக்கான ஏற்பாடு நிதிக் கூற்றுகளில் அறிக்கை செய்யப்பட்டவாறு வருமான மற்றும் செலவினக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**ஆ) பிற்போடப்பட்ட வரி**

நிதியியல் அறிக்கை செய்யும் நோக்கங்களுக்காக சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் கொண்டுசெல்லும் தொகைக்கும் வரிவிதிப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் தொகைக்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகளுக்கு ஏற்பாடு செய்யும் ஐந்தொகை முறைமையைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. வணிக இணைப்பு அல்லாததும் கணக்கீட்டையோ வரி விதிக்கக்கூடிய இலாபத்தையோ பாதிக்காததுமான கொடுக்கல் வாங்கல் ஒன்றில் சொத்துகள் அல்லது பொறுப்புகளின் ஆரம்ப ஏற்பிசைவில் எழும் தற்காலிக வேறுபாடுகளுக்காகவும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் திருப்பமடையாது என எதிர்பார்க்கப்படும் முதலீட்டு கீழ்நிலை உரிமம் தொடர்பான வேறுபாடுகளுக்கும் பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை. மேலும் நல்லெண்ணத்தின் ஆரம்ப ஏற்பிசைவில் எழும் தற்காலிக வேறுபாடுகளுக்கு பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை. அறிக்கைத் திகதியளவில் சட்டவாக்கம் செய்யப்பட்ட அல்லது பெருமளவில் சட்டவாக்கம் செய்யப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் தற்காலிக வேறுபாடுகள் திரும்பல் அடைகின்றபோது, அவற்றுக்குப் பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதத்தில் பிற்போடப்பட்ட வரி அளவிடப்படுகின்றது. நடைமுறை வரிப் பொறுப்புகளையும் சொத்துகளையும் எதிரீடு செய்வதற்கு சட்ட ரீதியான வலுவூட்டக்கூடிய உரிமை இருப்பதுடன் அதே வரி விதிக்கக்கூடிய தொழில் முயற்சியின் மீது அதே வரி அதிகாரிகளினால்

விதிக்கப்படும் வருமான வரிகளுடன் அது தொடர்புபடுமாயின், பிற்போடப்பட்ட வரிச் சொத்துகளும் பொறுப்புகளும் எதிரீடு செய்யப்படுகின்றன.

எதிர்கால இலாபங்களுக்கு எதிராக தற்காலிக வேறுபாடுகளைப் பயன்படுத்த முடியுமானவாறு அவை கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ளபோது மட்டுமே பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கை செய்யும் திகதியிலும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் மீளாய்வு செய்யப்பட்டு தொடர்பான வரிப் பயன்கள் இனிமேலும் கிடைக்காது என்னும் அளவுக்கு அது குறைக்கப்படுகின்றது.

## 3.2.10 ஊழியர் பயன்கள்

### 3.2.10.1 இளைப்பாறல் பயன் கடப்பாடுகள்

**அ) வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் - ஓய்வுப் பணிக்கொடை ஏற்பாடு**

ஒரு வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் என்பது வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் அல்லாத தொழிலுக்குப் பிந்திய பயன் திட்டமாகும். வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் தொடர்பாக நிதிக்கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்ட பொறுப்பு அறிக்கை செய்யும் திகதியில் வரையறுக்கப்பட்ட கடப்பாட்டின் தற்போதையப் பெறுமதி ஆகும். வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாடு எதிர்பார்க்கப்பட்ட அலகுச் செலவுப் பதிவு முறையைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி உத்தேச எதிர்கால காசுப்பாய்ச்சலுக்கு கழிவு வழங்குவதன் மூலம் பயன்கள் செலுத்தப்படுகின்றதும் தொடர்பான பொறுப்பின் காலப்பகுதிக்கு சுமாரான முதிர்ச்சியைக் கொண்டதுமான நிர்ணயிக்கப்படும் வட்டி வீதத்தைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றது.

இளைப்பாறல் பயன் கிரயங்கள் பற்றிய SLAS 16 (2006ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட) இற்கு அமைவாக எல்லா ஊழியர்களினதும் சேவையின் முதல் வருடத்திலிருந்து ஓய்வுப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ், 5 வருட சேவையைப் பூர்த்திசெய்யும்போது மாத்திரமே ஒரு ஊழியருக்கான பொறுப்பு எழுகின்றது.

பொறுப்பு புற நிதியிடப்பட்டதல்ல. ஆயுட்காலமுறை மதிப்பீட்டாளரின் ஊகங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

01. வட்டி வீதம் 11%

02. சம்பள அதிகரிப்பு வீதம் 5%

03. எல்லா ஊழியர்களினதும் இளைப்பாறல் வயது: 60 வருடங்கள்

**அ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் ஆகியவற்றைப் பெறுவதற்கு தகைமையுள்ள எல்லா ஊழியர்களும் சம்பந்தப்பட்ட நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக சம்பந்தப்பட்ட பங்களிப்பு நிதியங்களினால் உள்ளடக்கப்படுவர். வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான ஊழியர்களின் பங்களிப்புகள் அவை நிகழும்போது வருமானக் கூற்றில் ஒரு செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

## 3.2.11 அரசாங்க மானியங்கள்

மானியங்கள் கிடைக்கப்பெறும் எனவும் அதனுடன் இணைந்த எல்லா நிபந்தனைகளுக்கும் கூட்டுத்தாபனம் இணங்கி ஒழுகும் எனவும் நியாயமான உத்தரவாதம் காணப்படுமிடத்து அரசாங்க மானியங்கள் நடுநிலைப் பெறுமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

கிரயங்கள் தொடர்பான அரசாங்க மானியங்கள் அவை ஈடுசெய்வதற்குக் கருதப்பட்ட கிரயங்களுடன் ஒப்பிடுவததற்கு அவசியமான காலப்பகுதியில் பிற்போடப்பட்டு விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான அரசாங்க மானியங்கள் பிற்போடப்பட்ட அரசாங்க மானியங்களாக நடைமுறை அல்லாத பொறுப்புகளில் உள்ளடக்கப்பட்டு தொடர்பான

சொத்துகளின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலங்களில் நேர்கோட்டு அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் பதியப்படுகின்றது.

### 3.2.12 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக தற்காலத்தில் சட்ட ரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடு கூட்டுத்தாபனத்தில் காணப்பட்டு, கடப்பாடுகளைத் தீர்ப்பதற்கு பொருளாதாரப்பயன்களுடன் இணைந்த வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படும் என்னும் சாத்தியம் காணப்படுவதுடன் கடப்பாடுகளின் அளவின் நம்பத்தகுந்த ஒரு மதிப்பீட்டை மேற்கொள்ள முடியுமாக உள்ளபோது ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 3.2.13 நிகழ்தகு பொறுப்புகள் மற்றும் நிகழ்தகு சொத்துகள்

ஒரு நிகழ்தகு பொறுப்பு என்பது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் நிகழ்வதால் அல்லது நிகழாது விடுவதால் உறுதிப்படுத்தப்படும் கடந்தகால நிகழ்வுகளின் இருப்பிலிருந்து எழும் வாய்ப்பான கடப்பாடு அல்லது கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு தேவைப்படும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் சாத்தியமற்ற காரணத்தினால், ஏற்பிசைவு செய்யப்படாத தற்போதைய கடப்பாடு ஆகும். நம்பத்தகுந்தவாறு அளவிட முடியாத பொறுப்பு இருக்குமிடத்து மிகவும் அரிதான சந்தர்ப்பங்களிலும் நிகழ்தகு பொறுப்பு எழுகின்றது. கூட்டுத்தாபனம் நிகழ்தகு பொறுப்புகளை ஏற்பிசைவு செய்வதில்லை. ஆனால், நிதிக்கூற்றுகளில் அதன் இருப்பை வெளிப்படுத்துகின்றது.

ஒரு நிகழ்தகு சொத்து என்பது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் நிகழ்வதால் அல்லது நிகழாது விடுவதனால் அதன் இருப்பு உறுதிப்படுத்தப்படும் கடந்தகால நிகழ்வுகளிலிருந்து எழுகின்றது. கூட்டுத்தாபனம் நிகழ்தகு சொத்துகளை ஏற்பிசைவு செய்வதில்லை. ஆனால், அதன் பொருளாதாரப் பயன்கள் உள்நோக்கிப் பாய்வதற்கான வாய்ப்பு உள்ள போது அதை வெளிப்படுத்துகின்றது. ஆனால் அது நிச்சயமற்றதாகும்.

### 3.2.14 வணிக சென்மதிகள்

வணிக சென்மதிகள் சாதாரண வணிக நடவடிக்கைகளின்போது வழங்குனர்களிடமிருந்து பெறப்பட்ட பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக கொடுப்பனவை மேற்கொள்வதற்கான கடப்பாடு ஆகும். கொடுப்பனவு ஒரு வருடம் அல்லது அதற்குக் குறைவான காலப்பகுதியில் (அல்லது சாதாரண வணிகச் செயற்பாட்டுச் சுழற்சியில் அதிக காலமாயின்) நிலுவையாக இருப்பின், செலுத்த வேண்டிய கணக்குகள் நடைமுறைப் பொறுப்புகளில் வகைப்படுத்தப்படுகின்றன. இன்றேல், அவை நடைமுறை அல்லாத பொறுப்புகளாக முன்வைக்கப்படுகின்றன.

வணிக சென்மதிகள் ஆரம்பத்தில் நடுநிலைப் பெறுமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு பின்னர் பயனுறுதியான வட்டி முறைமையைப் பயன்படுத்தி காலத்தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுகின்றது.

### 3.2.15 நிதிக்குத்தகைக் கடப்பாடுகள்

குத்தகை உருப்படிகளின் இடைநேர்விளைவான எல்லா இடர்களையும் பயன்களையும் கணிசமான அளவில் பயனுறுதியாக கூட்டுத்தாபனத்துக்கு மாற்றும் நிதிக்குத்தகை ஆதனம், பொறி மற்றும் உபகரணம் குத்தகை ஆதனத்தின் நடுநிலைப் பெறுமானத்தில் ஆரம்பத்தில் முதலீட்டாக்கம் செய்யப்படுகின்றது அல்லது குறைவாயின், ஆரம்பத்தில் குத்தகைக் கொடுப்பனவின் ஆரம்பத்தில் இருந்த அதி குறைந்த குத்தகைக் கொடுப்பனவின் தற்போதையப் பெறுமதியிலிருந்து திரண்ட தேய்மானத்தைக் கழித்து முதலீட்டாக்கம் செய்யப்படுகின்றது.

செலுத்த வேண்டிய மொத்த வட்டி இடைநிறுத்தத்தில் கணக்கிடப்படுகின்றது. ஒத்திசைவான கடன் குத்தகையாளருக்கு செலுத்த வேண்டிய தொகையாக பதிவு செய்யப்படுகின்றது.

ஆண்டுக்கான வட்டிக் கட்டணம் வட்டி ஒதுக்கக் கணக்கிலிருந்து வருமானக் கூற்றிற்கு மாற்றப்படுகின்றது.

### 3.2.16 வருமானக் கூற்று

### 3.2.16.1 வருமானத்தை ஏற்பிசைவு செய்தல்

வருமானம் கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய பதிலிறுப்பின் நடுநிலைப் பெறுமானத்தில் அளவிடப்படுவதுடன் வழங்கிய சேவைகள், சொல்லப்பட்ட தேறிய கழிவுகள் மற்றும் சேர் பெறுமதி வரிகள் ஆகியவற்றுக்காகக் கிடைக்க வேண்டிய தொகைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. வருமானத் தொகை நம்பத்தகுந்தவாறு அளவிடக்கூடியதாக உள்ளபோதும் எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்துக்குப் பாய்வதற்கான சாத்தியம் உள்ளபோதும் கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் குறித்த தகவு நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படுகின்றபோதும் கூட்டுத்தாபனம் வருமானத்தை ஏற்பிசைவு செய்து கீழே விபரிக்கப்பட்டவாறு வாடிக்கையாளரின் வகை, கொடுக்கல் வாங்கலின் தன்மை மற்றும் ஒவ்வொரு குறித்த ஒழுங்கையும் கவனத்தில் கொண்டு கூட்டுத்தாபனம் அதன் உத்தேச திரும்பலை வரலாற்றுப் பெறுபேறுகளில் அடிப்படையாகக் கொள்கின்றது.

**(அ) ஒலிபரப்பு நேர விற்பனை**

வருவாய் ஒலிபரப்பு நேர விற்பனையை உள்ளடக்குகின்றது. விளம்பரங்கள் ஒலிபரப்பப்படுகின்றபோது ஒலிபரப்பு நேர விற்பனை வருமானம் ஏற்பிசைவுசெய்யப்படுகின்றது.

**(ஆ) வட்டி வருமானம்**

அறவிடக்கூடிய தன்மை சந்தேகத்துக்குரியதாக இல்லாதவிடத்து, வட்டி வருமானம் கால அடிப்படையில் திரண்ட வட்டியாக (சொத்தின் பயனுறுதியான விளைவை கவனத்தில் கொண்டு) ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**இ) ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் விற்பனை மீதான தேறிய இலாபம் அல்லது நட்டம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் விற்பனை மீதான இலாபம் அல்லது நட்டம் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் தேறிய விற்பனை வருவாய் கொண்டு செல்லும் தொகையுடன் ஒப்பிட்டு நிர்ணயிக்கப்படுவதுடன் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**ஈ) ஏனைய வருமானம்**

ஏனைய எல்லா வருமானங்களும் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவுசெய்யப்படுகின்றன.

### 3.2.17.1 செலவின ஏற்பிசைவு

**அ) செயற்பாட்டுச் செலவினங்கள்**

ஏற்பட்ட கிரயம் மற்றும் குறித்த வருமான உருப்படியின் வருவாய் ஆகியவற்றுக்கிடையிலான நேரடி தொடர்பு ஆகியவற்றின் அடிப்படையில் வருமானக் கூற்றில் செலவினம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. ஆண்டுக்கான இலாபத்தை ∴ (நட்டத்தைக்) கணிப்பதில் வினைத்திறன் மிக்க நிலையில் வணிகத்தை நடத்தி ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தைப் பேணுவதில் ஏற்படும் எல்லாச் செலவினமும் வருமானத்தில் விதிக்கப்படுகின்றது. அறவிட முடியாத மற்றும் ஐயக்கடன்களுக்கும் தெரிந்த எல்லாப் பொறுப்புகளுக்கும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்துக்கான தேய்வுகளுக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஆ) நிதிச் செலவுகள்**

வட்டிச் செலவினங்கள் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. கடன்பெறல் கிரயங்கள் அவை நிகழ்ந்த காலப்பகுதியில் ஒரு செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 3.2.18 ஒப்பீடுகள்

அவசியமானவிடத்து, நடைமுறை ஆண்டில் சமர்ப்பிப்புகளின் மாற்றத்துக்கு இசைவாக ஒப்பீட்டு எண்ணிக்கைகள் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

## 4 திறனாய்வு சார்ந்த கணக்கீட்டு மதிப்பீடுகளும் சீராக்கல்களும்

அறிக்கைத் திகதியில் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கைசெய்யப்பட்ட சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினம் மற்றும் நிகழ்தகு பொறுப்புகள் ஆகியவற்றின் வெளிப்படுத்தல்களில் தாக்கம் செலுத்தும் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள். எவ்வாறாயினும், இந்த ஊகங்கள் மற்றும்

மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமற்ற தன்மை எதிர்காலத்தில் ஏற்படும் சொத்துகள் அல்லது பொறுப்புகளின் கொண்டுசெல்லும் தொகைகளில் சாதன சீராக்கலைத் தேவைப்படுத்தும் விளைவை ஏற்படுத்தக்கூடும்.

தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் ஆகியவை சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதாக நம்பப்படும் வரலாற்று ரீதியான அனுபவத்தையும் ஏனைய விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். அதன் விளைவுகள் ஏனைய மூலங்களிலிருந்து உடனடியாக அடையாளம் காணக்கூடிய சொத்துகள், பொறுப்புகள் மற்றும் நிகழ்தகு பொறுப்புகளின் கொண்டுசெல்லும் தொகைகள் பற்றிய தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்வதற்கான அடிப்படைகளாக ஆகின்றன.

தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அடிநிலையான ஊகங்கள் ஆகியவை நடைபெற்றுக் கொண்டிருக்கும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், அந்தக் காலப்பகுதியை அல்லது திருத்தக் காலப்பகுதியை மட்டும் பாதிக்குமாயின் மதிப்பீடு திருத்தப்பட்ட காலப்பகுதியிலும் திருத்தம் நடைமுறைக் காலம் எதிர்காலம் ஆகிய இரண்டையும் பாதிக்குமாயின், எதிர்காலத்திலும் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்ட SLAS இன் பிரயோகத்தில் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் நிதிக்கூற்றில் கணிசமான தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

**(அ) ஓய்வூதியப் பயன்கள்**

ஓய்வூதியக் கடப்பாடுகளின் தற்போதையப் பெறுமதி பல்வேறு ஊகங்களைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் பல்வேறு காரணங்களில் தங்கியுள்ளது. ஓய்வூதியத்துக்கான தேறிய கிரயத்தை (வருமானம்) நிர்ணயிப்பதில் பயன்படுத்தப்படும் ஊகங்கள் கழிவு வீதத்தை உள்ளடக்குகின்றன. இந்த ஊகங்களில் ஏற்படும் ஏதேனும் மாற்றங்கள் ஓய்வூதியக் கடப்பாடுகளின் கொண்டு செல்லும் தொகையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் பொருத்தமான கழிவு வீதத்தை கூட்டுத்தாபனம் நிர்ணயிக்கின்றது. ஓய்வூதியக் கடப்பாடுகளைத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படும் உத்தேச எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தற்போதையப் பெறுமதியை நிர்ணயிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வட்டி வீதம் இதுவாகும். பொருத்தமான கழிவு வீதத்தை நிர்ணயிப்பதில், கூட்டிணைந்த முறிகளின் வட்டி வீதத்தை கூட்டுத்தாபனம் கவனத்தில் கொள்கின்றது. ஓய்வூதியக் கடப்பாடுகளுக்கான ஏனைய பிரதான ஊகங்கள் பகுதியளவில் தற்போதைய சந்தை நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

**(ஆ) வருமான வரிகள்**

கூட்டுத்தாபனம் வருமான வரிக்கு உட்பட்டுள்ளது. வருமான வரிகளுக்கான ஏற்பாட்டை நிர்ணயிப்பதில் முக்கியான தீர்மானம் தேவைப்படுத்தப்படுகின்றது. இறுதியான வரி நிர்ணயம் நிச்சயமற்ற பல கொடுக்கல் வாங்கல்களும் கணிப்பீடுகளும் உள்ளன. மேலதிக வரிகள் செலுத்தவேண்டி ஏற்படுமா என்னும் மதிப்பீட்டின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்ட வரிக் கணக்காய்வு விடயங்களுக்கான பொறுப்புகளை கூட்டுத்தாபனம் ஏற்பிசைவு செய்கின்றது. இந்த விடயங்களின் இறுதியான வரி விளைவு ஆரம்பத்தில் பதிவு செய்யப்பட்ட தொகைகளை விட வேறுபடுமிடத்து, அத்தகைய வேறுபாடுகள் அத்தகைய தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரி சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் மீது தாக்கம் செலுத்தும்.

# 5 நிதி இடர் முகாமைத்துவம்

## 5.1 நிதி இடர் காரணிகள்

கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் அதனை பல்வேறு நிதி இடர்களுக்கு இட்டுச்செல்கின்றது: சந்தை இடர் (நாணய இடர், காசுப்பாய்ச்சல் வட்டி வீத இடர் மற்றும் விலை இடர் ஆகியவற்றை உள்ளிட்ட), கடன் இடர் மற்றும் திரவத்தன்மை இடர். கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவம் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயலாற்றத்தில் வாய்ப்பான மிக மோசமான தாக்கங்களைக் குறைப்பதற்கு கவனம் செலுத்துகின்றது.

நிதி முகாமைத்துவம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின் கீழ் நிதித் திணைக்களம் ஒன்றினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**அ) சந்தை இடர்கள்**

**(i) வெளிநாட்டுச் செலாவணி இடர்**

கூட்டுத்தாபனம் தேவையான உபகரணங்களை சர்வதேச ரீதியில் இறக்குமதி செய்கின்றது. அது பல்வேறு நாணயங்கள் தொடர்பாக, குறிப்பாக ஐக்கிய அமெரிக்க டொலர் தொடர்பாக எழும் வெளிநாட்டுச் செலாவணி இடரை எதிர்நோக்குகின்றது. எதிர்கால வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏற்பிசைவு செய்யப்பட்ட சொத்துகள் மற்றும் பொறுப்புகளிலிருந்து எழும் தமது வெளிநாட்டுச் செலாவணி இடரை முகாமைத்துவம் செய்வதற்கு கூட்டுத்தாபனம் உள்நாட்டு முகவர்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்கின்றது.

**(ii) விலை இடர்**

குழு பண்ட விலை வரியை எதிர்நோக்குகின்றது. கூட்டுத்தாபனம் பிரதான வழங்குனர்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொண்டு இடரைக் குறைக்கின்றது.

**iii) கடன் இடர்கள்**

பிரதானமாக வணிக வருமதிகளிலிருந்து கடன் இடர் ஏற்படுகின்றது. கூட்டுத்தாபனம் சேவையை வழங்குவதற்கு முன்னர் அதன் புதிய வாடிக்கையாளர் ஒவ்வொருவரினதும் கடன் இடரை முகாமைத்துவம் செய்வதற்கும் பகுப்பாய்வதற்குமான பொறுப்பைக் கொண்டுள்ளது.

கடன் இடர்கள் காசும் காசுக்குச் சமமானவையும், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் உள்ள வைப்புகள் ஆகியவற்றிலிருந்தும் அவ்வாறே வாடிக்கையாளர்களின் வருமதிகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் கடன் இடர் எழுகின்றது. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களைப் பொறுத்தவரை, **'A'** தரத்தைக் கொண்ட சுயாதீனமாக தரப்படுத்தப்பட்ட தரப்புகள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இடர் கட்டுப்பாடு வாடிக்கையாளரின் நிதி நிலைமை, கடந்தகால அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளைக் கவனத்தில் கொண்டு கடன் தரத்தை மதிப்பிடுகின்றது. தனிப்பட்ட இடர் வரையறைகள் உள்ளக மற்றும் புற தரமிடல்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன. கடன் வரையறைகளைப் பயன்படுத்தல் கிரமமாகக் கண்காணிக்கப்படுகின்றது.

**iv)திரவத்தன்மை இடர்கள்**

கூட்டுத்தாபனத்தின் திரவத்தன்மைத் தேவைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டு கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றது. அத்தகைய எதிர்வுகூறல் கூட்டுத்தாபனத்தின் கடன் நிதியிடல் திட்டங்கள், உடன்படிக்கைகளுக்கு இணங்கி ஒழுகுதல் ஆகியவற்றைக் கவனத்தில் கொள்கின்றது. செயற்படு மூலதன முகாமைத்துவத்திற்குத் தேவையான மீதிக்கு மேலதிகமாக வைத்திருக்கும் மிகையான காசு கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு பொருத்தமான முதிர்ச்சியைக் கொண்ட வட்டி வருமானத்தை ஈட்டுவதற்காக கால வைப்புக்கு மாற்றப்படுகின்றது.

## 6 தொடர்பான தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

| தொடர்பாளர் பெயர் | பதவி | கொடுக்கல் வாங்கலின் தன்மை |
|---|---|---|
| திரு. நந்த முறுத்தெட்டுவேகம | தலைவர் | இல்லை |
| திரு. டபிள்யு. ஜயசிறி | பணிப்பாளர் சபை உறுப்பினர் | இல்லை |
| தீபிகா பிரியதர்ஷனி பீரிஸ் | பணிப்பாளர் சபை உறுப்பினர் | இல்லை |
| திருமதி சந்திரிகா குலதிலக | திறைசேரி உறுப்பினர் | இல்லை |
| டாக்டர். அருந்ததி ஸ்ரீரங்கநாதன் | பணிப்பாளர் சபை உறுப்பினர் | இல்லை |
| திரு. கித்சிறி சமரசிங்க | பணிப்பாளர் சபை உறுப்பினர் | இல்லை |

### குறிப்பு 1

வருவாய்

| விபரம் | 2015 | 2014 சீராக்கப்பட்டது | சீராக்கல் | 2014- அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| ஒலிபரப்பு நேர விற்பனை ஆசிய சேவை | 10,462,728 | 16,854,261 | (670,792) | 17,525,053 |
| T.W.R. ஒலிபரப்பு நேர விற்பனை | 86,026,727 | 77,034,801 | | 77,034,801 |
| உள்நாட்டு சேவை ஒலிபரப்பு நேர விற்பனை | 358,846,836 | 433,169,865 | 1,943,769 | 431,226,096 |
| உற்பத்திக் கட்டணம் - உள்நாட்டு சேவை | 4,668,083 | 4,863,033 | | 4,863,033 |
| மரண அறிவித்தல்கள் | 3,992,713 | 4,322,106 | | 4,322,106 |
| FEBA ஒலிபரப்பு நேர விற்பனை | 2,084,309 | 3,111,968 | (270,736) | 3,382,704 |
| PCJ வருமானம் | - | 193,530 | 61,260 | 132,270 |
| | 538,486,063 | 517,749,399 | 2,045,090 | 515,704,309 |

### குறிப்பு 2

விற்பனைக் கிரயம்

| விபரம் | 2015 | 2014 |
|---|---|---|
| சம்பளம், வேதனம், படி | 298,565,304 | 195,667,088 |
| ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு | 31,311,333 | 26,583,887 |
| நம்பிக்கை நிதிய பங்களிப்பு | 6,227,520 | 4,924,964 |
| போக்குவரத்து மற்றும் வாழ்க்கைப்படி | 742,040 | 773,952 |
| நிகழ்ச்சித்திட்டச் செலவு | 7,894,294 | 11,288,409 |
| நிவாரண பணியாளர்கள் | 10,147,325 | 14,569,139 |
| வாகன ஓட்டச் செலவு | 4,044,015 | 7,785,725 |
| பராமரிப்புக் கிரயம் | 3,970,502 | 12,853,663 |
| மின்சாரம் | 95,784,174 | 112,512,994 |
| | **458,736,507** | **386,959,821** |

## குறிப்பு 3

ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள்

| விபரம் | 2015 | 2014 சீராக்கப்பட்டது | சீராக்கல் | 2014- அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| கடன்களுக்கான வட்டி | 3,207,498 | 2,936,467 | | 2,936,467 |
| பலவின வருவாய் (வேறு) | 59,186,605 | 53,233,894 | 1,609,942 | 51,623,952 |
| திரும்பிய காசோலைகள் தண்டம் | 21,062 | 25,774 | | 25,774 |
| வீட்டு வாடகை | 160,390 | 106,381 | 85,430 | 20,951 |
| விசேட ஒலிப்பதிவுகள் | 181,479 | 207,086 | | 207,086 |
| தாமதித்த உரிமத்துக்கான தண்டம் | - | 8,571 | | 8,571 |
| இறகுமதியாளர்கள், வியாபாரிகள், | 7,336,343 | 8,715,940 | | 8,715,940 |
| ஒலிநாடா விற்பனை | 4,721,083 | 1,051,394 | (22,321) | 1,073,715 |
| தண்டக்கணக்கு | 1,171,160 | 1,799 | | 1,799 |
| சுற்றுலா விடுதி வருமானம் - அம்பேவெல | 80,053 | 802,954 | | 802,954 |
| வெளியீடுகள் விற்பனை | 341,360 | 277,767 | | 227,767 |
| வருமானம் - திருகோணமலை கருத்திட்டம் | 152,703,817 | 106,250,724 | 246,327 | 106,004,397 |
| **உப மொத்தம்** | **229,110,850** | **173,568,751** | **1,919,378** | **171,649,373** |
| அரச மானியத்தின் காலத்தேய்மானம் | 57,975,190 | 62,272,581 | | 62,272,581 |
| காலத்தேய்மான மானியம் - திருகோணமலை | 177,769,097 | 177,769,097 | | 177,769,097 |
| **உப மொத்தம்** | **235,744,288** | **240,041,678** | | **240,041,678** |
| **முழு மொத்தம்** | **464,855,137** | **413,610,429** | **1,919,378** | **411,691,051** |

## குறிப்பு 3.1

அரசாங்க மானியம்

| அரசாங்க மானியம் | 2015 | 2014 |
|---|---|---|
| உரிமக் கட்டணங்களுக்கான அரசாங்க மானியம் | 350,000,000 | 218,160,000 |
| | 350,000,000 | 218,160,000 |

வானொலி உரிமத்துக்குப் பதிலாக அரசிடமிருந்து ரூபா 350 மில்லியன் கிடைத்தது.

## குறிப்பு 4

வினியோகக் கிரயம்

| விபரம் | 2015 | 2014 சீராக்கப்பட்டது | சீராக்கல் | 2014- அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| வணிக மேம்பாட்டுச் செலவு | 1,313,059 | 3,452,297 | | 3,452,297 |
| ஒலிபரப்பு நேர விற்பனைத் தரகு (உள்நாடு) | 55,605,185 | 55,657,241 | 12,000 | 55,645,241 |
| ஒலிபரப்பு நேர விற்பனைத் தரகு (வெளிநாடு) | 733,480 | 2,062,577 | | 2,062,577 |
| அறவிட முடியாத மற்றும் ஐயக்கடன் ஏற்பாடு | 3,775,144 | 2,541,373 | | 2,541,373 |
| நிகழ்ச்சித்திட்டச் செலவினம் (கிரிக்கெட், கலைஞர்) | 12,382,769 | 11,249,291 | (6,115,497) | 17,364,788 |
| | **73,809,637** | **74,962,779** | **(6,103,497)** | **81,066,276** |

## குறிப்பு 5

ஏனைய தொழிற்பாட்டுச் செலவினங்கள்

| விபரம் | 2015 | 2014 சீராக்கப்பட்டது | சீராக்கல் | 2014- அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| வெளி ஒலி. நிலையத்துக்கான பங்களிப்பு | 714,622 | 1,069,410 | (1,364,875) | 2,434,285 |
| செய்திச்சேவை மற்றும் செய்திச் சுருக்கம் | 1,121,260 | 1,114,865 | | 1,114,865 |
| விளம்பரங்களும் பிரச்சாரமும் | 727,186 | 583,665 | (3,008,495) | 583,665 |
| மின்சாரமும் மின்வலுவும் | 13,027,437 | 16,987,410 | | 19,995,905 |
| தபால் கட்டணம், தொலைபேசி | 12,826,646 | 11,298,514 | | 11,298,514 |
| அச்சிடல் மற்றும் எழுதுகருவிகள் | 3,445,171 | 5,261,523 | | 5,261,523 |
| மோட்டார் வாகன ஓட்டச் செலவு | 15,468,658 | 13,684,531 | 232,573 | 13,684,531 |
| ஒலிபரப்புக் கருவி திருத்தம், பேணல் | 406,319 | 2,051,812 | | 1,819,239 |
| இசைக்கருவி திருத்தம், பேணல் | - | 56,100 | 92,943 | 56,100 |
| தளபாடம் பொருத்துகை திருத்தம், பேணல் | 9,413,072 | 8,347,386 | | 8,254,443 |
| கட்டிடம் தோட்டம் - திருத்தம், பராமரிப்பு | 4,740,838 | 3,610,881 | | 3,610,881 |
| தேய்வு | 43,621,211 | 49,979,022 | (26,038) | 50,005.060 |
| தேய்வு – திருகோணமலை | 182,364,130 | 181,562,083 | 3,031,039 | 178,531,044 |
| திருகோணமலை – செலவினம் | 88,143,179 | 89,393,115 | | 89,393,115 |
| வரிவிதிப்பு (பொரு. சே. கட்டணம்) | 1,807,365 | 1,567,826 | (4,705,472) | 6,273,298 |
| நேயர் ஆய்வு மற்றும் சந்தை ஆராய்ச்சி | - | (650) | (14,250) | 13,600 |
| வாகன வாடகை கட்டணம் | 284,140 | 6,203,846 | | 6,203,846 |
| முத்திரைக் கட்டணம் | 108,421 | 134,303 | | 134,303 |
| வானொலி அலைவரிசைக் கட்டணம் | 15,000,000 | 15,000,000 | - | 15,000,000 |
| | **393,219,653** | **407,905,643** | **(5,762,574)** | **413,668,217** |

## குறிப்பு 6

நிர்வாகச் செலவு

| விபரம் | 2015 | 2014 சீராக்கப்பட்டது | சீராக்கல் | 2014- அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| படிகள் - கூ.தா. தலைவர், ப.ச. உறுப்பினர் | 800,000 | 2,069,200 | | 2,069,200 |
| சம்பளங்கள், வேதனங்கள், படிகள் | 185,115,252 | 158,625,985 | | 158,625,985 |
| ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு | 24,130,194 | 26,316,412 | | 26,316,412 |
| ஊழியர் நம்பிக்கைப் பொ. நிதிய பங்களிப்பு | 4,810,786 | 7,172,723 | | 7,172,723 |
| பணியாளர் மேலதிக வேலை | 21,818,873 | 19,244,178 | | 19,244,178 |
| நிவாரணப் பணியாளர்கள் | 14,754,425 | 19,202,221 | | 19,202,221 |
| ஒப்பந்தப் பணியாளர் வேதனம் | 17,520,166 | 29,505,949 | | 29,505,949 |
| பணியாளர் பயிற்சிக் கட்டணம் (உள்நாடு) | - | 42,500 | | 42,500 |
| போக்குவரத்து மற்றும் சீவனம் | 1,806,463 | 1,669,304 | | 1,669,304 |
| (உ.வெ.நாடு) | 2,624,761 | 2,490,725 | | 2,490,725 |
| விடுமுறை தின சம்பளம் | 23,335,178 | 44,218,603 | | 44,218,603 |
| பணிக்கொடை | 392,416 | 730,702 | | 730,702 |
| தலைவரின் உபசரிப்பு | 100,380 | 233,567 | | 233,567 |
| பணிப்பாளர் நாயகத்தின உபசரிப்பு | 1,035,829 | 1,277,041 | | 1,277,041 |
| சேமநலன் | | | | |
| மருத்துவச் சேவை | 189,686 | 157,890 | | 157,890 |
| பொதுக்கட்டணங்கள் | 1,901,027 | 1,705,107 | | 1,705,107 |
| வாடகை, வீதம், வரிகள் | 7,544,056 | 7,035,380 | | 7,035,380 |
| காப்புறுதி | 2,311,495 | 2,428,299 | | 2,428,299 |
| கணக்காய்வுக் கட்டணம் | 600,000 | 550,000 | | 550,000 |
| சட்டக் கட்டணங்கள் | 1,551,475 | 2,039,208 | | 2,039,208 |
| வெளியீடுகளும் பருவ இதழ்களும் | 477,845 | 455,222 | | 455,222 |
| பணிக்கொடை, நீதிமன்ற கட்டண தண்டம் | 862,602 | 1218,609 | | 1,218,609 |
| | **313,682,908** | **328,388,825** | **-** | **328,388,825** |

6.1) 2015ஆம் ஆண்டில் பணியாளர் தொகுதி உறுப்பினர்களின் உறவினர்களின் மரண அறிவித்தல்களுக்காக கூட்டுத்தாபனத்துக்கு ரூபா 846,545.94 செலவு ஏற்பட்டது. இந்த விளம்பரங்கள் தற்போது வலுவில் உள்ள திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இது ஒவ்வொரு வருடமும் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும்.

## நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்குகள்

உயர் நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஒரு வழக்கின் நிலைமை பின்வருமாறு: அது மாவட்ட நீதிமன்ற வழக்கொன்றில் முறைப்பாட்டாளருக்கு சட்ட ரீதியான வட்டியுடன் ரூபா 10,000,000 வழங்குமாறு அளிக்கப்பட்ட மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் 23089/MR இன் தீர்ப்பை இரத்துச்செய்யுமாறு கோரி கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடாகும்.

ஒரு வழக்கில் வட்டியுடன் 8 மில்லியனும் மற்றுமொரு வழக்கில் ரூபா ஐ.அ.டொ. 26775இல் இருந்து வட்டியுடனும் 10மூ தரகுடனும் ரூபா 5,917,275 கோரப்படுகின்றன.

மாகாண மேல் நீதிமன்றத்தில் ஐந்து வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஐந்து வழக்குகள் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவற்றுள் இரண்டு வழக்குகளின் நிலைமை பின்வருமாறு:

நீதிவான் நீதிமன்றத்தில் ஐந்து வழக்குகளும் தொழில் திணைக்கள நடுத்தீர்ப்புக்காக இரண்டு வழக்குகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

## குறிப்பு 7

நிதிச்செலவுகள்

| விபரம் | 2015 | 2014 சீராக்கப்பட்டது | சீராக்கல் | 2014- அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 480,945 | 490,217 | | 490,217 |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 4,461,314 | 5,683,109 | | 5,683,109 |
| செலாவணி இலாபம் / நட்டம் | 176,576 | 180,864 | 10,292 | 170,572 |
| கடன் அட்டைத் தரகு | 49,562 | 48,521 | | 48,521 |
| குத்தகை வட்டி | 1,045,145 | 2,490,894 | | 2,490,894 |
| | 6,213,541 | 8,893,605 | 10,292 | 8,883,313 |

## குறிப்பு 8

**(i)** வருமான வரி

| | 2015 | 2014 |
|---|---|---|
| கணக்குகளின் பிரகாரம் தேறிய இலாபம்/ நட்டம் | **(287,725,712)** | **(253,950,680)** |
| கூட்டுக. | | |
| அனுமதிக்க முடியாத செலவினங்கள் | | |
| தேய்வு | 43,621,211 | 49,979,022 |
| தேய்வு - திருகோணமலை | 182,364,130 | 181,562,083 |
| அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு | 3,775,144 | 2,541,373 |
| பணிக்கொடை ஏற்பாடு | 23,335,178 | 44,218,603 |
| கேளிக்கை | 492,796 | 964,269 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 1,807,365 | 1,567,826 |
| | **255,395,823** | **280,833,176** |
| கழிக்க. | | |
| அனுமதிக்க கூடிய செலவினங்கள் | | |
| மூலதன செலவினம் | 132,192,315 | 126,177,289 |
| குத்தகை | 9,092,168 | 16,266,392 |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | 6,668,767 | 10,104,537 |
| அரச மானியம் | 350,000,000 | 218,160,000 |
| வரி விதிக்கக்கூடிய இலாபம் / நட்டம் | **497,953,250** | **370,708,218** |
| முன் கொண்டுவந்த வரி நட்டம் | (530,283,139) | (343,825,721) |
| முன் கொண்டு சென்ற மொத். வரி நட்டம் | (2,925,291,412) | (2,799,625,691) |
| வருமான வரி ஏற்பாடு | (3,455,574,551) | (3,143,451,412 |

வருமானத்தில் இருந்து கிடைக்கும் இலாபத்தில் 28% வரியைச் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனம் கடமைப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்தின் சீராக்கம் செய்யப்பட்ட வரி விதிக்கக்கூடிய இலாபத்தின் பிரகாரம் இந்த நிதிக்கூற்றுகளில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ii.** பிற்போடப்பட்ட வரி இ.க.நி. 12இன் பிரகாரம் தாமதித்த வரியை கணித்து, பரிசீலித்து அங்கீகரிக்கப்படுகின்றது.

## தாமதித்த வரிச் சொத்துகளும் பொறுப்புகளும்

| | 2015 | 2014 |
|---|---|---|
| நிதி நிலைமை | | |
| தாமதித்த வரிப் பொறுப்புகள் | 75,733,399 | 85,864,191 |
| தாமதித்த வரிச் சொத்துகள் | 409,678 | (945,105) |
| தேறிய தாமதித்த வரிச் சொத்துகள் | 76,143,077 | 84,919,086 |
| | | |
| விரிவான வருமானக் கூற்று | | |
| தாமதித்த வரிப் பொறுப்புகள் | 10,130,792 | (20,216,510) |
| தாமதித்த வரிச் சொத்துகள் | (1,354,783) | (194,253) |
| தேறிய தாமதித்த வருமான வரி வருமானம் / (செலவுகள்) | 8,776,009 | (20,410,762) |

## குறிப்பு 9

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கொண்டு செல்லும் கணக்கு கிரயத்தில் | 01.01.2015இல் மீதி ரூபா | கூட்டுதல் /மாற்றங்கள் ரூபா | கையுதிர்ப்புகள் /மாற்றங்கள் ரூபா | 31.12.2015 இல் மீதி ரூபா | தேய்வுக்கான ஏற்பாடு 2015.01.01 ரூபா | காலப்பகுதிக்கான கட்டணம் ரூபா | கையுதிர்ப்புகள் /மாற்றங்கள் ரூபா | தேய்வுக்கான ஏற்பாடு 2015.12.31 ரூபா | 2015.12.31இல் இருந்தவாறு NBW |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காணி | 7,764,234 | | | 7,764,234 | | | | | 7,764,234 |
| கட்டிடம் | 168,293,637 | 630,340 | | 168,293,977 | 115,700,574 | 3,829,565 | | 119,530,139 | 49,393,838 |
| பொறிகள், இயந்திரங்கள் | 594,220,928 | 551,832 | | 594,772,760 | 477,286,391 | 4,801,777 | | 482,088,168 | 112,684,592 |
| சங்கீத உபகரணங்கள் | 6,859,440 | 381,750 | | 7,241,190 | 6,685,778 | 68,092 | | 6,753,870 | 487,320 |
| மோட்டார் வாகனங்கள் | 35,326,129 | 12,890,000 | 5,445,300 | 42,770,829 | 60,446,626 | 3,914,049 | 166,342 | 64,194,333 | 12,321.353 |
| நிதிக்குத்தகை, வாகனம் | 33,744,857 | | | 33,744,857 | | - | | | |
| தளபாடங்கள்,பொருத்திகள் | 131,899,640 | 325,017 | 25,267 | 132,199,390 | 107,686,827 | 3,851,468 | | 111,538,295 | 20,661,095 |
| பதிவு நாடாக்கள் | 24,924,554 | 195 | | 24,924,749 | 24,649,395 | 130,722 | | 24,780,117 | 144,633 |
| செவிப்புல அலைவரிசை | 880,077,488 | 1,300,545 | 277,736 | 881,100,296 | 726,472,007 | 8,782,363 | 26,038 | 735,228,332 | 145,871,963 |
| ஒலிபரப்பு இயந்திரம் | 1,410,610,705 | 3,137,664 | | 1,413,748,369 | 960,781,012 | 17,099,516 | | 977,880,528 | 435,867,842 |
| கணனி உபகரணங்கள் | 35,056,456 | 1,737,980 | 132,943 | 36,661,492 | 32,762,709 | 1,143,659 | 20,687 | 33,885,681 | 2,775,811 |
| நூலக புத்தகங்கள் | 447,760 | 14,582 | | 462,342 | | - | | | 462,342 |
| சிறிய கருவிகள் | 107,675 | - | | 107,675 | 103,570 | 0 | | 103,570 | 4,105 |
| | 3,329,333,504 | 20,969,905 | 5,881,246 | 3,344,422,163 | 2,512,574,889 | 43,621,211 | 2,236,721 | 2,505,956,732 | 788,439,130 |

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கொண்டு செல்லும் கணக்கு கிரயத்தில் | 01.01.2015 இல் மீதி ரூபா | கூட்டுதல் /திருமலை சொத்துகள் ரூபா | கையுதிர்ப்புகள் /மாற்றங்கள் ரூபா | 31.12.2015 இல் மீதி ரூபா | தேய்வுக்கான ஏற்பாடு 2015.01.01 ரூபா | காலப்பகுதிக்கான கட்டணம் ரூபா | கையுதிர்ப்புகள் /மாற்றங்கள் ரூபா | தேய்வுக்கான ஏற்பாடு 2015.12.31 ரூபா | 2015.12.31 இல் இருந்தவாறு NBW |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொறிகள், இயந்திரங்கள் | 203,231,757 | | | 203,231,757 | 45,727,145 | 15,242,382 | | 60,969,527 | 142,262,229.88 |
| மோட்டார் வாகனங்கள் | 4,344,000 | | | 4,344,000 | 3,258,001 | 1,086,000 | | 4,344,000 | - |
| தளபாடங்கள், பொருத்திகள் | 3,228,585 | | | 3,228,585 | 726,432 | 242,143 | | 968,575 | 2,260,009.52 |
| அலுவலக உபகரணங்கள் | 8,848,274 | | | 8,848,274 | 2,654,482 | 884,828 | | 3,539,310 | 5,308,964.39 |
| மின்பிறப்பாக்கிகள் | 234,689,948 | | | 234,689,948 | 52,804,174 | 17,601,747 | | 70,405,921 | 164,284,027.37 |
| செவிப்புல அலைவரிசை | 57,280,268 | 2,971,884 | | 60,252,153 | 12,888,060 | 4,426,040 | | 17,314,100 | 42,938,052.39 |
| ஒலிபரப்பு இயந்திரம் | 1,675,041,153 | 10,255,476 | | 1,685,296,629 | 374,758,672 | 125,912,811 | | 500,671,483 | 1,184,625,145.39 |
| கணனி உபகரணங்கள் | 73,612,786 | | 12,124,157 | 61,488,629 | 73,612,786 | | 12,124,157 | 61,488,629 | - |
| சிறிய கருவிகள் | 5,266,693 | | | 5,266,693 | 1,185,006 | 395,002 | | 1,580,008 | 3,686,685.07 |
| கருவிகள் | 180,56 | | | 180,561,849 | 40,343,099 | 13,542,138 | | 53,885,237 | 126,676,611.78 |
| | 1,849 | | | | | | | | |
| | **2,446,105,316** | **13,227,360** | 12,124,157 | **2,446,208,516** | **607,957,857** | **179,333,090** | | **775,166,790** | **1,672,041,725.79** |

## குறிப்பு 10

நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை

| தேய்வு | 2015 | 2014 |
|---|---|---|
| கணக்கீட்டு மென்பொருள் | 584,178 | 1,167,555 |
| கோப்பாய் ஒலிபரப்புக் கருவி மற்றும் ஒலிபரப்பு நிலையம் | 4,800,652 | 7,648,693 |
| புதிய கட்டிடத்தொகுதி | 150,000,000 | 130,000,000 |
| கரகஹதென்ன கருத்திட்டம் | 99,186,681 | 2,796,441 |
| யட்டியன்தொட்ட கருத்திட்டம் | | 567,785 |
| | **254,571,510** | **142,180,474** |

## குறிப்பு 11

முதலீடு

| தேய்வு | 2015 | 2014 |
|---|---|---|
| லங்கா புவத் லிமிரெட் நிறுவனத்தில் முதலீடு | 1,000,000 | 1,000,000 |

## குறிப்பு 12

வணிக மற்றும் ஏனைய வருமதிகள்

| விபரம் | 2015 | 2014 சீராக்கப்பட்டது | சீராக்கல் | 2014- அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| கடனாளி ஒலிபரப்பு நேரம் | 185,588,450 | 198,606,985 | 1,246,249 | 197,360,736 |
| கழிக்க: நிதிச்சொத்து சேதம் | (103,958,917) | (100,183,473) | 124,258 | (100,307,731) |
| பணியாளர் கடன் | 7,014,067 | 6,745,921 | | 6,745,921 |
| ஏனைய பணியாளர் முற்பணம் | 8,052,588 | 8,653,983 | (454,000) | 9,107,983 |
| பணியாளர் கடனாளிகள் ஊ.சே.நி. | 316,917 | 319,973 | | 319,973 |
| முற்பணக் கொடுப்பனவு | 22,008 | 0 | | - |
| வழங்குனர் முற்பணக் கொடுப்பனவு | 8,253,223 | 2,793,558 | | 2,793,558 |
| நானாவிதக் கடனாளிகள் | 22,127,730 | 23,198,752 | 3,125,709 | 20,073,043 |
| மதிக்கப்படாத காசோலைகள் | 3,306,373 | 3,906,340 | (15,000) | 3,921,340 |
| P.M.G நடைமுறைக் க.கு. மரண அறிவித்தல்கள் | 7,997,854 | 7,997,854 | | 7,997,854 |
| லக்ஹண்ட கிளைக் கணக்கு | 12,807,862 | 12,807,862 | | 12,807,862 |
| G.S.T. கட்டுப்பாட்டுக் கணக்கு | 237,267 | 237,267 | | 237,267 |
| கிடைக்கவேண்டிய வருமானம் (ஏனையவை) | 31,255,572 | 10,446,469 | 2,583,860 | 7,862,609 |
| நிறுத்தி வைத்தல் வரி | 32,876,217 | 32,861,470 | | 32,861,470 |
| P.M.G நடைமுறைக் க.கு. உரிமக் கட்டணம் | 195,700 | 195,700 | | 195,700 |
| ஒதுக்குக் கணக்கு | 221,965 | 221,965 | | 221,965 |
| ஒதுக்குக் கணக்கு (சிறாப்பர்) | 281,110 | 281,110 | | 281,110 |
| தாமதித்த வருமானம் | - | 5,102,000 | | 5,102,000 |
| ஏனைய வைப்புகள் | 9,244,962 | 9,264,962 | | 9,264,962 |
| | 225,841,248 | 223,458,698 | 6,611,076 | 216,847,622 |

## குறிப்பு 13

வழிச்சரக்கு

| தேய்வு | 2015 | 2014 சீராக்கப்பட்டது | சீராக்கல் | 2014- அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| வழிச்சரக்கு | 4,852,069 | 5,294,505 | (202,306) | 5,501,811 |
| மொத்தம் | 4,852,069 | 5,294,505 | (202,306) | 5,501,811 |

## குறிப்பு 14

காசும் காசுக்குச் சமனானவையும்

| விபரம் | 2015 | 2014 |
|---|---|---|
| இலங்கை வங்கி – மாத்தறை | 7,726 | 61,150 |
| மக்கள் வங்கி – சர்வதேசப் பிரிவு | 233,087 | 194,498 |
| இலங்கை வங்கி – ரொறிங்டன் - பிரதான கணக்கு | 17,020,694 | (48,087,342) |
| ஸ்ரேற் பேங் ஒப் இந்தியா | 377,104 | 377,104 |
| இலங்கை வங்கி – அனுராதபுரம் | 12,510 | (16,020) |
| இலங்கை வங்கி – கண்டி | 153,815 | 982,282 |
| நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி | 11,597,272 | 6,840,698 |
| இலங்கை வங்கி – ரொறிங்டன் - வானொலி அனுமதிப்பத்திரக் க.கு | 6,737,471 | 9,415,910 |
| இலங்கை வங்கி - ரொறிங்டன் - எப்.எம். கருத்திட்டம் | 1,429,088 | 1,626,410 |
| முற்பணக்காசு முறை | 132,760 | 205,530 |
| இலங்கை வங்கி – ரொறிங்டன் - ஒலிநாடா விற்பனை | 5,895,640 | 10,581,799 |
| இலங்கை வங்கி – சென்னை | 1,093,081 | 980,886 |
| காசுப் புத்தகம் - திருகோணமலை கருத்திட்டம் | 18,255,485 | 11,083,809 |
| இலங்கை வங்கி – யாழ்ப்பாணக் கிளை | 191,505 | |
| இலங்கை வங்கி – சேமிப்பு | 88,986 | 85,502 |
| நிலையான வைப்புகள் | 90,666,817 | 20,133,672 |
| சென்சும | 322,147 | 322,147 |
| எல்லைக் கணக்கு (மக்கள் வங்கி) | 106,636,263 | 86,308,377 |
| | **206,851,452** | **101,096,412** |

## குறிப்பு 15

நிறுத்திவைத்த வருவாய்

| விபரம் | 2015 | 2014 |
|---|---|---|
| வருமான ஒதுக்கம் ஜனவரி 01 | (248,365,120) | (219,291,349) |
| வருமான ஒதுக்க சீராக்கம் | 45,168,281 | 33,356,642 |
| வருமான ஒதுக்கம் | 71,050,297 | (56,201,442) |
| வருமான ஒதுக்கம் சீராக்கம் 2015 | (41,966,329) | (6,228,972 |
| மொத்தம் | (174,112,871) | (248,365,120) |

## குறிப்பு 16

வணிக மற்றும் ஏனைய சென்மதிகள்

| விபரம் | 2015 | 2014 சீராக்கப்பட்டது | சீராக்கல் | 2014- அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| கடன் கொடுத்தோன் ஒலிபரப்பு நேர விற்பனை | 18,047,401 | 23,590,565 | 15,817,953 | 7,772,612 |
| மீளளிக்கக்கூடிய நானாவித வைப்புகள் | 9,794,054 | 9,604,054 | (398,675) | 10,002,729 |
| திரண்ட செலவினங்கள் | 208,858,288 | 202,235,289 | (44,274,727)) | 246,510,016 |
| ஊ.சே.நி. | 3,584,749 | 3,863,076 | | 3,863,076 |
| கோரப்படாத சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | - | 0 | (487,477) | 487,477 |
| நானாவித கடன்கொடுத்தோர் | 14,789,451 | 20,411,022 | 229,696 | 20,181,326 |
| நானாவித கடன்கொடுத்தோர் | 10,000 | 10,000 | | 10,000 |
| பாதுகாப்பு வைப்பு | 630,472 | 892,957 | (2,414) | 895,371 |
| சென்சும - சுனாமி | 322,147 | 322,147 | | 322,147 |
| Radio Deuche Welle | 16,932,095 | 16,932,095 | | 16,932,095 |
| குத்தகைக் கணக்கு | 4,709,287 | 8,262,080 | 215,058 | 8,047,022 |
| கடனாளி கட்டுப்பாட்டுக் க.கு | 114,400 | 0 | | |
| ரஜரட்டை சுற்றுலா விடுதி | 175,536 | 280,124 | 10,028 | 270,096 |
| | 277,967,880 | 286,403,409 | (28,890,558) | 315,293,967 |

## குறிப்பு 17
நிதி அல்லாத பொறுப்புகள்

| விபரம் | 2015 | 2014 சீராக்கப்பட்டது | சீராக்கல் | 2014- அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| தேசிய பாதுகாப்பு வரி | 15,007,806 | 15,007,806 | | 15,007,806 |
| தேசத்தைப் பாதுகாத்தல் நிதியம் | (12,418) | (12,418) | | (12,418) |
| பணம் பெறுநர் வரி | 147,661 | (28,258) | 163,840 | (192,098) |
| நிறுத்திவைத்தல் வரி | - | 133,967 | | 133,967 |
| சேர் பெறுமதி வரி கட்டுப்பாட்டுக் க.கு | 20,478,861 | 34,066,183 | (170,847) | 34,237,030 |
| ESC | 53,176,337 | 51,368,972 | (6,672,362) | 58,041,334 |
| NBT | 48,976,562 | 40,410,213 | 7,368 | 40,402,845 |
| தேசிய பாதுகாப்பு நிதியம் | 2,835 | 2,835 | | 2,835 |
| வருமான வரி ஏற்பாடு | 692,759 | 692,759 | | 692,759 |
| உள்.இறை.திணை. முத். வரி | 50 | - | | |
| | 138,470,454 | 141,642,059 | (6,672,001) | 148,314,060 |

## குறிப்பு 18
நிதிக்குத்தகை

| விபரம் | 2015 | 2014 |
|---|---|---|
| நிதிக்குத்தகை (மோட்டார் வாகனம்) ஆண்டு சீராக்கத்தில் சேர்த்தது | 13,977,801 | 30,244,193 |
| | 13,977,801 | 30,244,193 |
| குத்தகைக் கட்டணம் | (9,092,168) | (16,266,392) |
| **கழிக்க** | 4,885,633 | 13,977,801 |
| குத்தகை வட்டி ஒதுக்குக் கணக்கு | (176,345) | (1,221,490) |
| | 4,709,288 | 12,756,311 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 4,709,288 | 8,047,022 |
| நடைமுறையல்லாத பொறுப்புகள் | - | 4,709,288 |

# நிதிக்கூற்றுகள் பற்றிய குறிப்புகள்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } எம்ஈடீ/ஏ/எஸ்எல்பீசீ/1/15/379

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2017 செப்தம்பர் 30

CHAIRMAN'S OFFICE RECEIVED 21 NOV 2017 SRI LANKA BROADCASTING CORPORATION

ශ්‍රී ලංකා ගුවන් විදුලි සංස්ථාව 23 NOV 2017 පාලන අංශය

தலைவர்,

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1966 இன் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தான அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

DIRECTOR GENERAL'S OFFICE RECEIVED 22 NOV 2017 Sri Lanka Broadcasting Corporation Colombo 07.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் 11 மற்றும் 12 ஆம் பந்திகளின் பிரகாரம், வானொலி சேவைகளுக்காக சுய இயக்க வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக முன்னைய ஆண்டுகளில் செலவிடப்பட்ட ரூபா 3,400,000 தொகையான பணம் அருவச் சொத்தொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்குப் பதிலாக கணனி உபபாகங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டு பெறுமானத்தேய்வு ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலும் ஒலிபரப்புக் கால விற்பனை கடன்பட்டோர் மீதிகளுக்குரிய பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிப் பெறுமதிகள் கடன்பட்டோர் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தமையின் காரணத்தால் பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிக் கணக்கு மற்றும் கடன்பட்டோர் கணக்குகள் முறையே ரூபா 22,911,452 தொகை, ரூபா 2,033,946 மற்றும் ரூபா 24,945,398 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகம் ஆகியவற்றுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யும் நடைமுறைக் கணக்கினை இணக்கம் செய்து, கணக்குகளில் சீராக்கம் செய்யாமல் தலைமை அலுவலகத்தின் நடைமுறைக் கணக்குகளில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 6,046,009 தொகையான செலவு மீதியானது ஆண்டிறுதியின் ஒலிபரப்புக் கால விற்பனை கடன்பட்டோருடன் சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டுக்குரிய உலக கிண்ண கிரிக்கெட் ஒளிபரப்பு உரித்தினை பெற்றுக்கொள்வதற்கான ஆதாய உரித்திற்காக (Royalty) முன்னைய ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 16,854,787 தொகை முற்பணமாக செலுத்திய கொடுப்பனவாக கணக்கு வைப்பதற்கு பதிலாக, அந்த ஆண்டின் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதனை திருத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,605,497 தொகை மாத்திரம் சீராக்கம் செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 11,249,290 இனால் குறைவடைந்திருந்தது.

(ஈ) வாடகை அடிப்படையிலான ஒப்பந்தத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 5,977,000 தொகையான மோட்டார் வண்டியொன்றின் ஒப்பந்தக்காலம் 2015 பெப்ரவரி மாதத்தின் போது நிறைவடைந்திருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் அதன் பெறுமதி வாடகை அடிப்படையிலான மோட்டார் வாகன கணக்கிலிருந்து, மோட்டார் வாகனக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டினுள் கூட்டுத்தாபனத்தின் நிரந்தர ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 12,697,500 தொகையான மிகையூதிய கொடுப்பனவு விரிவான வருமானக்கூற்றின் தனியானதொரு விடயத்தின் கீழ் வெளிப்படுத்தப்படாமல் சம்பளம், ஊதியம் மற்றும் படிகள் கணக்கின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.2.3. விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மதிப்பிழந்த காசோலைகள், ஊழியர் கடன், ஊழியர் நானாவித முற்பணங்கள் மற்றும் நானாவித வைப்பகளிற்கான பட்டோலைகளின் ரூபா 14,726,349 கூட்டுத்தொகையான இணங்காணப்படாத மீதிகள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகளுக்கு சமப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.4 தொங்கல் கணக்கு

21 வருடங்களுக்கு முன்பு மற்றும் 2007 ஆம் ஆண்டின் போது இணங்காணப்பட்ட ரூபா 503,075 கூட்டுத்தொகையான நிதி மோசடியொன்று தொடர்பில் உரிய நபர்களிடம் பணம் அறவிடப்படாமல் நிதிக்கூற்றுக்களில் தொங்கல் கணக்கின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 கணக்காய்வுகளுக்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு விடயங்களின் எதிராக காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையின் காரணத்தால் அந்த கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுபடுத்துவதற்கோ உறுதிப்படுத்தவோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 8,496,419 | வைப்புச் செய்யப்பட்ட திகதி மற்றும் வைப்புச் செய்தவரின் பெயர் உள்ளடங்கிய பட்டோலை. |
| (ஆ) | கடன்பட்டோர் (மரண அறிவித்தலுக்காக தபால் திணைக்களத்திடமிருந்து பெறவேண்டிய பணம்) | 7,997,854 | எழுத்துமூல மீதிகளின் சான்றுபடுத்தலொன்று |
| (இ) | பெற வேண்டிய வைப்புக்கள் | 561,272 | வைப்புச் செய்யப்பட்ட திகதி, வைப்புக்கான காரணம், வைப்பச் செய்த இடம் மற்றும் பெறுமதியினை காண்பிக்கும் பட்டோலை அல்லது பதிவேடு |
| (ஈ) | நடைமுறை வேலைக்கான கொடுப்பனவுகள் | 150,000,000 | பற்றுச்சீட்டுக்கள், உறுதிச்சீட்டுக்கள், உத்தேச வேலைத்திட்டங்கள், செலவீன மதிப்பீடுகள், கொடுப்பனவுகளை அங்கீகரிக்கும் ஆவணங்கள் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | இனங்காணப்படாத கொள்வனவு முற்பணங்கள் (ஊழியர்) | 7,684,737 | முற்பணங்களை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் மற்றும் பெற்றுக்கொண்ட பணம் |
| (ஊ) | கொடுப்பனவு | 5,684,567 | 68 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் |
| (எ) | 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் காணப்படும் வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் (லக்ஹண்ட கிளைக் கணக்கு) | 12,807,802 | கோவைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (ஏ) | 02 பேரேட்டுக் குறிப்புக்களின் மூலம் கணக்குகளை சீராக்குதல் | 3,842,756 | செலவினங்களை சான்றுறிதிப்படுத்துவதற்கான எழுத்து மூல சான்றுகள் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஒலிபரப்புக் கால விற்பனை கடன்பட்டோர்களின் கூட்டுத்தொகை ரூபா 188,894,823 ஆக இருந்ததுடன், மொத்தக் கடன்பட்டோர் மீதியில் ரூபா 67,513,771 தொகையாக மீதிகள் 10 வருடங்களை விட பழமையான மீதிகளாகும்.

(ஆ) குறுங்கால ஒளிபரப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஒளிபரப்புவதற்கு முன்னர் பணம் அறவிடாமையின் காரணத்தால், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 9,280,593 தொகையான பணம் பெற வேண்டியதாக காணப்பட்டது. கூட்டுத்தாபனத்தினால் இடமளிக்கப்பட்டுள்ள சராசரி கடன் கால எல்லையானது 02 மாதங்களாக இருந்த போதிலும், மேற்படி கடன் மீதியினுள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 835,611 தொகையும், 5 முதல் 10

வருடங்களுக்கிடைப்பட்ட ரூபா 5,313,172 தொகையும், 1 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 3,131,810 தொகையும் காணப்பட்டது.

(இ) 2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 1,677,600 பெறுமதியான கணக்காய்வு கட்டணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 03 மாதங்கள் முதல் 1 ½ வருடங்களை விஞ்சியிருந்த ரூபா 6,528,780 கூட்டுத்தொகையான வழங்கல் முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சேவை வழங்குனர் ஒருவருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சேவை உடன்படிக்கையிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையினை சரியாக பதிவு செய்யாமையால் அறவிடப்பட முடியாத ரூபா 631,200 தொகையான மீதியானது கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திடமிருந்தும், சுயாதீன தொலைக்காட்சி சேவையிலிருந்தும் பெறவேண்டிய மீதிகள் முறையே ரூபா 2,400,000 மற்றும் ரூபா 1,500,000 ஆக இருந்த போதிலும், அந்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய பெறுமதிகள் முறையே ரூபா 3,324,086 மற்றும் ரூபா 548,734 ஆக இருந்தது. மேலும், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின் பிரகாரம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற வேண்டிய தொகை ரூபா 1,990,119 ஆக இருந்த போதிலும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின் பிரகாரம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையொன்றினை காண்பிக்கவில்லை.

(எ) நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 208,858,288 தொகையான அட்டுறு செலவினத்தினுள் 2 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 11,970,861 தொகை உள்ளடங்கியிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த மீதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டிற்கான ஒலிபரப்புக் கோபுரங்களை குத்தகைக்கு வழங்கும் உடன்படிக்கைகளின் பிரகாரம், 16 குத்தகைகாரர்களிடமிருந்து ரூபா 1,600,000 தொகையான வைப்புத் தொகையொன்று அறவிடப்பட வேண்டியதாக இருந்த போதிலும், அந்த பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக சேவை வழங்குனர்களிமிருந்து அறவிடப்பட்ட ரூபா 48,976,562 தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படாமல், நிதியல்லாத பொறுப்பொன்றாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் நிதி நிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களின் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையிலும் மாற்றமடையாது தொடர்ந்தும் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்படும் ரூபா 14,455,573 கூட்டுப் பெறுமதியுடைய வரவு மற்றும் ரூபா 32,274,883 தொகையான 13 செலவினக்கணக்கு மீதிகள் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை VII அத்தியாயத்தின் 10.1 ஆம் பிரிவு | உத்தியோகத்தர் ஒருவர் தமது பணிகளை செயற்திறனாக நிறைவேற்றுவதன் மூலம் மற்றும் சம்பள ஏற்றங்களை ஈட்டக்கூடிய காலப்பகுதியினுள், முழுமையாக சேவையாற்றுவதன் மூலம் மாத்திரம் சம்பள ஏற்றம் ஈட்டப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணாக, சம்பள ஏற்றத் திகதியினை கவனத்தில் கொள்ளாது, பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் 2015 மே 25 ஆந் திகதி முதல் 30 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் 03 சம்பள ஏற்றங்கள் வீதம் வழங்கப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிபிரமாணக் கோவை.

| | |
|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 104 (1) (அ) | மீளாய்வாண்டின் போது 09 வாகனங்கள் அவசர விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும், அவை தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ii) நிதிப்பிரமாணம் 101 மற்றும் 110 | 2011 ஆம் ஆண்டின் போது வெளிவாரி ஒளிபரப்பு பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், சேதமடைந்த மற்றும் தொலைந்து போனதாக இனங்காணப்பட்டிருந்த 21 வகையான 77 விடயங்கள் தொடர்பில் பெறுமதி இனங்காணப்பட்டு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு தேவையான வழிமுறைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 371 (2) (இ) | ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா 774,617 தொகை குறித்த பணி நிறைவடைந்து 02 மாதங்கள் முதல் 04 வருடங்கள் வரையான காலம் தாமதித்து தீர்க்கப்பட்ட 38 சர்ந்தப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (iv) நிதிப்பிரமாணம் 381 (1) | திறைசேரியின் அங்கீகாரமின்றி 14 உள்நாட்டு வங்கி கணக்குகள் மற்றும் 02 வெளிநாட்டு வங்கி கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 170,051,875 ஆன மீதியொன்று காணப்பட்டது. |

(v) நிதிப்பிரமாணம் 396 (ஈ)

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வழங்கி 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 168,354 பெறுமதியான 62 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) நிதிப்பிரமாணம் 757

திருகோணமலை (டொயிஷ்வெல்) மறு ஒளிபரப்புக் கூடத்தில் ரூபா 2,447,208,516 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பில் பொருள் மெய்மையாய்வினை மேற்கொண்டு உரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை

(i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின்

8.2.2 .ஆம் பந்தி

நிதி அமைச்சரின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாமல் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டினுள் ரூபா 58,000,000 தொகையான பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

9.4 ஆம் பந்தி

நிறுவனத்தின் 05 ஊழியர்கள் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி அமைச்சின் சேவைகளுக்காக

| | |
|---|---|
| | விடுவிக்கப்பட்டு அதற்காக 04 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2,584,671 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 2/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | கையடக்க தொலைபேசியை கொள்வனவு செய்வதற்கான கிரயம் உரிய உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், குறித்த நிறுவனத்தால் மீளளிப்பு செய்யப்படகூடாது. எனினும், கூட்டுத்தாபனத்தினால் உத்தியோகத்தர்களுக்கு 24 கையடக்க தொலைபேசிகளை வழங்குவதற்காக 2012 ஒக்தோபர் முதல் 2016 மே மாதம் வரையிலும் ரூபா 522,249 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (iii) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 3.2 ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ வாகன வசதிகள் வழங்கப்பட்டிருந்த நான்கு உத்தியோகத்தர்களுக்காக அவர்களுக்குரிய எரிபொருள் லீட்டர் அளவினை விஞ்சி அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரமின்றி 9,904 லீட்டர் டீசலுக்காக ரூபா 1,180,672 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ஈ) 2005 யூன் 16 ஆந் திகதிய அமப/05/நானாவித (026) ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | மதியுரையாளர்களை நியமிப்பதற்காக கோரிக்கை விடுக்கும் போது பெயரிடப்படுபவரின் உயிரியல் தகவல்களுடன் அவர்களுக்கு கையளிப்பதற்கு நிமித்தமாக உள்ள பணிப்பொறுப்பு மற்றும் காலப்பகுதியுடனான பிரமாணக் குறிப்பொன்று சமர்ப்பிபிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் |

| | | |
|---|---|---|
| | | பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் அமைச்சரைவயின் அங்கீகாரமின்றி 04 ஆலோசகர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு ரூபா 1,670,000 கூட்டுத்தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (உ) | 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 1:1:6 (V) ஆம் பந்தி | அமைச்சரவை செயலாளரின் அங்கீகாரமின்றி கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்கள் இருவருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 270,000 தொகையான எரிபொருள் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 71,050,297 ஆன இலாபமொன்றாவதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டமானது ரூபா 56,201,442 ஆனமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 127,251,739 ஆன அதிகரிப்பொன்றை காட்டியது. மீளாய்வாண்டின் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 51,244,708 இனால் மற்றும் அரச மானியம் ரூபா 131,840,000 இனால் அதிகரித்தமை மற்றும் நிர்வாக செலவினம் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினம் ரூபா 29,391,907 இனால் குறைவடைந்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2011 ஆம் ஆண்டிற்கான தேறிய இலாபமொன்று ஏற்பட்டிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையிலும் தேறிய நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், மீண்டும் மீளாய்வாண்டின் போது தேறிய இலாபமொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம், அரசிற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றை கவனத்தில் கொள்ளும்போது 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 489,806,207 தொகையான பங்களிப்பானது 2013 ஆம் ஆண்டளவில் ரூபா 458,031,460 வரை குறைவடைந்திருந்த போதிலும், அதற்கு பின்னரான வருடங்களில் கிரமமாக அதிகரித்து மீளாய்வாண்டின்போது ரூபா 834,004,819 ஆக இருந்தது.

## 3.2 கூட்டுத்தாபனத்திற்கு எதிராக அல்லது கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டச் சம்பவங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது இலங்கை மற்றும் இங்கிலாந்திற்கிடையிலான கிரிக்கெட் போட்டியினை ஒளிபரப்பு செய்வதற்கான உரித்தினை கூட்டுத்தாபனத்தினால் முறையாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காது கிரிக்கெட் ஒளிபரப்பின் போது வர்த்தக விளம்பரங்களை பெற்றுக்கொள்வதற்காக ஒளிபரப்பு நடவடிக்கை எடுத்தமையால், முறையாக ஒளிபரப்பு உரித்தினை பெற்றிருந்த நிறுவனம் ரூபா 50 மில்லியன் நட்டஈட்டுத் தொகையினை கோரி வழக்கு தொடர்ந்திருந்தது. அதற்காக கூட்டுத்தாபனத்தினால் ரூபா 833,500 தொகையான வழக்கறிஞர் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் வாகனமொன்றில் பயணம் மேற்கொள்ளும் போது ஏற்பட்ட நட்டமொன்று தொடர்பில் ரூபா 08 மில்லியன் தொகையான நட்டஈட்டினைக் கோரி கூட்டுத்தாபனத்தின் ஊழியர் ஒருவரால் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. அதற்காக கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின் போது வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 158,250 செலுத்தியிருந்தது.

(இ) சந்தைப்படுத்தல் நிறைவேற்று உத்தியோகத்தரொருவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 13.21 மில்லியன் தொகை மோசடியின் கணக்கு புத்தகங்கள் முறையாக பேணப்பட்டிராமையால் ரூபா 5.65 மில்லியனை மாத்திரம் அறவிடுவதற்கு குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 7.56 மில்லியன் தொகையினை அறவிடுவதற்கு சபையினால் கொழும்பு வர்த்தக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவனத்தின் 30 ஊழியர்களுக்கு மாத்திரம் 03 சம்பள படியேற்றங்களின் வீதம் வழங்கப்பட்டமையால் கூட்டுத்தாபனத்தின் ஏனைய ஊழியர்களினால் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கொன்றிற்காக மீளாய்வாண்டின்போது ரூபா 410,000 தொகையான வழக்கறிஞர் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) கூட்டுத்தாபனத்தினால் பொய்யான செய்தி ஒளிபரப்பொன்று முன்வைக்கப்பட்டதாக கூறி அதற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கொன்றிற்காக ரூபா 10 மில்லியன் தொகையான நட்டஈட்டினை செலுத்துவதற்காக நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு முரணாக கூட்டுத்தாபனம் மேற்கொண்ட மேன்முறையீட்டின் பின்னர் கொழும்பு சிவில்

மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் அந்த தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தமையால், கூட்டுத்தாபனம் மீண்டும் இது தொடர்பில் உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீட்டொன்றினை தாக்கல் செய்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1966 இன் 37 ஆம் இலக்க ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

(i) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மூன்றுக்கான ஆகக்கூடிய நேயர்களுடனான வானொலி அலைவரிசைகளினை நடாத்திச் செல்லும் நிறுவனமொன்றாக நடவடிக்கை எடுத்தல்.

(ii) பொறுப்புடன் ஒரே தன்மையுடனான தகவல்களை துரிதமாக வழங்கும் இலங்கையின் ஊடகத்துறையின் முன்னோடியாகத் செயற்படல்.

(iii) உள்நாட்டு கலாசாரத்தின் அபிவிருத்திக்காக உயரிய மற்றும் ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்து அரங்கேற்றுதல்.

(iv) அறிவு, எண்ணம், மற்றும் ஆற்றல்களால் நிறைந்த தன்நிறைவான பதவியணியொன்றினை உருவாக்குதல் மற்றும் தேவையான பயிற்சியினை வழங்குதல்.

(v) உற்பத்தி மற்றும் ஒளிபரப்பு தொழில்நுட்பத்தினை உரிய முறையில் நாளதுவரையாக்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நேயர்களுக்கு தெளிவான செவிமடுக்கும் நிலையொன்றினை வழங்குதல்.

(vi) ஒழுக்கநெறி கட்டமைப்பிற்கிணங்க நல்லொழுக்கமான வானொலி காலாச்சாரமொன்றினை உருவாக்கும் நோக்கில் முன்னோடி நிறுவனமொன்றாக செயற்படல்.

(vii) தேசிய வானொலியாக அரச கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் மக்களுக்கு அறிவூட்டுவதற்காக ஆக்கபூர்வமான பங்களிப்பொன்றை வழங்குதல்.

(viii) சிறந்ததொரு நிதிக்கட்டுப்பாட்டொன்றையும் மனிதவள முகாமைத்துவத்தினையும் பேணிச்செல்லல்.

(ix) போட்டித்தன்மையுடைய சந்தையை உபாயமார்க்கத்துடன் வெற்றிக் கொள்ளல்.

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்பு சேவைகளை தன்னியக்கப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டு முதல் 2012 மே 14 ஆந் திகதி வரை வரையிலும் அதற்காக ரூபா 3,400,000 தொகையான பணம் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2016 யூலை மாதமளவில் இந்த நடைமுறை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 03 பிரிவுகளின் கீழ் 13 நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான நுவரெலியா விடுமுறை விடுதியினை குத்தகைக்கு வழங்கியமையால் 2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் பெப்ரவரி மாதம் வரையிலும், உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய ரூபா 7,210,000 தொகையான குத்தகை வாடகை மற்றும் குத்தகையாளரிடமிருந்து விடுமுறை விடுதியினை மீளப்பெற்றுக்கொள்வதற்காக 2010 ஆண்டு முதல் செலவிடப்பட்ட ரூபா 2,151,206 தொகையான வழக்குக் கட்டணத்தை குத்தகையாளரிடம் அறவிடுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நுவரெலியா, ஹாவாஎலிய கிராம உத்தியோகத்தர் தொகுதியின் 01 ரூட் 20 பேர்ச் பரப்பளவான நிலப்பகுதியில் அமைந்துள்ள விடுமுறை விடுதிக் கட்டிடத்தின் உரித்து மாத்திரம், ரூபா 250,000 தொகை செலுத்தப்பட்டு 1979 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்திருந்தது. நுவரெலியா மேலதிக மாவட்ட ஆணையாளர் மற்றும் பிரதி காணிகள் ஆணையாளரின் 1987 சனவரி 08 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் வருடமொன்றிற்கு ரூபா 6000 படி 1985, 1986 மற்றும் 1987 ஆண்டுகளுக்காக குத்தகைப் பணம் செலுத்தப்பட்டு குறித்த காணியின் குத்தகை உரித்தினைப் பெற்றுக்கொள்ள

அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், காணியின் குத்தகை உரித்தானது 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்திற்குச் சொந்தமான ரூபா 462,342 தொகையான வாசிகசாலைப் புத்தகங்கள் காணப்பட்ட போதிலும், அவற்றைக் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுதப்பட்டிருந்தமையால், எலிகள் மற்றும் கறையான் போன்றவற்றால் அழிவுக்குள்ளாவதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2005 பெப்ரவரி 27 ஆந் திகதி முதல் மூடப்பட்டிருந்த மஹாஇலுப்பல்லம ஒளிபரப்புக்கூடத்தின் கட்டிடம் மற்றும் பொருட்பதிவேட்டுப் பொருட்கள் எதுவிதமானதொரு விளைவுள்ள நடவடிக்கையொன்றில் ஈடுபடுத்தப்படாமல் ஒளிபரப்பட்டவாறு இருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், காவலாளியின் சம்பளம், தொலைபேசி மற்றும் மின்சாரப் பட்டியல்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 513,418 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2013 ஏப்ரல் 09 ஆந் திகதி முதல் மூடப்பட்டுள்ள கொத்மலை மக்கள் வானொலி சேவையிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு எந்தவொரு வருமானமும் கிடைத்திருக்காத போதிலும், மீளாய்வாண்டினும் மூன்று உத்தியோகத்தர்களின் சம்பளம், தொலைபேசி மற்றும் மின்சார செலவினம் போன்றவற்றிற்காக ரூபா 1,658,818 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. இவ்வாறு விளைவற்ற முறையில் செலவினங்களை மேற்கொள்ளல் கூட்டுத்தாபனத்தின் நட்டம் அதிகரித்தல் தொடர்பில் காரணமாக அமைந்திருந்தமை தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) கூட்டுத்தாபனத்தில் பேணப்படும் பிரதான நடைமுறைக் கணக்கில் 2015 நவம்பர் மாதம் வரையிலும் நிலவிய வங்கி மேலதிகப்பற்றுக்காக ரூபா 4,461,314 தொகையான வங்கி மேலதிகப்பற்று வட்டி செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2015 மார்ச் மாதம் முதல் பழுதுபார்த்தல்களை மேற்கொள்வதற்காக அம்பேவல விடுமுறை விடுதி தற்காலிகமாக மூடப்பட்டிருந்த பொதிலும், மீளாய்வாண்டினுள் ஊழியர் ஊதியம், தொலைபேசி மற்றும் மின்சாரத்திற்காக ரூபா 1,312,743 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 யூலை 04 ஆந் திகதிய கணக்காய்வு திகதி வரையிலும் இந்த விடுமுறை விடுதிக்கு

தேவையான பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு பாவனைக்கு எடுப்பதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) திருகோணமலை மறு ஒளிபரப்புக் கூடத்தின் டிராண்ஸ் மீட்டர், அன்டனாக்களுக்குரியதாக காணப்படும் உதிரிப்பாகங்களின் (Spare Parts) பெறுமதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிராததுடன், பொருட் பதிவேடொன்றோ மற்றும் கையேற்கப்பட்ட பொருட்கள் தொடர்பான பட்டோலையொன்றோ காணப்படவில்லை.

(எ) விற்பனைப் பட்டியலுக்கு பதிலாக ஒளிபரப்பு பட்டோலையை அடிப்படையாகக் கொண்டு விற்பனைகள் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டவாறு ஒலிபரப்புக்கால விற்பனை பட்டோலைகளை தயாரிப்பதில் உள்ளக கட்டுப்பாடுகளிலான நலிவுகள் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 489,088,683 தொகையான ஒலிபரப்புக்கால விற்பனை வருமானத்தின் சரியானதன்மை கணக்காய்வின் போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்படும் அம்பேவலவில் அமைந்துள்ள காணியின் பதுளை மாவட்டத்துக்குரிய பகுதிக்காக நீண்டகால குத்தகை அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளபோது, அந்த பணிகளை நிறைவு செய்யாது இரண்டாம் தரப்பினருக்கு எழுத்துமூலமான உடன்படிக்கையொன்று இல்லாது குத்தகைக்கு வழங்கியமையால் கூட்டுத்தாபனத்திற்கு இந்த காணியின் உரித்து கிட்டாது போகுமென்பதுடன், சட்டரீதியான சிக்கல்களுக்கும் முகம்கொடுக்க நேர்ந்திருந்தது.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ரூபா 23,400,170 பெறுமதியான 14 வாகனங்கள் மற்றும் பெறுமதி கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படாத வாகனமொன்றும் விளைவற்றுக் காணப்பட்டதுடன், மேலும், 05 வாகனங்கள் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. விளைவற்றுக் காணப்பட்ட மயிக்ரோ வகையிலான 05 வேன்கள் கொள்வனவு செய்யப்பட்டு 03 வருடங்களுக்கு குறைவான காலப்பகுதியில் ஓட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வாகனங்களுக்காக குத்தகை செலுத்தப்பட்டவாறு இருந்தது.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகிள்றன.

(அ) ஓய்வூதியம் பெற்றுச்சென்ற இரு ஊழியர்களுக்காக பணிக்கொடை குறைவாக செலுத்தப்பட்டிருந்தமையால் தொழிலாளர் திணைக்களத்தின் கட்டளைகளின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது ரூபா 861,926 தொகையான மிகை அறவீட்டினை செலுத்துவதற்கு நேர்ந்திருந்ததுடன், பொருளாதார சேவைக் கட்டணங்கள் உரிய திகதியில் அனுப்பி வைக்கப்படாமையால் 2004/2005 மதிப்பீட்டு ஆண்டு முதல் 2013/2014 ஆம் ஆண்டு வரையான நிலுவை வரியின் அடிப்படையில் ரூபா 11,979,867 தொகையான மிகை அறவீடு விதிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது சேவை நாடுனர் ஒருவருடன் உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடும் போது அறவிடப்பட வேண்டிய தொகை குறைத்து காண்பிக்கப்பட்டமையால், கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 673,200 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## 4.7 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனங்களுக்குப் பொருந்தக்கூடிய நிலையான இணைக்கும் கட்டமைப்பொன்றினை (Linking System) பெற்றுக் கொள்ளல் அல்லது தனியார் நிறுவனமொன்றிடமிருந்து தொழில்நுட்ப உதவியினை பெற்றுக்கொள்ளல் ஆகிய இரு சர்ந்தப்பங்களில் மிகவும் அனுகூலமான சர்ந்தப்பம் தொடர்பில் தேடிப்பார்க்காது 2012 ஆம் ஆண்டின் போது மறு ஒளிபரப்பு நிலையங்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை இணைப்பதற்கு முதலில் ரூபா 15,000,000 மற்றும், மாதாந்தம் ரூபா 400,000 படியான குத்தகை தொகைக்கு அமைய தனியார் நிறுவனமொன்றிடமிருந்து தொழில்நுட்ப உதவி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த வழங்குனரை தெரிவு செய்தல் அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படும் குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ள போது, அதற்கு முரணாக கூட்டுத்தாபனத்தினால் பெறுகைகள் நடைமுறையிலிருந்து விலகி 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 29,588,488 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கரகஹதென்ன ஒளிபரப்புக்கூடத்தினை புதுப்பிப்பதற்கு ரூபா 104,720,555 பெறுமதியான 10 KW டிரான்ஸ் மீட்டர்கள் 07 மற்றும் அன்டனா முறைமையொன்றினை கொள்வனவு செய்து பொருத்தும் ஒப்பந்தத்தை கையளிக்கும்போது பின்வரும் குறைபாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(i) ஒலிபரப்புக் கூடத்திற்காக பயன்படுத்தக்கூடிய ஆகக்கூடிய டிரான்ஸ்மீட்டர் சக்தி, பொருத்தமான எந்த வகையிலான டிரான்ஸ் மீட்டர் (Air cool/ Liquid cool) மற்றும் செலவிடப்படும் மின்சக்தி போன்ற விடயங்கள் தொடர்பில் சாத்தியவள மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) யட்டியன்தொட்ட ஒளிபரப்புக்கூடத்திற்கு உபகரணங்களை கொள்வனவு செய்யும் பணி குறைபாடுகளுடன் மேற்கொண்ட உத்தியோகத்தர்களே, இந்த பணியினதும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

(iii) விலைக்கேள்விதாரர்களுக்கு சமனான உரித்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பொருட்களுக்கு கட்டளையிடுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல், பொருட்கள் சங்கத்திற்கு கிடைக்கப் பெற்றதன் பின்னர் மேற்கொண்டமையால் ரூபா 781,516 தொகையான தாமத தண்டப்பணமொன்றை செலுத்த நேர்ந்திருந்தது.

(v) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டம் 15 வாரங்களுக்குள் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும், அதற்காக 66 வாரங்கள் கொண்ட காலம் கடந்திருந்ததுடன், தாமத காலத்திற்காக தண்டப்பணமொன்றினை அறவிடுவதற்கோ அல்லது ஒப்பந்த காலத்தை நீடிப்பு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) இந்த உபகரணங்களை பொருத்தியதன் பின்னர் வெற்றிகரமான முறையில் செயற்படுவதற்காக உறுதிப்படுத்துவதற்கு தேவைப்படும் பொறியியலாளர் சான்றிதழ் மற்றும் டிரான்ஸ்மீட்டர் உரிய

திரவத்தன்மையுடன் காணப்படுவதாக சமர்ப்பிக்கவேண்டிய களப்பரிசோதனை அறிக்கைகள் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த குறைபாடு காரணமாக செலுத்த வேண்டிய 20 சதவீதமான இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டின் போது மூலதன செலவினத்திற்காக பொதுத் திறைசேரியிலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 77.5 மில்லியன் தொகையில் ரூபா 40 மில்லியன் தொகை வருமான செலவினத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) புத்தூரில் அன்டனா கோபுரத்தை தீர்மானிக்கும் நடவடிக்கைகள், நிர்மாணத்திற்கான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆற்றலினைக் கவனத்தில் கொள்ளாமல் பெறுகைகள் வழிகாட்டிகளிலிருந்து விலகி 2011 யூன் 16 ஆந் திகதி புடவைக் கைத்தொழில் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக முற்பணமாக புடவைக் கைத்தொழில் சபைக்கு ரூபா 9,126,933 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. செலுத்திய முற்பணத் தொகையில் ரூபா 4,348,041 மாத்திரம் கூட்டுத்தாபனத்திற்கு மீள செலுத்தப்பட்டமையால், ரூபா 4,778,892 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 4.8 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 செப்தம்பர் 22 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் 30 இன் பிரகாரம், ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்த்தல் நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக அமைச்சினூடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2010 செப்தெம்பர் 15 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அமைச்சின் செயலாளருக்கு இணைத்துக் கொள்ளும் நடைமுறைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆட்சேர்ப்பு நடைமுறையினை அங்கீகரித்துக் கொள்ளாமல் ஆட்சேர்த்துக் கொள்ளக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ள போது, அதற்கு முரணாக அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது ஒப்பந்தம் மற்றும் கையளிப்பின் அடிப்படையில் முறையே 69 மற்றும் 04 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(இ) பொருத்தமான ஆட்சேர்ப்பு முறையினை பின்பற்றி 2004 யூலை 01 ஆந் திகதி பணிப்பாளர் (சங்கீதம்) பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தருக்கு, பணிப்பாளர் பதவியல்லாத ஒலிப்பதிவு நாடாக்களின் விற்பனைப்பிரிவு கையளிக்கப்பட்டிருந்ததுடன், பணிப்பாளர் (சங்கீதம்) பதவிக்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத மற்றும் அந்த பதவிக்கு தகுதியற்ற கட்டுப்பாட்டாளர் பதவி வகித்த உத்தியோகத்தர் ஒருவர் 2009 ஏப்ரல் 24 ஆந் திகதி முதல் அந்த பதவியில் பதிற்கடமையில் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தின் 867 நிரந்தர பதவியணி மற்றும் 323 மேலதிக பதவியணிக்காக ரூபா 483,680,556 தொகையான சம்பளம் மற்றும் படிகளும், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள், உதவிப் பதவியணி மற்றும் கையளிப்பு அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு ரூபா 42,421,916 தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. நிரந்தர பதவியணி மிகையாக உள்ள போது உதவிப் பதவியணியின் சேவையினை கையளிப்பு அடிப்படையிலும் ஒப்பந்த அடிப்படையிலும் பெற்றுக்கொள்ளல் சிக்கலானதாக இருந்தது.

(உ) கூட்டுத்தாபனத்தின் தலைமை பதவிநிலைப் பதவிகள் 03 ஆன, பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிதி), (பொறியிலாளர்) மற்றும் (நிர்வாகம்) ஆகிய பதவிகள் 03 முதல் 08 வருடங்களுக்கிடைப்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஊ) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகமாக சடமையாற்றியவாறு இருக்கும் உத்தியோகத்தர் 2015 சனவரி 19 ஆந் திகதி முதல் அந்த பதவியிலிருந்து விடுவிக்கப்பட்ட போதிலும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 19(3)(ஆ) பிரிவின் பிரகாரம் அந்த உத்தியோகத்தர் முன்பிருந்து பிரதி பணிப்பாளர் நாயகப் பதவியில் நிறுத்தப்பட்டிருந்தார். அதற்காக அமைச்சரவை அங்கீகாரமின்றி 2015 ஒக்தோபர் 19 ஆந் திகதி முதல் கூட்டுத்தாபனத்தின் மதியுரையாளர் பதவியில் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அவரால் அந்த பதவியினை கையேற்கப்படாது மறுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தரை விடுவித்த திகதி முதல் கடமைக் கையளிப்பொன்று இடம்பெற்றிருக்காததுடன், மீளாய்வாண்டினுள் சம்பளம் மற்றும் படிகளாக, ஊழியர் நலன்புரி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பாக ரூபா 986,529 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் எரிபொருள் ஆகியவற்றை கூட்டுத்தாபனம் வழங்கியிருந்தது.

### 4.9 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், வாடகை அடிப்படையில் எந்தவொரு வாகனத்தையும் கூட்டுத்தாபனம் பெற்றிருக்கவில்லை என்பது அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இறுதிக் கணக்குகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகளங்களுக்காக ரூபா 4,272,104 தொகையான வாடகைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. இந்த கொடுப்பனவுகளினுள் கடந்த ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 489,800 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது விளைவற்றிருந்த 03 வாகனங்களுக்கு ரூபா 214,565 கூட்டுத்தொகையான பழுதுபார்த்தல் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இந்த வாகனங்களை ஓட்ட நிலமைக்கு மாற்றுவதற்கு முடியாது போயிருந்தது.

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயங்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 25 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் 2015-2017 ஆம் ஆண்டு வரை கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.3 உள்ளக கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையிலும் 97 கணக்காய்வு ஐயவினாக்கள் வெளியிடப்பட்டிருந்தபோதிலும், முகாமைத்துவத்தினால் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும், அந்த ஐயவினாக்களில் 37 வினாக்களுக்கு மாத்திரம் பதிலளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வு பிரிவில் 04 நிரந்தர கணக்காய்வு உதவியாளர் பதவிகள் நிலவிய போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இரு கணக்காய்வு உதவியாளர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

5.4 கணக்காய்வு குழுக்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம், ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டினுள் 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

5.5 பெறுகைகள் திட்டம்

பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஆ) பிரிவின் பிரகாரம் ஆகக்குறைந்தது மூன்று வருட காலப்பகுதிகான உத்தேச பெறுகை நடவடிக்கைகளுக்காக பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படவேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக மாத்திரம் அது தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அதிலும் தேவையான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பிரதான பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான விபரமான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.6 வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல்

2012 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2016 யூன் 30 ஆந் திகதி வரையிறும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.7 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 1996 ஆம் ஆண்டின் போது 60 மீட்டர்கள் மற்றும் 100 மீட்டர்கள் உயரமான 2 அன்டனா கோபுரங்களை கொண்டு வருவதற்காக ரூபா 23,119,683 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், கோபுரங்களை பொருத்துவதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு முற்பணமாக ரூபா 2,568,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பொருத்த வேண்டிய இடங்கள் தீர்மானிக்கப்பட்டிராமையால், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கோபுரங்கள் பொருத்தப்பட்டிராததுடன், அந்த நிலப்பிரதேசத்தில் பாதுகாப்பற்ற முறையில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலும் 32 ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன், சந்தைப்படுத்தல் நிறைவேற்றுனரால் ரூபா 6,356,853 தொகை மோசடி செய்யப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், ரூபா 945,000 தொகையினை மாத்திரம் அறவிடுவதற்கு பொலிஸில் வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன், அறவிடப்பட வேண்டிய எஞ்சிய பணத்தை அறவிடுவதற்காக 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 860,000 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரு வீடுகள் (அநுராதபுரம் மற்றும் கண்டி) இற்காக ஒப்படைப்பு சான்றிதழைப் பெற்று உரிய முறையில் உரித்தினை பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 22 உத்தயோகபூர்வ இல்லங்களில் 03 இல்லங்கள் இலங்கை இராணுவத்தால் பயன்படுத்தப்படுவதுடன், மேலும் 02 வீடுகள் கூட்டுத்தாபனத்தின் ஊழியரல்லாத நபர்களால் பயன்படுத்தப்படுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அனுராதபுரம் நகர எல்லையில் அமைந்திருந்த பணிப்பாளர் மாளிகை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையால் பாதுகாப்பற்ற முறையில் காணப்படுவதால் உடைத்து அகற்றுவதற்கு நேர்ந்திருந்தது. மேலும், 03 வீடுகள் பயன்படுத்தப்படாது பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டது.

அதற்கு மேலதிகமாக உத்தியோகபூர்வ இல்லங்களை பதவியணியின் உத்தியோகத்தர்களுக்கு வழங்குதலும் உரிய முறைமையொன்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தற்போது உத்தியோகபூர்வ இல்லங்களில்

வசித்துவரும் உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களுக்கு அந்த வீடுகள் வழங்கப்பட்ட விதம் மற்றும் வாடகை அறவிடப்பட வேண்டுமா என்பதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான பயன்பாட்டு ஆவணங்கள் அல்லது அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பில் விஷேட அவதானம் கோரப்படுகின்றது.

| கட்டுப்பாட்டு பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துககள் கட்டுப்பாடு | (i) கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள காணிகளை தீர்ப்பனவு செய்து அவற்றின் சட்டரீதியான உரித்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |
| | (ii) வாசிகசாலை புத்தகங்கள் பாதுகாப்பற்ற முறையில் காணப்படுகின்றமை |
| (ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | (i) 10 வருடங்களை விட பழமையான மீதியினை அறவிடுவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்காமை. |
| | (ii) சேவைநாடுனர் உடன்படிக்கை தொடர்பில் உரிய மேற்பார்வையொன்று இடம்பெறாமை. |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | (i) ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றினை அங்கீகரிக்காமல் ஊழியர் மிகையொன்று நிலவும் போது தொடர்ச்சியாக ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருந்தமை |

|  |  |  |
|---|---|---|
|  | (ii) | பதவி உயர்வினை வழங்கும் போது சரியான செயற்பாட்டு நடவடிக்கையொன்று பின்பற்றப்பட்டிருக்காமை. |
| (ஈ) கணக்கீடு | (i) | விற்பனைகளின் சரியான தன்மை பற்றுச்சீட்டுக்களுடன் பரிசோதனை செய்தல் இடம்பெறாமை. |
|  | (ii) | கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு முறைமையினை நாளதுவரையாக்கியிராமை |
| (உ) பெறுகைகள் | (i) | விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராமை |
|  | (ii) | ஒளிபரப்புக்கூடத்தின் நவீனமயப்படுத்தும் ஒப்பந்தமொன்றினை கையளிக்கும் போது, குறைபாடுகளுடன் செயற்பட்டிருந்தமை |
| (ஊ) வாகனக் கட்டுப்பாடு | (i) | வாகன விபத்துக்கள் தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிராமை. |
|  | (ii) | ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் சம்பவக்குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக பேணப்பட்டிராமை |

எச்.எம்.காமினி விஜேயசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# விபரமான வருமானக் கூற்று

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14(2)(இ)யின் பிரகாரம் 2015 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றிய கூட்டுத்தாபனத்தின் கருத்துரைகள்

## 1.2 நிதிக்கூற்றுகளுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

நிதிக்கூற்றுகளுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பின் கீழ் 1.2 மற்றும் 1.3 ஆகிய பிரிவுகளில் தரப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக்கொள்கின்றோம்.

## 2. நிதிக் கூற்றுகள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

2015ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி தனது பாதகமான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் முன்னைய ஆண்டுக்கானதாகும். 2015ஆம் ஆண்டில் கணக்கீட்டுக் குறைபாடுகளில் பெரும்பாலானவை நிவர்த்திக்கப்பட்டுள்ளன. கணக்கீட்டுக் குறைபாடுகளாகக் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பான விளக்கங்கள் பின்வருமாறு:

### 2.2 நிதிக் கூற்றுகள் பற்றிய கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம்

நியம இல. 38

பந்திகள் 11இ12 தன்னியக்க வசதிகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட உதிரிகள் கணனி கருவிகளாதலால், அவை கணனி உதிரிகளின் கீழ் கணக்கில் இடப்பட்டுள்ளன. கணக்காய்வினால் கருதப்பட்டவாறு, அந்த சொத்துகள் 2017.09.30ஆம் திகதி அருவச் சொத்துகளுக்கு மாற்றப்பட்டது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2016ஆம் கடனாளிகள் தொடர்பான சேர் பெறுமதி வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ஆகியவை கணக்கில் சேர்க்கப்பட்டு சீராக்கம் செய்யப்பட்டன.

(ஆ) தலைமை அலுவலகத்துக்கும் பிராந்திய அலுவலகங்களுக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்களைப் பதியும் நடைமுறைக் கணக்கில் சம்பந்தப்பட்ட சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

(இ) கிரிக்கெட் உலகக் கிண்ண ஒலிபரப்பு உரிமையைக் கொள்வனவு செய்வதற்காக 2015ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட தொகை 2016ஆம் ஆண்டில் நாளேட்டுக் குறிப்புகளில் திருத்தப்பட்டுள்ளன.

(ஈ) வாடகை உடன்படிக்கைகள் காலாவதியானதால் நாளேட்டுக் குறிப்புகள் ஊடாக வாடகை உடன்படிக்கையில் பெறப்பட்ட வாகனங்கள் மோட்டார் வாகனக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளன.

(உ) மீளாய்வாண்டில் அதிகாரிகளுக்கு கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டது ஊக்குவிப்புக் கொடுப்பனவாகும். மிகையூதியம் அல்ல.

#### 2.2.3 விளக்கப்படாத வேறுபாடுகள்

மறுத்த காசோலைகள், ஊழியர் கடன்கள், ஊழியர்களுக்கான நானாவித முற்பணங்கள் மற்றும் பல்வேறு வைப்புகளை அடையாளம் கண்டு 2002ஆம் ஆண்டுக்கு முந்திய அடையாளம் காணப்பட முடியாத மீதியின் ஒரு பகுதி அவசியமான அங்கீகாரத்துடன் திருத்தப்பட்டது.

### 2.2.4 தொங்கற் கணக்கு

தொங்கற் கணக்குகளைப் பரிசீலித்து பொறுப்புவாய்ந்த தரப்பினரை அடையாளம் கண்டு சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.2.5 கணக்காய்விற்குப் போதிய சான்றுகள் இன்மை

(அ) 2010இற்கு முன்னர் செலுத்தவேண்டிய வைப்புகள் - இந்தக் கணக்கு திருத்தப்பட்டுள்ளது.

(ஆ) பிராந்திய தபால் அலுவலகங்களிடமிருந்து கிடைக்கவேண்டிய இந்தத் தொகைகள் 15 வருடங்களுக்கும் மேல் பழமையானதாகும். எவ்வித ஆவணங்களும் இல்லாத காரணத்தினால் தபால்மா அதிபரிடமிருந்து கூட ஒரு உறுதிப்பாட்டை பெற முடியவில்லை. எனவே, இந்தத் தொகைகளை அறவிடுவதற்கான வாய்ப்பு இல்லை. பொறுப்புமிக்க தரப்பினர்களைக்கூட நிர்ணயிக்க முடியாததால், அது தொடர்பான அங்கீகாரத்தைப் பெற்று திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) கிடைக்கவேண்டிய மீதிகள் பற்றிய அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஈ) நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை கணக்கின் கீழ் காட்டப்பட்டுள்ள தொகை தலைமை அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்ட தொகையாகும். விலைப்பட்டியல்கள், மதிப்பீடுகள் மற்றும் எல்லா திட்டங்களும் ந.அ.அ. சபையின் பொறுப்பில் உள்ளன. சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்குமாறு ந.அ.அ. சபைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த விபரங்களை ந.அ.அ. சபையிடமிருந்து பெற்று சொத்துகள் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(உ) துணை ஏடுகளின் பிரகாரம், முற்பணங்களின் தீர்ப்பனவு தகுந்தவாறு பதியப்பட்டு பிரதான பேரேட்டில் பதியப்படாத சொல்லப்பட்ட தீர்ப்பனவின் விளைவாக 2002ஆம் ஆண்டுக்கு முன்னரே அடையாளம் காணப்படாதிருந்த இந்தக் குறிப்பிட்ட மீதி பற்றிய விசேட அறிக்கை 2017.01.07ஆம் திகதி பணிப்பாளர் சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது. 2017.03.21ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் 04ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம், அடையாளம் காணப்படாத மீதிகள் முன்னைய ஆண்டுகளில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

(ஊ) கணக்காய்வுக்குச் சமர்ப்பிப்பதில் தாமதித்த வவுச்சர்கள் சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் தொடர்பானவையாகும். பின்னர் அவை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

(எ) லக் ஹண்ட வானொலி இ.ஒ.கூ.தா.வின் வளாகத்தில் அதன் கீழ் இயங்கியது. பின்னர் அது ஐ.ரீ.என்.இனால் கொள்வனவு செய்யப்பட்டது. அது இ.ஒ.கூ.தா.வினால் பேணப்பட்ட காலத்தில் வழங்கப்பட்ட வசதிகள் தொடர்பாகக் கிடைக்கவேண்டிய தொகை இந்தக் கணக்கின் கீழ் காட்டப்பட்டுள்ளது. ஆயினும், இதனை உறுதிப்படுத்துவதற்கு இரண்டு தரப்பினரிடையேயும் எவ்வித உடன்படிக்கைகளும் இல்லை.

(ஏ) பதிவேட்டு குறிப்புகள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட சீராக்கம் தொடர்பாக, சீராக்கல்களுக்கான காரணங்களும் விபரங்கள் அடங்கிய ஆவணங்களும் பதிவேட்டில் தரப்பட்டுள்ளன.

### 2.3 சென்மதி மற்றும் வருமதிக் கணக்குகள்

(அ) இந்தப் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு, மொத்தம் 188.8 மில்லியன் ரூபாய் மீதி சரியானதாகும். இந்தத் தொகையில் ரூபா 67.5 மில்லியன் 10 வருடங்களுக்கும் மேல் பழைமையானதாகும். இதில் பெரும்பாலான தொகைக்குக் காரணம் வெளிநாட்டு நிறுவனங்கள் மூடப்பட்டதால் கொடுக்கல் வாங்கல்களை இடை நிறுத்தியமை மற்றும் பிற காரணங்களினாலாகும். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலான விதப்புரையின் பிரகாரம் இந்த விடயம் திறைசேரிக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

3 இந்தப் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட கடன்களின் ஒரு பகுதி கருணக்காலத்தைக் கடந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலுவையாக உள்ள கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

4 கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையை பின்பற்றி, கணக்காய்வுக் கட்டணங்களை தவணைகளில் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5 வழங்கல்கள் முற்பணங்களில், திரு. மங்கள குணரத்ன என்பவருக்கு எதிராகக் காட்டப்பட்ட 6000/- நீங்கலாக, எஞ்சிய தொகை 2016ஆம் ஆண்டில் முழுமையாகச் செலுத்தப்பட்டது.

6 சேவை உடன்படிக்கை மற்றும் முழு நிகழ்ச்சிக்குமான சேவை உடன்படிக்கை ஆகியவற்றின் பிரகாரம் ஒவ்வொரு பகுதியையும் ஒலிபரப்புவதற்கு விதிக்கப்பட்ட கட்டணத்தைத் தெளிவாக குறிப்பிடுவதற்குத் தவறியதன் விளைவாக வாடிக்கையாளர் பிழையாக விளங்கிக்கொண்டதால் இந்தத் தவறு நிகழ்ந்துள்ளது.

7 இ.ஒ.கூ.தா.வின் கணக்கின் பிரகாரம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்கவேண்டிய பணம் தீர்க்கப்பட்டுள்ளது.

8 கணக்காய்வுக் கட்டணங்கள், தொலைத்தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவுக்குச் செலுத்தவேண்டிய வரிகள் மற்றும் ஏனைய திரண்ட செலவினங்கள் ஆகியவை நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் திரண்ட செலவினங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

9 ஒலிபரப்புக் கோபுரங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்ட 16 குத்தகைதாரர்கள் தொடர்பாக, 12பேரிடமிருந்து வைப்பு அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய குத்தகைதாரர்களிடமிருந்து வைப்புகளை விதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

10 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்தவேண்டிய வரிகளை தவணைக் கட்டணங்களாகச் செலுத்துவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

11 நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் நடைமுறைச் சொத்துகளும் நடைமுறைப் பொறுப்புகளும் திரண்ட செலவினங்களும் குறிப்பிடப்பட்டுள்ளதால் நிதிக் கூற்றுகளில் வணிகக் கடனாளிகளும் காட்டப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றோம். அவற்றைத் தவணைகளாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகாமை

(அ) (ஆ) பந்திகள் (அ) மற்றும் (ஆ) ஆகியவற்றின் (i) முதல் (iv) வரையான உப பந்திகளில் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் தாபன விதிக் கோவை மற்றும் நிதியியல் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் பொருத்தமாக செயற்படுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(இ) அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் சுற்றறிக்கைகள்

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய சுற்றறிக்கைகளுக்கு அமைவாக செயற்படுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர்.

(அ) சேவைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணத்துவம் உள்ள ஆலோசகர்கள் குறுகிய கால அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். மேலும் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கு அத்தகைய சேவைகள் தேவைப்பட்டபோது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நீடிப்பு வழங்கப்பட்டது.

ஆ) எரிபொருள் படி சேவைத் தேவைப்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்படுகின்றது.

# 3. நிதியியல் மீளாய்வு

## 3.1 நிதியியல் பெறுபேறுகள்

கணக்காய்வின் நிதியியல் பெறுபேறுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள தரவுகளும் தகவல்களும் சரியானவையாகும்.

## 3.2 நிறுவனத்துக்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

(அ) இலங்கை - இங்கிலாந்து கிரிக்கெட் தொடர் 2014ஐ ஒலிபரப்பியமைக்காக M.P.M.R. வலையமைப்பு கூட்டுத்தாபனத்துக்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளது. ஒரு தீர்ப்பொன்று முன்மொழியப்பட்டு கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 50 மில்லியன் நட்டஈடு கோரப்பட்டுள்ளது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் வாகனம் ஒன்றில் பிரயாணம் செய்துகொண்டிருக்கும்போது நிகழ்ந்த விபத்தின் காரணமாக ஏற்பட்ட உடல் காயங்கள் மற்றும் மன உளைச்சலுக்கான நட்டஈட்டைக் கோரி திரு உபாலி தர்மசிறி யாப்பா ஒரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு விசாரிக்கப்படுகின்றது. அவர் நட்ட ஈடாக ரூபா 8 மில்லியனும் விபத்து நடந்த திகதியிலிருந்து அதற்கான வட்டியையும் கோரியுள்ளார்.

(இ) நிறைவேற்று அலுவலர் எம்.என்.எம். அசாம் என்பவரிடமிருந்து கிடைக்கவேண்டிய தொகை 7,551,750.29 ரூபாவைக் அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் மாகாண உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளதுடன் ரூபா 4,716,812ஐ அறவிடுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மற்றுமொரு வழக்கையும் தாக்கல் செய்துள்ளது.

(ஈ)கூட்டுத்தாபனத்தின் 57 ஊழியர்களுக்கு பதவி உயர்வுகளும் சம்பள அதிகரிப்புகளும் வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக 07 ஊழியர்களும் 04 தொழில் சங்கங்களும் வழக்கொன்றைத் தாக்கல்செய்துள்ளனர். வழக்கு இன்னும் முடிவுறாதுள்ளது.

(உ) திரு. ஆர்.ஏ.சி. குணதிலக என்பவரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 23089/ MR இலக்க வழக்கின் தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தி கொழும்பு சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கூட்டுத்தாபனத்தினால் தாக்கல்செய்யப்பட்டது. சொல்லப்பட்ட வழக்கின் 231/2004 ஆம் இலக்க தீர்ப்பும் கூட்டுத்தாபனத்துக்கு சாதகமாக இல்லாத காரணத்தினால் அந்தத் தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்று தாக்கல் செய்யப்பட்டது.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றம்

(அ) செயலாற்றத்தின் கீழ் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களாக குறிப்பிடப்பட்ட 08 தொடக்கம் 10 வரையான விடயங்கள் சரியானவையாகும். சொல்லப்பட்ட பந்தியில் (அ)வின் கீழ் குறிப்பிடப்பட்டவாறு, வானொலி அலைவரிசைகளை தன்னியக்கமயப்படுத்தலின் கீழ்

03 அலைவரிசைகள் தன்னியக்கமயப்படுத்தப்பட்டன.

(ஆ) குறித்த சில நடவடிக்கைத் திட்டங்களை குறிப்பிடப்பட்ட ஆண்டிலும் பூர்த்திசெய்ய முடியாமல் போனாலும் கூட அவை அடுத்த ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டன.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

(அ) குறிப்பிட்ட தொகையை அறவிடுவதற்காக இந்த விடயம் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு சட்டப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

5 நுவரெலியா விடுமுறை விடுதியை குத்தகைக்குப் பெறுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அளவீட்டுச் செயற்பாடுகள் முடிவடைந்தவுடன், இந்த விடயம் தொடர்பான நடவடிக்கைகளை பிரதேச செயலகம் மேற்கொள்கின்றது.

### 4.3 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

அ. கூட்டுத்தாபனத்தின் உசாத்துணை நூலகத்தில் உள்ள இடப்பரப்பில் புத்தகங்களையும் புத்தக அலுமாரிகளையும் பாதுகாப்பாக வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆ. மகாஇலுப்பள்ளம ஒலிபரப்பு நிலையத்தில் உள்ள எல்லா பொருட்பதிவேட்டுப் பொருட்களும் அகற்றப்பட்டு கட்டிடங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இ. கொத்மலை சமூக வானொலி நிலையத்தில் மகாவலி அதிகார சபையினால் கிடைக்கச்செய்யப்பட்ட கட்டிடங்களில் கொத்மலை வானொலி நிலையம் மூடப்பட்ட காரணத்தினால் ஊடகப் பயிற்சி நிறுவனம் ஒன்று பேணப்படுகின்றது.

ஈ. கூட்டுத்தாபனம் வங்கி மேலதிகப்பற்று வசதியைப் பெற்றுள்ளதால் மேலதிகப்பற்று வட்டி செலுத்தப்படவேண்டியுள்ளது.

உ. அம்பேவெல விடுமுறை விடுதி திருத்தங்களுக்காக தற்காலிகமாக மூடப்பட்டபோதிலும், ஊழியர்கள் அவர்களின் கடமைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டனர். தற்போது, ஒரு பங்களாவின் திருத்த வேலைகள்

முடிவடைந்துள்ளதுடன் அது சுற்றுலாப் பயணிகளுக்குக் கிடைக்கச்செய்யப்படுகின்றது.

ஊ. திருகோணமலை ஒலிபரப்பு நிலையத்தின் ஒலிபரப்பி அன்ரென்னாவின் உதிரிப்பாகங்களின் பெறுமதி மாற்றப்பட்ட பெறுமதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அது பொருட்பதிவேட்டிலும் பதியப்பட்டுள்ளது.

எ. அட்டவணைகளின் பிரகாரம் கணக்கீடு மேற்கொள்ளப்படுவதை ஏற்றுக்கொள்கின்றோம். பிரசார அட்டவணைகளின் பிரகாரம் கணக்கீட்டை மேற்கொண்டு, அந்த அட்டவணைகள் உறுதிப்படுத்தலுக்காக சந்தைப்படுத்தல் பிரிவுக்கு அனுப்பப்படுகின்றது. வேறுபாடு காணப்படும் இடங்களில் அவசியமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டுத்தாபனம் அனுபவிக்கும் பதுளை மாவட்டத்தில் அம்பேவெலயில் உள்ள காணி செய்திப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து எழுத்திலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின் மூலம் பராமரிப்புக்காக குத்தகைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிக்கு மாத்திரமே கூட்டுத்தாபனம் உரிமை கோரியது.

## 4.5 பயன்படுத்தாத / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துகள்

பயன்படுத்தப்படாதிருந்த 05 மைக்ரோ வேன்கள், 02 டபள் கெப் வாகனங்கள் மற்றும் 02 கார்கள் 2017ஆம் ஆண்டில் கொள்வனவு நடைமுறைகளுக்கிணங்க விற்கப்பட்டன.

## 4.6 அடையாளம் காணப்பட்ட நட்டங்கள்

(அ) தொழில் சட்டங்களின் பிரகாரம் குறைவாகச் செலுத்தப்பட்ட பணிக்கொடைக்கு நட்ட ஈடு செலுத்தவேண்டி ஏற்பட்டதுடன் வருமான வரி கொடுப்பனவின் தாமதத்துக்காக மிகைக்கட்டணம் செலுத்தப்பட்டது.

(ஆ) வாடிக்கையாளர் உடன்படிக்கையை சரியாக விளங்கிக்கொள்ளாத காரணத்தினால் இது நிகழ்ந்தது. சொல்லப்பட்ட தொகையை அறவிடுவதற்காக சம்பந்தப்பட்ட வாடிக்கையாளருக்கு சுருக்கமான விளக்கப்பட்டது.

## 4.7 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நிர்வாகம்

(அ) இந்தப் பந்தியில் காட்டப்பட்டவாறு, நிகழ்ச்சிகளை தொடர்புபடுத்துவதற்காக அஞ்சல் நிலையங்களுக்கு செலுத்திய தொகை சரியானதாகும். கூட்டுத்தாபனத்துக்குப் பொருத்தமான நிரந்தரமான தொடர்பு முறைமையைக் கொள்வனவு செய்வதற்கு பாரிய செலவு ஏற்படுவதுடன் அத்தகையை முறைமையின் பராமரிப்புக்கும் பெருமளவு செலவு ஏற்படும் என்பதால் இந்த சேவையை வெளி மூலங்களிலிருந்து பெறவேண்டியிருந்தது. இந்த விடயம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் கலந்துரையாடப்பட்டு தனியார் துறையினரிடமிருந்து தற்போது பெறப்படும் சேவை மிகவும் இலாபகரமானது என தீர்மானிக்கப்பட்டது.

5 **i**. கரகஹாதென்ன அஞ்சல் நிலையத்தை நவீனமயப்படுத்துவதற்கான சாத்தியவள ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**ii**. பொறியியல் பிரிவுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட தகைமை வாய்ந்த அலுவலர்களையன்றி, பொறியியல் கருத்திட்டங்களுக்கு ஏனைய அலுவலர்களை ஈடுபடுத்த முடியாது.

**iii**. கேள்விப்பத்திரதாரர்களுக்கு சமமான சந்தர்ப்பம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனக்கூறும் அவதானிப்பு தெளிவில்லை. மேலும், கேள்விப்பத்திர நடைமுறை தொடர்பான விடயங்கள் ஊடக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டன.

**iv**.தொலைத்தொடர்பாடல்கள் ஒழுங்கமைப்பு ஆணைக்கு முவிடமிருந்தும் ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டாளரிடமிருந்தும் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு தாமதித்த காரணத்தினால் தண்டப்பணம் செலுத்தவேண்டி ஏற்பட்டது.

**v**. தொழில்நுட்பக் காரணங்களினால் இந்தக் கருத்திட்டத்தைப் பூர்த்திசெய்தல் தாமதமானது.

**vi**.தங்களால் கோரப்பட்ட களப் பரிசோதனை அறிக்கைகள், ஒலிபரப்புச்

சாதனங்களின் வினைத்திறன் மற்றும் பொறியில் சான்றிதழ்கள் 2016 ஜூலை 22ஆம் திகதி கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

6 2011ஆம் ஆண்டில் மூலதன ஏற்பாடுகளில் ஒரு பகுதி வருமான செலவினமாக மாற்றப்படவேண்டியிருந்தது.

7 இந்தத் தீர்மானங்கள் எல்லாம் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் தீர்மானங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டன. கருத்திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது லக்சலவினால் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சினைகள் காரணமாக அதை இடையில் கைவிடவேண்டியிருந்தது. பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டபோது, லக்சல அதன் பூர்வாங்க செயற்பாடுகளுக்காக பணத்தின் ஒரு பகுதியை வைத்துக்கொண்டது. எஞ்சிய தொகையில் ரூபா 4.3 மில்லியன் அறவிடப்பட்டது.

## 4.8 பணியாளர் நிர்வாகம்

(அ) ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை தற்போது தாபிக்கப்படுகின்றது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் சேவைத் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) பணிப்பாளராக (சங்கீதம்) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர் சேவைத் தேவைப்பாடுகளின் பிரகாரம் தற்காலிகமாக வெளியீடுகள் பிரிவில் இணைக்கப்பட்டிருந்தார். இசைப் பிரிவின் கடமைகள் கட்டுப்பாட்டாளருக்கு (சங்கீதம்) ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிரந்தர பணியாளர் தொகை 867ஆக இருந்தபோதிலும், அத்தியாவசிய சேவைகளுக்காக ஈடுபடுத்துவதற்கான ஊழியர் எவரும் இருக்கவில்லை. எனவே, சேவைத் தேவைப்பாடுகளைக் கவனத்தில்கொண்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

(உ) எதிர்காலத்தில் இந்தப் பதவிகளுக்கு தகைமைவாய்ந்த அலுவலர்கள் நியமிக்கப்படுவர்.

(ஊ) கணக்காய்வு அவதானிப்புகளில் காட்டப்பட்ட விடயங்கள் சரியானவையாகும். நிறுவன மட்டத்தில் தீர்க்க முடியாத ஒரு பிரச்சினை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டது.

## 4.9 வாகனப் பயன்பாடு

(அ) வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டு 05 பிராந்திய ஒலிபரப்பு நிலையங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. கொள்வனவு நடவடிக்கைமுறை பின்பற்றப்பட்டு இந்நோக்கத்திற்காக விலைகூறல்கள் கோரப்பட்டன. உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டன.

5 வாகனங்களை மீண்டும் செலுத்தக்கூடிய நிலைக்குக் கொண்டுவருவதற்காக இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், அவை செலுத்துவதற்கு பொருத்தமானவையாக இல்லாத காரணத்தினால் அமைச்சின் அங்கீகாரத்துடன் பின்னர் அவை கையுதிர்க்கப்பட்டன.

# 5. வகைப்பொறுப்புக்கூறலும் நல்லாட்சியும்

## 5.1 நிதிக்கூற்றுகளைச் சமர்ப்பித்தல்

நிதிக் கூற்றுகளைச் சமர்ப்பித்த திகதியாக நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி சரியானதாகும்.

## 5.2 கூட்டிணைத் திட்டம்

2016-2018இற்கான கூட்டிணைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

(அ) உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளுக்கான எல்லா பதில்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் இரண்டு கணக்காய்வு உதவியாளர்கள் மட்டுமே உள்ளனர். எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 5.4 கணக்காய்வுக் குழுக்கள்

காலத்துக்குக் காலம் பணிப்பாளர் சபை மாறுவதன் காரணமாக காலாண்டு அடிப்படையில் கணக்காய்வுக் கூட்டங்களை நடத்த முடியவில்லை.

## 5.5 கொள்வனவுத் திட்டம்

கொள்வனவுத் திட்டங்கள் வருடாந்தம் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 5.6 வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல்

2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைககள் சமர்ப்பிக்கப்பட்டள்ளன. 2014ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை நகல் அமைச்சரவை நிருபத்துடன் நிதி மற்றும் ஊடக அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 5.7 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

(அ) ஏக்கல ஒலிபரப்பு நிலையத்தில் உள்ள கருவிகளையும் பொருட்களையும் பரீட்சிப்பதற்கும் பயன்படுத்தக்கூடிய பொருட்களை பிராந்திய ஒலிபரப்பு நிலையங்களுக்கு மாற்றுவதற்கும் ஏனைய பொருட்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இரண்டு விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுவின் பிரேரணைகளின் பிரகாரம் ஏக்கல ஒலிபரப்பு நிலைய வளாகத்தில் உள்ள ஒலிபரப்பு கோபுரத்தின் உதிரிப் பாகங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

(ஆ) இவ்விடயம் சட்ட நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) கண்டி மற்றும் அனுராதபுர இல்லங்களின் உரித்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஈ) மத்திய அலைவரிசை ஒலிபரப்பு நிலையம் மூடப்பட்டதால், அப்போது நிலவிய முரண்பாட்டு நிலைமை காரணமாக கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ விடுதி தற்காலிகமாக இராணுவத்துக்கு ஒப்படைக்கப்பட்டது. காணியில் அமைந்துள்ள கட்டிடங்களும் உத்தியோகபூர்வ விடுதியும் இராணுவத்தினால் பயன்படுத்தப்படுகின்றன. விடுதியை ஒதுக்குவதில் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளைப் பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டப்பாடுகளும்

கட்டுப்பாட்டுப் பரப்பெல்லை

**(அ) சொத்துகளின் கட்டுப்பாடு**

i. கூட்டுத்தாபனத்தினால் அனுபவிக்கப்படும் காணிப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

ii. நூலகத்தை தகுந்தவாறு ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(ஆ) கடனாளிகள்**

i. அறவிட முடியாத கடனாளிகள் தொடர்பாகப் பரிசீலித்து, மிகவும் பழைய கடன்கள் மற்றும் சம்பந்தப்பட்ட கோப்புகளைக் கண்டுபிடிக்க முடியாத கடன்கள் பற்றிய ஒரு அறிக்கை திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ii. வாடிக்கையாளர்களுடனான உடன்படிக்கைகளை செம்மையாக வரைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், அவற்றுள் சிலவற்றில் குறைபாடுகள் காணப்பட்டுள்ளன.

**(இ) பணியாளர் நிர்வாகம்**

i. சேவைத் தேவைகளின் பிரகாரம் பல்வேறு பிரிவுகளுக்கு ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றோம்.

ii. சேவைக் காலத்தின் அடிப்படையில் பிரிவுத் தலைவர்களின் விதப்புரையின் பிரகாரம் பதவி உயர்வுகள்

வழங்கப்பட்டுள்ளன.

**(ஈ) கணக்கீடு**

ை. ஒலிபரப்பு நேர அட்டவணைக்கு இணங்க கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன. குறிப்பேட்டுப் பதிவின் ஊடாக அட்டவணைகள் மாற்றப்படுவதால் விலைப்பட்டியல்களை இணக்கம் செய்த பின்னர் வேறுபாடுகள் அடையாளம்காணப்பட்டன.

**(உ) கொள்வனவு**

**i.** வருடாந்தம் கொள்வனவுத் திட்டங்களைத் தயாரிப்பதில், அவற்றை சம்பந்தப்பட்ட விபரங்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ii.** ஒலிபரப்பு நிலையங்களை நவீனமயப்படுத்துவதில், கொள்வனவுத் திட்டங்கள் பின்பற்றப்பட்டுள்ளன. சில சந்தர்ப்பங்களில் தாமதங்கள் காணப்பட்டுள்ளன.

**(ஊ) வாகனக் கட்டுப்பாடு**

**i.** விபத்துகள் நிகழும்போது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்து பொலிஸ் அறிக்கைகளைப் பெறுவதன் மூலம் காப்புறுதிகளைக் கோருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ii.** வாகன ஓட்ட அட்டவணைகள் மற்றும் பதிவுப் புத்தகங்கள் ஆகியவை தயாரிக்கப்பட்டு தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுகின்றன.

Bauddhaloka Mawatha, Colombo 07, Sri Lanka